DARUL ISLAM FOUNDATION TRUST

# வைகறை வெளிச்சம்

ஆசிரியர் **மு.குலாம் முஹம்மத்**

Volume-16
Issue-1

ஜனவரி-2023 (ஜமாதுல்ஆகிர்-1444)

விலை ரூ. **40 /-**



## அரசு காப்பகங்களிலிருந்த

# காந்தி கொலை

## குறித்த ஆவணங்கள் அழிக்கப்பட்டனவா?

## பாசிசமும் வெளிநாட்டுப் பணமும்

### வெளிச்சத்திற்கு வர வேண்டிய வேடதாரிகள்




## போலி NIA அதிகாரிகளாக பா.ஜ.க.வினர்

### பொதுமக்கள் உஷார்

**முஃமின்களே! நியாயத்தை நிலை நாட்டுவதற்காக அல்லாஹ்வுக்கு நீங்கள் உறுதியான சாட்சியாக இருங்கள், எந்த ஒரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள வெறுப்பு நீதி செய்யாமலிருக்க உங்களைத் தூண்ட வேண்டாம். நீதி செய்யுங்கள்; இதுவே (தக்வாவுக்கு) - பயபக்திக்கு மிக நெருக்கமாகும்; அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை(யெல்லாம் நன்கு) அறிந்தவனாக இருக்கின்றான்.**

(5:08)


அரசு காப்பகங்களிலிருந்த காந்தி கொலை குறித்த ஆவணங்கள் அழிக்கப்பட்டனவா? - 4

“நாதுராம் கோட்சே” ஆர்.எஸ்.எஸ்.... என் சகோதரன்தான் - கோபால் கோட்சே பேட்டி - 11

குண்டு வைத்தேன் நான்..! - 13

சமூக ஊடங்களில் பதியப்படும் தேசத்துரோக வழக்குகள்-01 - 14

இந்தியாவில் முஸ்லிம்கள் தொடர் - 24

முஃப்தாஹ் அல்கானி முதல் மனிதரல்ல.! எங்களுக்கு நீண்டப் பட்டியல் உண்டு.!! - 28

சமுதாயத்தை பிளவுபடுத்திய வஞ்சகக் குழுக்கள் -31

போலி NIA அதிகாரிகளாக பா.ஜ.க.வினர் பொதுமக்கள் ஜாக்கிரதை - 34

என்.ஐ.ஏ. ஒரு சமுதாயத்திற்கு (முஸ்லிம்) எதிரானதா? - வைகோ கேள்வி! - 36

பாசிசமும் வெளிநாட்டுப் பணமும் வெளிச்சத்திற்கு வர வேண்டிய வேடதாரிகள் - 37

பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள் - தொடர் - 44

தலையங்கம் - 50

சிலுவைப் போர் 2.0 - 61

வழக்கறிஞர் கமருதீன் அவர்களுடன் ஒரு நேர்காணல் - 54

குழந்தை வளர்ப்பு - 58

மருத்துவம் - 60

மகளிர் மன்றம் - 64



# வைகறை வெளிச்சம்

ஜனவரி-2023 (ஜமாதுல்ஆகிர்-1444)

ஆசிரியர்

**மு.குலாம் முஹம்மது,M.A.,**
**Journalism & Communication**

துணை ஆசிரியர்

**கே.எம்.இல்யாஸ் ரியாஜி,M.A.,**



All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts Only



http:/www.facebook.com/vaigaraivelicham


**தனி இதழ்: ரூ.40/-**
**ஆண்டுச் சந்தா**
**உள் நாடு: ரூ.480/-**
**வெளி நாடு: ரூ.5000/-**

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
**DARUL ISLAM FOUNDATION TRUST**
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

**VAIGARAI VELICHAM**
52/1, Mannady Street, Room# 07, Mannady, Chennai - 600001.
+91 81481 29887 | Email: darultrust@yahoo.com |
Web: www.darultrust.in

## சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாத செயல்

# அரசு காப்பகங்களிலிருந்த காந்தி கொலை குறித்த ஆவணங்கள் அழிக்கப்பட்டனவா?



இன்றைய பாசிஸ்ட்டுகள் 2014 மே மாதம் ஆட்சிக்கு வந்தார்கள். ஜூன்மாதமே தங்கள் பாசிச வேலைகளைக் காட்டிவிட்டார்கள்.

மகாத்மா காந்தி அவர்கள் படுகொலை செய்தது பற்றிய ஆவணங்களை அப்புறப் படுத்தி விட்டார்கள் என்பது நீதிக்காகப் போராடியவர்களின் கருத்து.

11.100 கோப்புகள் அரசு ஆவணக் காப்பகத்திலிருந்து அகற்றப்பட்டுவிட்டன என்பது மட்டும் உறுதியாகிவிட்டன. அவை எரிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அவற்றில் காந்திஜி கொலைத் தொடர்பான கோப்புகளும் உண்டு. ஆனால் அதை துல்லியமாகத் தெரிந்துகொள்ள எடுத்த முயற்சிகளை நமது மத்திய உள்துறை பிசுபிசுக்கச் செய்துவிட்டது.

அந்த முயற்சியை இங்கே இப்படிப் பதிவு செய்கின்றோம். உண்மை ஒருநாள் வெளியே வரும். அது உண்மையின் தனித் தன்மை. சிலரை பலநாள் ஏமாற்றலாம். பலரை சிலநாள் ஏமாற்றலாம்.

ஆனால், எல்லாரையும் எல்லா நாளும் ஏமாற்றிட இயலாது. இதனை பாசிஸ்ட்டுகள் உணர்வார்களா?



EDITION IN | CHENNAI 27°C THE TIMES OF INDIA

India | Coronavirus Outbreak | Opinions And Features | Times Evoke | Maharashtra | Delhi | Karnataka | Tamil N...

NEWS / INDIA NEWS / Files On Gandhi Among 1.5 Lakh Destroyed On Modi's ...

THIS STORY IS FROM JULY 10, 2014

**Files on Gandhi among 1.5 lakh destroyed on Modi's order: CPM**

TNN / Updated: Jul 10, 2014, 00:36 IST

SHARE | AA

ARTICLES

Files on Gandhi among 1.5 lakh destroyed on Modi's order: CPM

Own the all-new Samsung Galaxy M04 with superfast 8GB...

Canara Bank decides to play gynaecologist, sparks outrage

No Centre nudge to quit, says Dikshit

TOI

NEW DELHI: CPM leader P Rajeeve on Wednesday claimed in Rajya Sabha that the home ministry had destroyed over 1.5 lakh crucial files on the instruction of Prime Minister Narendra Modi, triggering uproar and adjournment of the House proceedings.

Citing media reports, he alleged that instructions to destroy the files were given by the PM immediately after taking oath.

### செய்தி விளக்கம்

காந்தி படுகொலை குறித்த ஆவணங்கள் அழிக்கப் பட்டதற்கான. ஆதாரங்கள், நமது நாடாளுமன்றம் மன்றத்தில் நடந்த விவாதம், சமூக ஆர்வலர்கள், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ், தகவல்களைப் பெற்றிட எடுத்த முயற்சி, அதை அரசு தட்டிக்கழித்தது. இவையெல்லாம் இனிவரும் தலைமுறையினருக்கு



vaigarai velicham official

காந்தி படுகொலை குறித்த ஆவணங்கள் அழிக்கப்பட்டுவிட்டனவா? இப்படி ஒரு அதிர்ச்சியும், பதட்டமும் சூழ்ந்த கேள்வியை இந்தியாவின் மீது அக்கறை கொண்ட பலர் எழுப்பி வருகின்றனர்.

ஆம்! 2014 ஜூலை 9ம் தேதி பாராளுமன்றத்தில் ஒரே பரபரப்பு. பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் (CPM leader P Rajeeve), இந்தியாவின் வரலாற்று மதிப்புமிக்க கோப்புகளை அழித்தது குறித்து அன்றைய தினம் வெளியான செய்திகளை குறித்த பிரச்சனையை எழுப்பியது நமக்கு நினைவிருக் கலாம். இந்தக் கோப்புகள் அழிக்கப்பட்டதாகக் கூறி மேலும் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் கவலையை வெளிப்படுத்தியிருந்தனர்.

இதன் எதிரொலியாக, மத்தியச் சட்ட மற்றும் நீதித்துறை அமைச்சர், "இந்தியாவின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த எந்த கோப்புகளும் அழிக்கப்படவில்லை என்று மறுத்தார்." அடுத்த இரண்டு நாட்களுக்கு பிறகு ஜூலை 11 அன்று, மத்திய உள்துறை அமைச்சர், "வரலாற்று முக்கியத் துவம் வாய்ந்த எந்த கோப்புகளும் அழிக்கப்பட வில்லை" என்று மறுத்து சபையில் அறிக்கை வெளியிட்டார்.

அந்த அறிக்கையில், "2014 ஜூன் முதல் ஜூலை வரையிலான காலக்கட்டத்தில், அனைத்து துறைகளின் செயலாளர்களுக்கும் பிரதமரின் உத்தரவின்படி, குறிப்பெடுக்காத (அதாவது எதை அழிக்கிறோம் என்றே தெரியாத) ஆவணங் களைக் கொண்ட 11,100 கோப்புகள் அழிக்கப் பட்டதாக அவர் தெரிவித்தார்."

இந்த சம்பவம் நாடு முழுவதும் ஒரு சலசலப்பை ஏற்படுத்தியது. அழிக்கப்பட 11,100 கோப்புகள் என்னென்ன? அதில் "காந்தி படுகொலை" போன்ற முக்கியமான கோப்புகள் எல்லாம் இருந்தனவா? அதுகுறித்த விவரங்கள் என்ன? என்றெல்லாம் கேள்விகளை எழுப்பினர்.



இந்த நிலையில் புருஷோத்தம் அகர்வால் என்பவர் இந்த கோப்புகள் அழிக்கப்பட்ட விவகாரம் குறித்து தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 (ஆர்டிஐ சட்டம்)கீழ் சில தகவல்களை கேட்டு சமர்பித்திருந்தார்.

அதற்கு அளிக்கப்பட்டிருந்த பதில்கள் மேற்கண்ட நமது சந்தேகத்தினை இன்னும் அதிகமாக்கும் அளவில் உள்ளது. அவர் கேட்ட தகவல்களும், அதற்கு அளிக்கப்பட்டிருந்த பதில் களையும் அப்படியே இங்கே தருகின்றோம்,

உங்கள் அமைச்சகத்தால் அழிக்கப்பட்ட 11,100 கோப்புகள் மற்றும் பதிவுகள் ஒவ்வொன் றின் விஷயத்தையும் உள்ளடக்கிய பட்டியலின் தெளிவான புகைப்பட நகல் மற்றும் அவற்றின் வகைப்பாடு பற்றிய தெளிவான குறிப்பு (அதாவது 'A', 'B' மற்றும் 'C') அத்தகைய அழிப்புக்கு முன் அவர்களுக்கு வழங்கப்பட்டதா?

**பதில்:** அழிக்கப்பட்ட கோப்புகளின் பட்டியல் தொகுக்கப்பட்டுள்ளது. தேவையான கட்டணத்தை செலுத்துவதன்மூலம் நீங்கள் அதை பெற்றுக்கொள்ள முடியும். நீங்கள் விரும்பினால் எங்களுக்கு எழுதலாம்.

உங்கள் அமைச்சகத்திலிருந்து ஆவணங்களை அழிக்க அங்கீகாரம் அளித்த நபர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் பதவிகள்? (பெயர்கள் தேவையில்லை)

**பதில்:** கேபினட் செயலாளரிடமிருந்து 05.06.2014 தேதியிட்ட கடிதத்தின் நகல் இணைக் கப்பட்டுள்ளது.

மத்திய செயலகத்தின் அலுவலக நடைமுறை கையேட்டின் விதி 113ன் கீழ் கூறப்பட்டுள்ளபடி, ஆவணங்களை அழிக்கும் நேரத்தில் இருந்த தேசிய ஆவணக் காப்பகத்தின் பிரதிநிதிகள் மற்றும் அவர்களின் பதவிகள்? (பெயர்கள் தேவையில்லை)

**பதில்:** (மேலே உள்ள பதில் இதற்கு பொருந்தும்).

பொது பதிவு விதிகள், 1997 விதி 9(4)ன் படி, டரக்டர் ஜெனரல் காப்பகத்திடம் சமர்பிப்பதற் காக உங்கள் அமைச்சகத்தால் தயாரிக்கப்பட்ட சமீபத்திய பதிவேடுகளின் அரையாண்டு அறிக்கையின் தெளிவான நகல்?

**பதில்:** இந்திய தேசிய ஆவணக் காப்பகத் திற்கு அத்தகைய அறிக்கை எதுவும் அனுப்பப்பட வில்லை.

ரகசியம், உயர் ரகசியம், நம்பிக்கை வாய்ந்த தகவல்கள் என்று பொருள்வாரியாக வகைப்

படுத்தப்பட்ட கோப்புகளின் சரியான எண்ணிக் கையை, 1997 பொதுப் பதிவு விதிகளின் விதி 7(3)ன் கீழ் இந்திய தேசிய ஆவணக் காப்பகத்தின் ஜெனரலிடம் ஒப்படைக்கப்பட்டனவா?

**பதில்:** இல்லை.

பாதுகாப்பு வகைப்படுத்தலுக்கு ஏற்ப, ரகசியம், உயர் ரகசியம், நம்பிக்கை வாய்ந்த தகவல்கள் என அழிக்கப்பட்ட கோப்புகள் வகைப்படுத்தப்பட்டனவா?

**பதில்:** இல்லை.

அழிக்கப்பட்ட பதிவுகளை அகற்றும் விதத்தின் தெளிவான விளக்கம், அதாவது எரிக்கப்பட்ட அல்லது துண்டாக்கப்பட்ட கோப்புகளின் எண்ணிக்கை?

**பதில்:** பதிவுத் தக்கவைப்பு அட்டவணை MHAஇன் இணையதளத்தில் கிடைக்கிறது (இணையதளம்: mha.gov.in). இந்த பட்டியல் தேவையான கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

**இந்த பதில்களில் என்ன பிரச்சனை?**

11,100 கோப்புகள் அழிக்கப்பட்ட விவகாரத் தில் மாநிலங்களவையில் உள்துறை அமைச்சர் சமிர்ப்பித்த அறிக்கைகளை விட பொது தகவல் அதிகாரியின் இந்த பதில்கள் தெளிவற்றதாகவும், குழப்பமானதாகவும் உள்ளது. இதுகுறித்து புருஷோத்தம் அகர்வால் கூறும்போது,

“11,100 கோப்புகளை அழித்து ஒரு மாதத்திற்கும் மேலாகியும் கூட, MHAயிடம், “ஒரு விரிவான பட்டியலில், அழிக்கப்பட்ட அனைத்து கோப்புகளின் விவரங்களும் இல்லை. எனது பத்து ஆண்டுகால பொது வாழ்க்கையில், பதிவுகள் மேலாண்மை நடைமுறைகளை சற்று விரிவாகப் பார்த்த பிறகு, மறுபரிசீலனைக்காக கோப்புகளின் பட்டியலைக் கூட தயாரிக்காமல், MHA கோப்புகளை அழிப்பதில் ஈடுபட்டது ஆச்சரியமாக இருக்கிறது.”

“மத்திய செயலகத்தின் அலுவலக நடைமுறை கையேட்டின் (CS-MOP) பத்தி 113இன் படி பதிவுகள் களையெடுக்கப்பட்டதாக உள்துறை அமைச்சர் ராஜ்யசபாவில் தெரிவித்தார்.

பாரா 113(4) கூறுகிறது, பதிவுகள், அறையானது, ஒவ்வொரு ஆண்டும் ஜனவரியில்




காலாண்டுக்கு ஒருமுறை பரிசீலனை மற்றும் அழிக்க/காப்பகப்படுத்துவதற்கு கோப்புகளின் பட்டியலை அனுப்ப வேண்டும் என்று.”

“இப்படியிருக்க அழிக்கப்பட்ட கோப்புகளின் பட்டியல் கூட இன்று வரை தொகுக்கப்பட வில்லை. மேலும் அழிக்கப்பட வேண்டிய கோப்பு களை சரியாகக் கண்டறியும் நடைமுறை பின்பற் றப்படவில்லை என்பதையே இந்த பதில்கள் குறிக்கிறது.”

“மேலும், RTI சட்டத்தின் பிரிவு 4(1)(a) கூறுகிறது, “MHA உட்பட அனைத்து பொது அதிகாரிகளும் தங்கள் காவலில் வைத்திருக்கும் பதிவுகளை அட்டவணைப்படுத்த வேண்டும். கணினிமயமாக்க வேண்டும்” என்று. ஆவணங் களை அழிப்பதற்காக மதிப்பாய்வு செய்யப்பட வேண்டிய கோப்புகளின் ஆரம்ப பட்டியலே MHAயிடம் இல்லை என்றால், எப்படி சரியாக ஆவணங்கள் அழிக்கப்பட்டிருக்கும்?” என்கிறார்.

(CS-MOP விதிகளை இங்கே படிக்கலாம்: http://darpg.nic. in/darpgwebsite cms/Document/ file/CSMOP.pdf.)

ஆவணங்களை அழிக்கும் பணியில் ஈடுபட்ட தாக உள்துறை அமைச்சர் கூறிய 500 அதிகாரிகள்,

பழைய கோப்புகள் வைக்கப்பட்டிருந்த பதிவேடு அறைகள் அல்லது அலமாரிகளுக்கு வெறுமனே நடந்து சென்று ஒவ்வொன்றாக களையெடுக்க ஆரம்பித்தார்களா?

இந்த விவகாரம் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டபோதும், தற்போது தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கோரிக்கை விடுக்கப்பட்டபோதும் இந்த செயல்முறை குறித்த விவரங்களை தெரிவிக்க மறுப்பது அதிர்ச்சியளிக்கிறது.

இந்த விவகாரத்தை மேலும் மோசமாக்குவது என்னவென்றால், "கட்டணம் செலுத்தினால் மட்டுமே தகவல் வழங்கப்படும் என்று MHAஇல் கோரிக்கை விடுக்கப்பட்டு முப்பது நாட்களுக்கும் பிறகு PIO அனுப்பிய பதிலின் துணிச்சல் தான். RTI சட்டத்தின் கீழ், முப்பது நாட்களுக்குப் பிறகு தகவல் கொடுப்பதற்காக PIO கட்டணம் வசூலிக்க முடியாது. முப்பது நாட்களுக்கும் மேலான தேதிக்கு தகவல் வழங்கலை ஒத்தி வைக்கவும் முடியாது.

உள்துறை அமைச்சர், "ஆவணங்களை அழிக்கும் பணியில் 500 அதிகாரிகள் ஈடுபடுத்தப்பட்டனர்" என்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார். ஆனால் அவர்களின் விவரங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. முக்கியத்துவம் வாய்ந்த பதிவேடுகளை அழிப்பதற்காக அதற்கான அந்தஸ்தில் உள்ள அதிகாரிகள் அனுமதிக்கப்படாததால், அத்தகைய அதிகாரிகளின் பதவிகளை மட்டும் நான் கேட்டபோது, தனக்கு தெளிவற்ற பதில்கள் அளிக்கப்பட்டுள்ளதாக புருஷோத்தம் அகர்வால் கூறுகிறார்.

மேலும் அவர் கூறுகையில்,

"கேபினட் செயலாளரின் கடிதத்தின் பாரா(F) விதிகளின்படி, 3 முதல் 4 வாரங்களுக்குள் டிஜிட்டல் மயமாக்கல் உள்ளிட்ட பதிவு கோப்புகளை அகற்றுவதற்கான முழு செயல்முறையும் செய்யப்பட வேண்டும் என்று மட்டுமே கூறுகிறது. இந்தக் கேள்விக்கு PIOவின் பதில் ஒரு விவேகமான பதில் அல்ல. பெயர்கள் ஒருபுறம் இருக்க, கோப்புகளை அழிக்க அனுமதித்த அதிகாரிகளின் பதவிகள் கூட தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் மறுக்கப்படுகின்றன. இந்த அரசுதான் டெல்லியில் ஆட்சியைக் கைப்பற்றியபோது வெளிப்படைத்தன்மைக்கான வாக்குறுதிகளை வாரி கொட்டியது." என்கிறார்.

குடிமக்கள் வரி செலுத்துவோர், அதிகாரிகள் செலவழித்த நேரத்திற்கான சம்பள மசோதாவாக, கோப்புகளை அழிக்க யார் அனுமதித்தார்கள் என்பதை அறிய உரிமை உண்டு.

CS-MOP இன் பாரா 113(2) விதியின்படி இருபத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலான பதிவுகளை தேசிய ஆவணக் காப்பகத்துடன் கலந்தாலோசித்து மதிப்பாய்வு செய்ய வேண்டும். எவ்வாறாயினும், இந்த ஆவண அழிப்பின்போது தேசிய ஆவணக் காப்பகங்கள் கலந்தாலோசிக்கப்படவில்லை என்பதை PIO இன் பதில் சுட்டிக்காட்டுகிறது. எனவே "அழிக்கப்பட்ட பதிவுகள் எவ்வளவு பழைமையானவை?" என்பது ஒரு முக்கியமான கேள்வி. இதற்கு பாராளுமன்றத்திலோ அல்லது தனது தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் விண்ணப்பத்திற்குப் கொடுத்த பதிலிலோ திருப்திகரமாக பதில் சொல்லப்படவில்லை என்கிறார் புருஷோத்தம் அகர்வால்.

மேலும், CS-MOP இன் பாரா 113(7) இன் படி, களையெடுக்கப்படாத 'A' மற்றும் 'B' பதிவுகள் காப்பகத்தின் குறிப்புக்காக அனுப்பப்பட வேண்டும். இந்த பதிவுகள் இருபத்தைந்து வருடங்கள் அல்லது அதற்கும் மேலாக பாதுகாக்கப்பட வேண்டும். இருப்பினும், PIOவின் பதில், 'உயர் ரகசியம்', 'ரகசியம்' அல்லது 'நம்பிக்கை வாய்ந்த தகவல்கள்' என வகைப்படுத்தப்பட்ட எந்தக் கோப்பும் ஜூன்-ஜூலை 2014ல் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு அனுப்பப்படவில்லை என்பதைக் குறிக்கிறது.

குறைந்த ஆயுட்காலம் கொண்ட கோப்புகள் பாதுகாக்கப்பட வேண்டிய வரலாற்று மதிப்புள்ள தகவல்களைக் கொண்டிருக்காமல் இருப்பதனால் காப்பகங்களுக்கு அனுப்பப்பட்டிருக்காது என்பது மட்டும் வெளிப்படையானது. ஜூன்-ஜூலை 2014இல் என்ன அழிக்கப்பட்டது என்பது ஒரு மர்மம். இந்த மர்மத்தை மாநிலங்களவையில் உள்துறை அமைச்சரின் பதிலோ அல்லது PIO இன் பதிலோ தெளிவுபடுத்தவில்லை. என்கிறார்.

இந்த அழிப்பு நடவடிக்கையின் போது எந்த ஒரு அதிமுக்கியமான (அதாவது ரகசியமான) கோப்புகளும் அழிக்கப்படவில்லை என்பதே ஒரே பதில். அங்கேயும் நாம் வெறுமனே MHAவின் வார்த்தைகளைத்தான் ஆதாரமாக எடுத்துக்



மற்றும் காந்தி படுகொலை தொடர்புடையனவா? என்று தெளிவுப்படுத்த வேண்டி மனு.

**பெறுநர்:**

**இந்திய அரசு**

மகாத்மா காந்தியின் படுகொலை உட்பட, உள்துறை அமைச்சகம் 1,50,000 கோப்புகள் மற்றும் வரலாற்று ஆவணங்களை அழிக்கப் பட்டதாகக் கூறப்படும், சம்பவங்களில் உடனடி யாக இந்திய அரசு தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்த வேண்டும் என்று, கீழே கையெழுத் திட்ட இந்திய வரலாற்றின் மாணவர்கள் மற்றும் பிற அக்கறையுள்ள குடிமக்கள் மற்றும் இந்தி யாவின் நண்பர்களாகிய நாங்கள் வலியுறுத்து கிறோம்.

இந்த விவகாரம் குறித்த செய்திகள் எல்லாம் நமக்கு ஒரு கவலையை ஏற்படுத்துகிறது. ஏனெனில் இந்த விலைமதிப்பற்ற வரலாற்று ஆவணங்கள் டிஜிட்டல் முறையிலே அல்லது வேறு ஏதாவது முறையிலோ பாதுகாக்கப்பட் டிருக்க வேண்டும். அரசு அதிகாரிகள், ஆவணங் களை அழிப்பதற்கு முன்பு இந்த வேலைகளை செய்திருக்க வேண்டும். இந்த விவகாரத்தில் அரசு அதிகாரிகள், மற்றும் அமைச்சர்கள் மௌனம் காப்பது எங்களுக்கு அதிர்ச்சியளிக்கிறது.

அறிஞரும், இந்திய யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷனின் (UPSC) முன்னாள் உறுப்பினருமான புருஷோத்தம் அகர்வால் ஜூலை 3 அன்று தாக்கல் செய்த தகவல் அறியும் உரிமைக் கோரிக்கைக்கு, முழுமையான மற்றும் உடனடி யான பதிலை வழங்குமாறு இந்திய அரசு மற்றும் அதன் உள்துறை அமைச்சகத்தை நாங்கள் கோருகிறோம்.

**புருஷோத்தம் அகர்வால்** RTI **மூலம் கேட்ட கேள்விகள் பின்வருமாறு;**

சமீபத்திய செய்தித்தாள் அறிக்கைகளின்படி, கடந்த சில வாரங்களில், அதாவது மே 20, 2014க்குப் பிறகு உள்துறை அமைச்சகம் தொடர் பான ஏராளமான கோப்புகள் மற்றும் ஆவணங்கள் அழிக்கப்பட்டுள்ளன என்பது உண்மையா?

தற்போதுள்ள பதிவின்படி இந்தக் கோப்புகள் மற்றும் ஆவணங்கள் அழிக்கப்பட்டதா?

முக்கியமான கோப்புகள் மற்றும் ஆவணங்கள் கொள்ள வேண்டும்.

கோப்புகளை அழித்த முறைமை பற்றிய புருஷோத்தம் அகர்வாலின் RTI கேள்விக்கு PIOவின் பதில் தெளிவற்றதாக உள்ளது. CS MOPஇன் படி துண்டாக்குதல் அல்லது எரித்தல் மூலம் பதிவுகள் அழிக்கப்பட்டிருக்க வேண்டும். அவரது கேள்விக்கான பதில், 'இரண்டில் ஒன்று' அல்லது 'இரண்டும்' என்பது MHAஆல் உருவாக்கப்பட்ட அழிவு முறையைப் பொறுத்து இருக்க வேண்டும்.

ஆனால் MHA இணையதளத்தைப் பாருங்கள் என்று பதில் அளிக்கப்பட்டுள்ளது. என்னால் MHA இணையதளத்தில் எங்கும் பதிவுத் தக்க வைப்பு அட்டவணையைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

பிரிவு 4(1)(b) RTI கையேடுகளின் கீழ் (iii) (iv) (v) மற்றும் (vi) கீழ் கொடுக்கப்பட்ட 3-4 வரி விளக்கம் குழந்தைத்தனமாக உள்ளது. இருப்பி னும், MHAஇன் இணையதளத்தில் பதிவுத் தக்க வைப்பு அட்டவணையை வாசகர்கள் கண்டால் தயவுசெய்து என்னை எச்சரிக்கவும். இந்த விஷயத்தில் எனது கருத்துக்களை மறுபரிசீலனை செய்கிறேன் என்கிறார் புருஷோத்தம் அகர்வால்.

**கோப்புகளை அழிக்கும் அமைச்சரவை முடிவை எதிர்த்து அறிஞர்கள் மற்றும் கலைஞர் களின் மனு**

புருஷோத்தம் அகர்வால் (மனு அமைப்பாளர்)

அழிக்கப்பட்ட கோப்புகள் மற்றும் ஆவணங்கள் வரலாற்று தொடர்புடையவையா?

அடையாளம் காணப்பட்டு தக்கவைக்கப் பட்டதா?

நிரந்தர இயல்புடைய முக்கியமான கோப்புகள் டிஜிட்டல் முறையில் தக்கவைக்கப் பட்டுள்ளனவா?

நிரந்தர இயல்புடைய முக்கியமான கோப்புகள் மற்றும் ஆவணங்கள் எங்கு அனுப்பப் பட்டன என்பதைத் தெரிவிக்கவும்.

இந்த கோப்புகள் மற்றும் ஆவணங்கள் இந்திய தேசிய ஆவணக்காப்பகம், நேரு நினைவு அருங்காட்சியகம் மற்றும் பிற நூலகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதா?

இந்த முக்கியமான கோப்புகள் மற்றும் ஆவணங்களில் உள்ள தகவல்கள் ஆய்வு மற்றும் ஆராய்ச்சி நோக்கங்களுக்காக எதிர்காலத்தில் மீட்டெடுக்கப்பட வேண்டும் என்றால், ஒருவர் எங்கு செல்ல வேண்டும்?

பதிவேடுகளை அழிப்பதற்கான வழிமுறைகள் இந்திய அரசின் உள்துறை அமைச்சக அதிகாரி களுக்கு வழங்கப்பட்ட உத்தரவின் நகலை மற்றும் கோப்பின் நகலை வழங்கவும்.

**இந்த மனுவில் கையொப்பமிட்டவார்கள்;**

எஸ்.எச். ராசா (ஓவியர், புது தில்லி ஷியாம் பெனகல், திரைப்படத் தயாரிப்பாளர், மும்பை)

காயத்ரி சக்ரவர்த்தி ஸ்பிவக் (கொலம்பியா பல்கலைக்கழகம், நியூயார்க்)

ரொமிலா தாபர் (ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம், புது தில்லி)

ஷெல்டன் பொல்லாக் (கொலம்பியா பல்கலைக்கழகம், நியூயார்க்)

அசோக் வாஜ்பாய் (கவிஞர், புது தில்லி)

திபேஷ் சக்ரபர்த்தி (சிகாகோ பல்கலைக் கழகம் புருஷோத்தம் அகர்வால், வளரும் சமூகங் களின் ஆய்வு மையம் டெல்லி)

ஞானேந்திர பாண்டே (எமோரி பல்கலைக் கழகம், அட்லாண்டா)

சுதிப்தா கவிராஜ் (கொலம்பியா பல்கலைக் கழகம், நியூயார்க் பார்த்தா சாட்டர்ஜி, கொலம்பியா பல்கலைக்கழகம், நியூயார்க்)

கியான் பிரகாஷ் (பிரின்ஸ்டன் பல்கலைக் கழகம்) ஃபிராங்க் கான்லன் (வாஷிங்டன் பல்கலைக்கழகம்)

வசுதா டால்மியா (கலிபோர்னியா பல்கலைக் கழகம், பெர்க்லி பிரான்சிஸ் ராபின்சன், ராயல் ஹோலோவே, லண்டன் பல்கலைக்கழகம்)

லாரன்ஸ் கோஹன் (கலிபோர்னியா பல்கலைக்கழகம், பெர்க்லி)

லாரி பாட்டன் (டியூக் பல்கலைக்கழகம் ராகா ரே, கலிபோர்னியா பல்கலைக்கழகம், பெர்க்லி)

டேவிட் லோரன்சன் (எல் கொலிஜியோ டி மெக்ஸிகோ கோபால் குரு, ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம்)

தாமஸ் ப்ளோம் ஹேன்சன் (ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகம்)

அனியா லூம்பா (பென்சில்வேனியா பல்கலைக்கழகம்)

சுவிர் கவுல் (பென்சில்வேனியா பல்கலைக் கழகம் ஜோயா ஹசன், ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் (ஓய்வு))

ஓம் தன்வி (ஆசிரியர், ஜன்சட்டா, புது தில்லி ஸ்வாதி சட்டோபாத்யாய், கலிபோர்னியா பல்கலைக்கழகம், சாண்டா பார்பரா)

வி.என். ராவ் (எமோரி பல்கலைக்கழகம்)

ஹர்ஜோத் சிங் ஓபராய் (பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகம்)

பிஷ்ணுப்ரியா கோஷ் (கலிபோர்னியா பல்கலைக்கழகம், சாண்டா பார்பரா டேவிட் ஹார்டிமேன், வார்விக் பல்கலைக்கழகம்)

ல்வீர் அரோரா (ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகம் (ஓய்வு)

திலீப் சிமியோன் (புது தில்லி ஜெய்ரஸ் பனாஜி, ஓரியண்டல் மற்றும் ஆப்பிரிக்க ஆய்வுகள் பள்ளி, லண்டன் பல்கலைக்கழகம்)

நிர்மலாங்ஷு முகர்ஜி (டெல்லி பல்கலைக் கழகம் ராம்மனோகர் ரெட்டி, ஆசிரியர், பொருளாதாரம் மற்றும் அரசியல் வார இதழ்)

சுதிர் சந்திரா (இன்ஸ்டிடியூட் ஆஃப் அட்வான்ஸ்டு ஸ்டடீஸ், நான்டெஸ் தபதி குஹா தாகுர்தா, சமூக அறிவியல் ஆய்வு மையம்

ஜுவான் கோல், மிச்சிகன் பல்கலைக்கழகம்)

சுமித் குஹா (டெக்சாஸ் பல்கலைக்கழகம், ஆஸ்டின் பானு பார்தி, தியேட்டர் இயக்குனர் ஜெரால்டின் ஃபோர்ப்ஸ், நியூயார்க் மாநில பல்கலைக்கழகம், ஒஸ்வேகோ)

டீஸ்டா செடல்வாட் (நீதி மற்றும் அமைதிக் கான குடிமக்கள், மும்பை ஜாவேத் ஆனந்த்,)

மிருணாளினி சின்ஹா (மிச்சிகன் பல்கலைக் கழகம் ஆனந்த் டெல்டும்டே, ஜனநாயக உரிமைகள் பாதுகாப்புக் குழு அலோகா பராஷர் சென், ஹைதராபாத் பல்கலைக்கழகம்)

குமார் கேட்கர் (தலைமை ஆசிரியர், டைனிக் திவ்யா மராத்தி)

ஜான் எஸ். ஹாவ்லி (பர்னார்ட் கல்லூரி, கொலம்பியா பல்கலைக்கழகம் பிலிப் லுட்ஜெண் டோர்ஃப், அயோவா பல்கலைக்கழகம்)

லிண்டா ஹெஸ் (ஸ்டான்போர்ட் பல்கலைக் கழகம் பிரான்செஸ்கா ஓர்சினி, ஓரியண்டல் மற்றும் ஆப்பிரிக்க ஆய்வுகள் பள்ளி, லண்டன் பல்கலைக்கழகம்)


துளசி ராம் (ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகம் ஜானகி நாயர், ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம்)

ரூபி லால் (எமோரி பல்கலைக்கழகம்) அக்ஷய் பகயா (இனால்கோ, பாரிஸ்) ராசா மிர் (வில்லியம் பேட்டர்சன் பல்கலைக் கழகம் இந்திராணி சாட்டர்ஜி, டெக்சாஸ் பல்கலைக் கழகம், ஆஸ்டின்) பென் பேர் (பிரின்ஸ்டன் பல்கலைக்கழகம்) கமலா விஸ்வேஸ்வரன் (டெக்சாஸ் பல்கலைக் கழகம்) கீதாஞ்சலி ஸ்ரீ (எழுத்தாளர், புது தில்லி)

சுமன் கேசரி (கவிஞர், புது தில்லி அஷ்வினி தாம்பே, மேரிலாந்து பல்கலைக்கழகம்- கல்லூரி பூங்கா)

சஞ்சய் ஜோஷி (வடக்கு அரிசோனா பல்கலைக்கழகம் ரவி காந்த், வளரும் சமூகங் களின் ஆய்வு மையம், டெல்லி அனன்யா வாஜ்பேயி, வளரும் சமூகங்களின் ஆய்வு மையம், டெல்லி)

வில்லியம் கோல்ட் (லீட்ஸ் பல்கலைக்கழகம்) ஆண்ட்ரூ ஜே (நிக்கல்சன், ஸ்டோனி புரூக்கில்



NEW DELHI: 11,000 files were destroyed as per Prime Minister Narendra Modi's orders to weed out files and papers but none of these related to the assassination of Mahatma Gandhi, Home Minister Rajnath Singh said today.

Singh said this in a suo motu statement in Rajya Sabha two days after CPI-M MP P Rajeev alleged on the basis of media reports that 1.5 lakh files including those relating to the assassination of Mahatma Gandhi were destroyed on directions of the Prime Minister.

He said the files were destroyed after the Prime Minister stressed on improving work culture and hygiene and cleanliness of work place. A Cabinet Secretary instruction had said that "files and papers should be weeded out in accordance with rules of record keeping."

"In accordance with the instructions, the files lying in different sections of the Home Ministry were reviewed and a total of 11,100 files were destroyed during the period June 5-July 8 this year," he said.

"None of the 11,100 files so destroyed, relate to Mahatma Gandhi's assassination. This is also to inform that none of the files destroyed, related to either Rajendra Prasad, Lal Bahadur Shastri or Lord Mountbatten as alleged by the MP," the Home Minister said.

He said 52 files, 67 exhibits and 11,186 papers related to the assassination of Mahatma Gandhi were safe and secure in the national archives.

உள்ள நியூயார்க் மாநில பல்கலைக்கழகம்)

அஜய் ஸ்கரியா (மினசோட்டா பல்கலைக் கழகம் மித்ரா ஷராஃபி, விஸ்கான்சின் பல்கலைக் கழகம், மேடிசன்) சஞ்சம் அலுவாலியா (வடக்கு அரிசோனா பல்கலைக்கழகம்) சுபோ பாசு (மெக்கில் பல்கலைக்கழகம், மாண்ட்ரீல்) அஞ்சலி அரோண்டேகர் (கலிபோர்னியா பல்கலைக்கழகம், சாண்டா குரூஸ்)

இந்த விஷயம் செய்தித்தாள்கள் மற்றும் வலைப்பதிவுகளால் மக்கள் மத்தியில் வைக்கப் பட்ட பின் ஜூலை 12ம் தேதி 2014 அன்று அப்போதைய உள்துறை அமைச்சர் ராஜ் நாத் சிங், “மகாத்மா காந்தி, லால் பகதூர் சாஸ்திரி, மவுண்ட்பேட்டன் உள்ளிட்டோர் தொடர்பான ஆவணங்கள் பத்திரமாக இருப்பதாக” அறிக்கை யளித்தார்.

இருப்பினும், புருஷோத்தம் அகர்வால் 3 ஜூலை 2014 அன்று தாக்கல் செய்த தகவல் அறியும் உரிமைக் கோரிக்கை மனு சரியான பதில்களுக்காக இன்னும் காத்திருக்கிறது. இந்த விவகாரத்தின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, அழிக்கப்பட்ட பதிவுகள் அழிக்கப் படுவதற்கு முன்பு டிஜிட்டல் மயமாக்கப்பட்டதா என்பது எங்களுக்குத் தெரியாததால், எந்த ஆவணங்கள் அழிக்கப்பட்டன என்பதை அரசாங்கம் இன்னும் தெளிவுபடுத்தாததால், நடவடிக்கையின் மீளமுடியாத தன்மையைக் கருத்தில் கொண்டு மேற்கண்ட மனு எழுப்பிய சந்தேகங்கள் இன்னும் தொடர்கின்றது. ■


vaigarai velicham official

**நீங்கள் ஆர்எஸ்எஸ் அமைப்பில் அங்கம் வகித்தவரா?**

நாதுராம் கோட்சே, தத்தாத்ரேயா, நான் மற்றும் கோவிந்த் என நாங்கள் அனைவரும் ஆர்.எஸ்.எஸ் தான். நாங்கள் எங்கள் வீட்டில் வளர்ந்ததை விட ஆர்.எஸ்.எஸ்-ல் வளர்ந்தோம் என்று சொல்லலாம். அது எங்களுக்கு ஒரு குடும்பம்போல் இருந்தது.

**நாதுராம் கோட்சே ஆர்.எஸ்.எஸ்-ல் இருந்தாரா? அவர் அதை விடவில்லையா?**

நாதுராம் கோட்சே ஆர்.எஸ்.எஸ்-ல் பௌதிக் காரியவா (அறிவுசார் தொழிலாளி) ஆகிவிட்டார். ஆர்.எஸ்.எஸ். அமைப்பில் இருந்து விலகியதாக அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். காந்தியின் கொலைக்குப் பிறகு கோல்வால்கரும் ஆர்.எஸ்.எஸ்-ம் பல பிரச்சனைகளில் இருந்ததால் அவர் அவ்வாறு கூறினார். ஆனால் அவர் ஆர்.எஸ்.எஸ்-ஐ விட்டு விலகவில்லை.

நாதுராம் கோட்சேவுக்கும் ஆர்.எஸ்.எஸ்-க்கும் எந்த தொடர்பும் இல்லை என்று அத்வானி சமீபத்தில் கூறினார்.

அப்படிச் சொல்வது கோழைத்தனம் என்று அவரை எதிர்த்துள்ளேன். “போய் காந்தியை படுகொலை செய்” என்று ஆர்.எஸ்.எஸ். தீர்மானம் போடவில்லை என்று சொல்லலாம். ஆனால் நீங்கள் அவரை(கோட்சேவை) மறுக்கவில்லை. இந்து மகாசபை அவரை நிராகரிக்கவில்லை. 1944ல் கோட்சே ஆர்.எஸ்.எஸ். அமைப்பில் பௌதிக் காரியவாவாக இருந்தபோது இந்து மகாசபைப் பணிகளைச் செய்யத் தொடங்கினார்.

**காந்தியை கொல்ல எப்போது திட்டம் தீட்டப்பட்டது?**


நாதுராம் கோட்சே ஹிந்து ராஷ்டிரா என்ற நாளிதழின் ஆசிரியரின் டெலிபிரிண்டரை வைத்திருந்தார். அந்த டெலிபிரிண்டரில், காந்தி மறுநாள் உண்ணாவிரதம் இருக்க முடிவு





# “நாதுராம் கேட்சே” ஆர்.எஸ்.எஸ்.... என் சகோதரன்தான்

## கோபால் கோட்சே பேட்டி



செய்திருப்பதைக் கண்டார். (காஷ்மீரில் பாகிஸ் தானின் ஆக்கிரமிப்புக்கு தீர்வு காணும் வரை, 55 கோடி ரூபாயை பாகிஸ்தானிடம் இருந்து நிறுத்தி வைக்கக் கூடாது என்ற கோரிக்கையை முன்வைத்து இந்த உண்ணாவிரதம் இருந்தது.

பிரிவினைக்குப் பிந்தைய கணக்குகளை இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே தீர்ப்பதன் ஒரு பகுதியாக ரூ.55 கோடி இருந்தது.) இந்த செய்தி நாதுராம் கோட்சேயை தாக்கி யிருக்க வேண்டும். அப்போதே அதற்கு முற்றுப் புள்ளி வைக்க முடிவெடுத்தார். அதுவே திருப்பு முனையாக அமைந்தது. பல இடங்களில் காந்தி கொல்லப்படலாம் என்று மக்களால் பேசப்பட்டது.

மேகங்கள் வானத்தில் கூடியிருப்பதை பார்த்து, அடுத்த 15 நிமிடங்களில் மழை பெய்யும் என்று நாம் எதிர்ப்பார்ப்போம். ஆனால் அப்படி நடக்காது. காற்று வீசும். எந்த பக்கத்திலிருந்து வீசும் என்று நமக்கு தெரியாது. அனைத்து மேகங் களையும் அது இழுத்து சென்றுவிடும். ஒரு மழை பெய்ய என்ன தேவை. அதற்கான தோதுவான வளிமண்டலம்தான். பின்னர் அது நீரின் வடிவில் பூமியில் வந்து விழுகிறது.


அதுபோல ஏதோ ஒரு காற்று வந்து அவர்களை இழுத்து சென்றிருக்கலாம். ஆனால் எல்லாம் ஒழுங்காக அமைந்தபோது "அந்த சதி" அவர்களுக்கு கைகூடியது. சதிகாரர்களை பொருத்தவரையில் அவர்களின் நோக்கமும் நிறைவேறியது.

**(வி.டி.) சாவர்க்கருடன் உங்களுக்கு என்ன தொடர்பு?**


இப்படி ஒரு கேள்வியை கேட்காதீர்கள். நாங்கள் அனைவரும் அவரை எங்கள் குருவாக ஏற்றுக்கொண்டோம். அரசியலில் அவர்தான் எங்களுக்கு குரு. அவரது அனைத்து எழுத்துக் களையும் நாங்கள் படித்தறிந்துள்ளோம். அவரை நாங்கள் முழுமையாக புரிந்துள்ளோம். "அந்த சதியை" நாங்கள் செய்ய வேண்டுமா? என்று அவரிடம் நாங்கள் கேட்பதே முட்டாள் தனத்தின் வெளிப்பாடுதான். பலவீனமானவனுக் குத்தான் குருவின் ஆசி தேவை.

இப்படி நினைத்துப்பாருங்கள், குரு எங்களிடம், "முட்டாளே அப்படியெல்லாம் செய்யாதே" என்று கூறி எங்கள் கைகளை கட்டு கிறார். அந்த நேரத்தில் யாரோ மூன்றாவது நபர் "அந்த சதியை" கச்சிதமாக முடித்துவிட்டார். அப்போது நாங்கள் என்ன சொல்லியிருப்போம்?, "அட ச்சே!! நாங்களும் இதைத்தான் செய்ய நினைத்தோம். நம்ம குரு நம்ம கையை கட்டி விட்டாரே!" என்று சொல்லி புலம்பியிருப்போம். இப்படி நடப்பது நம் பயத்தை மறைத்து குருவை அவமதிப்பதாக இருக்கும். ■

Front Line, 28, January 1994, Extracted from : Beyond doubt, A dossier on Gandhi's Asssination ; Copiled by Teesta Setelvad



# குண்டு வைத்தேன் நான்..!



**ஒரு பக்க கதை**

இரவெல்லாம் ரவி ஷிண்டே மிகவும், மனம் நொந்து போயிருந்தான். தூக்கம் பிடிக்க வில்லை.

காரணம், அராஜக ஜனநாயக கட்சி ஆட்சிக்கு வந்துவிட்டது.

அவனுக்கு எந்த உதவியையும் செய்ய வில்லை. எந்தப் பதவியையும் தரவில்லை.

அவன் நிரம்பவே அதற்காக உழைத்திருக் கின்றான்.

ஆமாம் அவன் பல இடங்களில் குண்டுகளை வைத்து வெடிக்கச் செய்துள்ளான்.

இதற்காக பயிற்சிக் காலங்களில் அவன் தன் உயிரைப் பணயம் வைத்து, பயிற்சி எடுத்திருக் கின்றான்.

குண்டுகள் தயாரிக்கப் பயிற்சி செய்யும் போது சிறிய தவறும் அவனை சிதைத்துப் போட்டிருக்கும்.

குண்டுகளைச் செய்து மக்கள் அதிகமாகக் குழுமும் இடங்களில் வைத்து வெடிக்கச் செய்திருக்கின்றான்.

அவன் வைத்த குண்டுகள் வெடித்துச் சிதறி எல்லா சமுதாயத்தவரும் பிணங்களாக குவிந்த போது, அவனை சோகம் பிடிக்கவில்லை. மாறாக, சாதித்துவிட்டோம், நம்மாலும் முடியும் எனக் காட்டிவிட்டோம் என உள்ளூர மகிழ்ந் திருக்கின்றான்.

இனி ஆட்சி நமது அ.ஜ.கட்சிக்குத்தான் என அங்காலாய்த்திருக்கின்றான்.

இந்த தீவிரவாதத்தை முஸ்லிம்கள்தாம் செய்தார்கள் என ஊடகங்கள் ஓங்கி முழங்கிய போது, அவனுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி.

ஆகா!, அபார வெற்றி, துள்ளிக் குதித் துள்ளான்.

உளவுத்துறை உடனேயே ஒரு முஸ்லிம் அமைப்பின் பெயரைச் சொன்னபோது, சபாஷ். நம்மவர்கள் நன்றாகத்தான் வேலை செய்கின் றார்கள் என மனமாரப் பாராட்டி இருக்கின்றான்.

ஆனால், இப்போது எல்லாம் கெட்டுப் போனது என்ற ஆதங்கம் அவனுக்கு!

தனது குண்டு வெடிப்புகளால் வெற்றி பெற்ற அராஜக ஜனநாயகக் கட்சி, தனக்கு எதுவும் செய்யவில்லை. என்னே துரோகம்? வெறுப்பு, விரக்தியானது! இந்தத் துரோகிகளைக் காட்டிக் கொடுத்து விட வேண்டியதுதான் என முடிவு செய்தான்.

தான் வைத்த குண்டுகளில் பல முஸ்லிம்கள் சிறையிலிருந்தார்கள். அந்த வழக்குகள் இப்போதும் நடந்து கொண்டிருந்தன. அந்த நீதிமன்றங்களில் சென்று, "இவர்கள் அப்பாவிகள் நான்தான் குண்டு வைத்தேன். எனக்கு ஆட்சியிலிருக்கும் இன்றைய அராஜக ஜனநாயக கட்சிகள், இன்றைய தலை வர்கள் தாம் குண்டுகளை வைத்திட ஆணை யிட்டார்கள். அவர்கள்தான் பயிற்சியும் தந்தார்கள். பயிற்சி காலத்தில் நான் ஆட்சி யைப் பிடிக்கத்தான் குண்டு வெடிப்புகள் நடத்தி ஏற்பாடு செய்கின்றார்கள் என்பதை அறிந்திருக்க வில்லை" எனச் சொல்லிவிடுவது.

"அப்பாவி முஸ்லிம்களைக் காப்பாற்றி விடு வது, உண்மையான குற்றவாளிகளைக் காட்டிக் கொடுத்துவிடுவது என முடிவு செய்தான்" இதில் தானே சிக்கிக்கொண்டாலும் பரவாயில்லை எனத் தீர்க்கமாகத் துணிந்தான்.

அவன் வைத்த குண்டுகளின் வழக்கு நடந்த நீதிமன்றம் ஒன்றிற்குச் சென்றான்.

தனது வழக்கறிஞர்கள் வழி ஒப்புதல் வாக்கு மூலம் ஒன்றை தயார் செய்து தயாராக வைத் திருந்தான். ஒரு வழக்கறிஞரும், வக்காலத்து வாங்கிக் கொண்டு வந்தார். நீதிபதி வந்தவுடன் சமர்ப்பித்திட, சைலன்ஸ் என்றொரு சத்தம். நீதிபதி வந்தார், வணக்கம் போட்டார் அமர்ந்தார். ஷிண்டேவால் அங்கே நிற்க முடியாமல் நீதிபதியைக் கண்டவுடன் ஓட்டம் பிடித்தான்.

தப்பித்தால் போதும் என தலை தெறிக்க ஓடினான். ஆமாம்! அவன் குண்டு செய்யும் பயிற் சிக்கு சென்ற இடத்தில் அவரைப் பார்த்திருக் கின்றான். ஷிண்டேக்கு எல்லாமே ஆச்சர்யப் பட்டது. - MGM

(அனைத்தும் கற்பனை - அல்லாமல் வேறில்லை. இவை இன்றைய யதார்த்தங்களோடு ஒத்துப்போயின. நான் பொறுப்பல்ல.)



# சமூக ஊடங்களில் பதியப்படும் தேசத்துரோக வழக்குகள்-01

## ஜுனைதும் பேஸ்புக்கும்

பிப்ரவரி 27, 2019 அன்று மதியம் மத்திய கர்நாடகாவில் உள்ள ஒரு சிறிய கிராமத்தில் கோழிக்கடை உரிமையாளர் ஜுனைத் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) பேஸ்புக் பக்கத்தை திறக்கிறார். 21 வயதான அவர் 15 நாட்களுக்கு முன்புதான் ஸ்மார்ட்போன் வாங்கியுள்ளார். அவருக்கு படிக்கவோ, எழுதவோ தெரியாது.

14 பிப்ரவரி 2019 அன்று ஜம்மு காஷ்மீரின் புல்வாமாவில் 40 வீரர்களைக் கொன்ற தீவிர வாதத் தாக்குதலுக்கு பதிலடியாக, பாகிஸ்தானின் கைபர் பக்துன்க்வா மாகாணத்தில் உள்ள பாலகோட் மீது இந்திய அரசாங்கம் தனது வான்வழித் தாக்குதலை அறிவித்தது.

பதற்றமான சர்வதேச எல்லையில் இருந்து 2,500கிமீ தொலைவில் உள்ள ஜுனைத்தின் கிராமத்தில் இருந்து பலர் இந்திய ராணுவத்தை சமூக ஊடகங்கள் மூலமாக பாராட்டினர். ஜுனைதும் அதையே செய்தார். மதியத்தின் அமைதியான நேரத்தில், தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவிடுவதற்காக வீரர்களின் படத்தைத் தேர்ந்தெடுத்தார்.

படத்தின் கீழே ஆங்கிலத்தில் ஒரு தலைப்பு இருந்தது. அதை அவரால் படிக்க முடியவில்லை.

"I stand with Pakistan Army"

"நான் பாகிஸ்தான் ராணுவத்துடன் நிற்கிறேன்".

15 நிமிடங்களில் நண்பர்கள் ஜுனைத்துக்கு போன் செய்தனர். அவர் பீதியில் அந்த பதிவை நீக்கினார், ஆனால் அவரது பேஸ்புக் செயலின் ஸ்கிரீன் ஷாட்கள் கிராமம் முழுவதும் பரவியது. அடுத்த ஐந்து நிமிடங்களில் போலீஸார் ஜுனைத்-ன் கடைக்கு வந்து அவரை கைது செய்து அழைத்து சென்றனர்.

"இது தவறுதலாக நடந்த ஒன்று" என்று நான் அவர்களிடம் பலமுறை கூறினேன்." என்கிறார் ஜுனைத்.

உள்ளூர் துணை போலீஸ் சூப்பிரண்டு தானாக முன்வந்து (suo moto action) நடவடிக்கை எடுத்திருக்கிறார். ஜுனைத் மீது இந்திய தண்டனைச் சட்டம், 1860 இன் பிரிவு 124A (தேசத்துரோகம்) மற்றும் பிரிவு 153 (கலவரத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் தூண்டுதல்) ஆகியவற்றின் கீழ் குற்றம் சாட்டப்பட்டது.

அன்று மாலையிலேயே அவரது கோழிக் கடை எரிக்கப்பட்டது. அவரது குடும்பம் கடனில் தள்ளப்பட்டதால், அவர் நான்கு மாதங்கள் மற்றும் 10 நாட்கள் சிறையில் கழிக்க நேரிட்டது.

பின்னர் அவர் தனது கிராமத்திற்குத் திரும்பிய போது "அவர் ஒரு தேசத்துரோகி" என்று அழைக்கப்பட்டார். கர்நாடக காவல்துறையின ரால் மாநிலம் முழுவதும் கைது செய்யப்பட்ட வினோதமான வழக்குகளில் ஜுனைத் வழக்கு முதன்மையானது.

இரண்டு நாட்களுக்குப் பிறகு, அதே காவல் நிலையத்தைச் சேர்ந்த போலீஸார், 15 கி.மீ தொலைவில் உள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்த, 21 வயதுடைய இந்துக் கடைக்காரரை, பாகிஸ்தான் ராணுவ வீரர்களின் படத்தைப் பதிவிட்டதற்காக கைது செய்தனர்.

அதேபோல் பக்கத்து அதிகார வரம்பில் உள்ள காவல்துறையினர் 28 வயது ஆடுகளை மேய்க்கும் இந்து இளைஞர் ஒருவரை கைது செய்தனர். மேலும் அங்கிருந்து 100 கிமீ தொலைவில் உள்ள நகரத்திற்கு குடிபெயர்ந்த 42 வயது தினசரி கூலித் தொழிலாளி ஒருவரையும் கண்டுபிடித்து அதே புகைப்படத்தை அதே தலைப்புடன் வெளியிட்டதற்காக கைது செய்த னர். மேலும் 70 கிலோமீட்டர் தொலைவில் உள்ள 32 வயது எலக்ட்ரீசியன் ஒருவர் கைது செய்யப்பட்டார். மேலும் 200 கிமீ தொலை வில், தெற்கு பெங்களூருவின் நெரிசலான தெருக் களில், 32 வயதான பேக்கரி கடை ஊழியர் மீது தேசத்துரோக வழக்கும் பதிவு செய்யப்பட்டது. ஜுனைத் செய்த அதே தவறை இவர்களும் செய்துள்ளனர்.

பார்ப்பதற்கு இது ஒரு ஒருங்கிணைந்த காவல்துறையின் நடவடிக்கையாகத் தோன்றி னாலும் ஒவ்வொரு வழக்கிலும் கைது நடவடிக் கைகளை மேற்கொண்ட அதிகாரிகள் மற்ற வழக்குகளைப் பற்றி அறிந்திருக்கவில்லை. குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கும் ஒருவரை யொருவர் தெரியாது. அவர்களில் யாருக்கும் ஆங்கிலம் படிக்கத் தெரியாது. ஆனால் அவர்கள் அனைவரும் ஒரே குற்றத்தில் குற்றம் சாட்டப் பட்டனர். அது, "பாகிஸ்தானை ஆதரிக்கும் ஆங்கிலத் தலைப்புடன் சுயவிவரப் படத்தை வெளியிடுதல்."

1870இல் காலனித்துவ நிர்வாகத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட இந்திய தேசியவாதிகள் மற்றும் புரட்சியாளர்களுக்கு எதிராகத் தூண்டப் பட்ட தேசத்துரோகத்திற்கு எதிரான கடுமையான சட்டத்தின் கீழ் அனைவரும் குற்றம் சாட்டப் பட்டுள்ளனர். 2010 முதல் 2021 வரை கர்நாட காவில் 204 நபர்களுக்கு எதிராக 53 தேசத்துரோக வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஜனவரி 2010 மற்றும் பிப்ரவரி 2021 க்கு இடையில் பதியப்பட்ட அனைத்து தேசத் துரோக வழக்குகளையும் பதிவு செய்ய பல ஊடகங்கள், சட்டம் மற்றும் காவல்துறை ஆதாரங்களை ஆராய்ந்த ARTICLE - 14 தரவுத் தளத்தின்படி, சமூக ஊடக தளங்களில் தங்கள் பதிவுகளை வெளியிட்டதற்காக 46 நபர்களுக்கு எதிராக 20 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

சமூக ஊடகங்களில் ஏதேனும் பதிவுகளை பகிர்ந்ததற்காக அல்லது தங்களது கருத்துகளை சொன்னதற்காக தேசத்துரோக வழக்குகள் பதியப்பட்டவர்களின் எண்ணிக்கையில் கர்நாடகா இந்தியாவிலேயே முதலிடத்தில் உள்ளது.

உத்திரப் பிரதேசமும் கர்நாடகாவிற்கு சளைத்ததில்லை என்பதுபோல் உத்தரப் பிரதே சத்தில் 40 பேருக்கு எதிராக 32 வழக்குகள் பதியப்பட்டுள்ளன.

இந்தியா முழுவதும், ஆடியோக்கள், புகைப் படங்கள் அல்லது வீடியோக்களை உருவாக் கியதற்காக அல்லது சமூக ஊடகங்களில் பதிவு களைப் பகிர்ந்ததற்காக 152 பேர் மீது 102 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதை ARTICLE - 14 தரவுத்தளம் வெளிப்படுத்துகிறது.

இவற்றில் 55.9% வழக்குகள் கர்நாடகா மற்றும் உ.பி.யில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இணையப் பயன்பாட்டின் அதிகரிப்பால், தனிப்பட்ட எண்ணங்களை பொதுவில் சொல்ல விரைகின்ற பொதுமக்களுக்கு முன் இப்படிப்பட்ட சவால்கள் வந்துள்ளன. மேலும் பல்வேறு வகையான ஆன்லைன் விமர்சனங்கள் தேசத் துரோகமாக காவல்துறையால் அதிகளவில் கருதப்படுகின்றன.

**சமூக ஊடகத் துரோக வழக்குகள்: Facebook முன்னணி**

கைபேசிகள் மற்றும் டேட்டாவின் விலைகள் சரிவடைந்ததால், ஸ்மார்ட்போன் பயன்பாடு மற்றும் இணையதள பயன்படுத்துதல் ஆகிய வற்றில் இந்தியா ஏற்றம் கண்டுள்ளது. 2010ம்

ஆண்டில், இந்தியாவில் 92 மில்லியன் இணைய பயனர்கள் இருந்தனர். 2020ம் ஆண்டில், இந்த எண்ணிக்கை 687 மில்லியனைத் தாண்டியது. கிட்டத்தட்ட 650% வளர்ச்சி. கிராமப்புறங்களில் இணையத்தைப் பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை நகர்ப்புற இந்தியாவில் இருந்து அணுகுபவர்களை விட அதிகமாக உள்ளது.

2020ம் ஆண்டில், Whatsapp-ஐ 530 மில்லியன் இந்தியர்களும், Facebook-ஐ 448 மில்லியன் இந்தியர்களும் பயன்படுத்தியுள்ளனர்.


நாடு முழுவதும் தேசத்துரோக வழக்குகளில் பேஸ்புக் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. ஃபேஸ்புக் பயன்படுத்தியதற்காக 84 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று Article-14 இணைய தளம் கண்டறிந்துள்ளது. நாடு முழுவதும் ஆன்லைன் செயல்பாட்டிற்காக கைது செய்யப் பட்டவர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் பேஸ்புக் பயனாளிகள் தாம்.

36 தேசத்துரோக வழக்குகளில், குற்றம் சாட்டப்பட்டவர்கள் வாட்ஸ்அப் செய்திகளை உருவாக்கி அனுப்பியுள்ளனர். மேலும் சிலர் வாட்ஸ்அப் குழுக்களின் அட்மின்களாக இருந்துள்ளனர். இந்த வழக்குகளில் பலவற்றில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் கிராமப்புற பின்னணியைச் சேர்ந்த ஏழை மக்கள் அல்லது மாணவர்கள். பேஸ்புக் போலவே ட்விட்டர் பதிவுகளும் 31 தேசத்துரோக வழக்குகளுக்கு வழிவகுத்தன.

இந்த வழக்குகளில் தேசத்துரோகச் சட்டத்தைப் பயன்படுத்துவது 1962ம் ஆண்டு கேதார் நாத் சிங் VS பீகார் மாநிலம் மற்றும் 1995ம் ஆண்டு பல்வந்த் சிங் & பூபிந்தர் சிங் VS பஞ்சாப் மாநிலம் ஆகியவற்றின் உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளை மீறுகிறது. இந்த வழக்குகளில், "தனிநபர்களின் கோஷங்கள் வன்முறையைத் தூண்டாத நிலையில் தேசத்துரோகச் சட்டத்தைப் பயன்படுத்த முடியாது" என்று நீதிமன்றம் தெளிவுபடுத்தியது.

தற்செயலாகவோ அல்லது வேறு விதமாகவோ வெளியிடப்படும் பாகிஸ்தானுக்கு ஆதரவான செய்தி, அரசுக்கு எதிராக வன்முறையைத் தூண்டி விடாது.

31 மே 2021 அன்று, நீதிபதி டி.ஒய் தலைமை




யிலான மூன்று நீதிபதிகள் கொண்ட ஆமர்வில், விமர்சகர்கள், பத்திரிகையாளர்கள், சமூக ஊடகப்பயனர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் குடிமக்களுக்கு எதிராக தேசத்துரோகச் சட்டம் கண்மூடித்தனமாகப் பயன்படுத்தப்படுகிறது என்று சந்திரசூட்" சுட்டிக்காட்டினார். மேலும் "தேசத்துரோகத்தின் வரம்புகளை வரையறுக்க வேண்டிய நேரம் இது" என்றும் நீதிபதி சந்திரசூட் கூறினார்.

2014க்குப் பிறகு தேசத்துரோக வழக்குகள் எப்படி அதிகரித்தன. பத்தாண்டுகளில் கர்நாடகாவில் தேசத்துரோக வழக்குகளில் 47 வழக்குகள் (அல்லது 88%) பிரதமர் நரேந்திர மோடி பதவியேற்ற 2014க்குப் பிறகு பதிவு செய்யப்பட்டவை.


vaigarai velicham official

பேச்சு சுதந்திரம் மற்றும் கருத்து சுதந்திரங்களை பயன்படுத்தி ஆளும் கட்சிக்கு எதிராக, எதிர் கட்சியினர், சமூக ஆர்வலர்கள், எழுத்தாளர்கள், பேச்சாளர்கள் போன்றவர்கள் எழுதியும் பேசியும் வருகின்றனர்.

ஆனாலும் இந்த குற்றச்சாட்டுகளை யெல்லாம் தற்போதைய பாசிச அரசு ஒரு பொருட்டாகவே எடுத்துக்கொள்வதில்லை. மேலும் இதுபோன்ற கருத்துகளெல்லாம், பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்கும், பொது அமைதியை குலைக்கும், நாட்டிற்கு எதிரான கருத்துகளாக அரசாங்கத்தால் பார்க்கப்படு கிறது.

அரசிற்கு எதிரான இதுபோன்ற கருத்துகளை தடுக்க அல்லது பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் வகையிலான கருத்துகளை நீக்குவது குறித்த ஓர் ஒப்பந்தம் நடைமுறையில் உள்ளது. அந்த அடிப்படையில் பிரிவு 69Aவின் கீழ் இந்த கோரிக்கைகள் வைக்கப்படுகின்றன.

ஒரு மாதத்திற்கு சுமார் 500 முதல் 600 பதிவுகளை நீக்குமாறு சமூக ஊடகங்களுக்கு அரசு கட்டளையிடுகிறது.

இதுபோன்ற சமூக ஊடகங்களின் கணக்கு களை முடக்குவதற்கான கோரிக்கைகளை தயார் செய்வதற்கு ஒரு குழு செயல்பட்டுவருகிறது. அந்த குழுதான் ஒவ்வொரு மாதமும் இந்த கோரிக்கைக்கான பட்டியலை தயார் செய்கிறது.

அந்த குழுவில், தகவல் தொழிநுட்ப அமைச்சகங்களின் அதிகாரிகள், உள்துறை அதிகாரிகள், சட்ட வல்லுநர்கள், தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சக அதிகாரிகள் மற்றும் CERT-Computer Emergency Response Team அதிகாரிகள் போன்றோர் உள்ளனர்.

இவைகளல்லாது, இன்னும் வேறுசில தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களும் உள்ளன.

பெரும்பாலும் தீவிரவாதம், ஜம்மு கஷ்மீர் தகவல்கள், பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கு எதிராக வரும் செய்திகள் அல்லது இந்தியாவி லிருந்து பாகிஸ்தானுக்கு ஆதரவான செய்திகள் போன்றவைகளை வெளியிடும் கணக்குகளை யும், பதிவுகளையும்தான் நீக்க வேண்டி கோரிக்கைகள் வைக்கப்படுகின்றன. ■

- TOI 29/12/2022

*மொத்தம் 816 தேசத்துரோக வழக்குகளில் கிட்டத்தட்ட 11,000 சம்பந்தப்பட்ட நபர்களை பதிவு செய்துள்ளது Article - 14 தரவுத்தளம். இது தேசிய அளவிலான சராசரியில் 65% அதிகமாகும்.*

*கட்டுரையில் ஆரம்பத்தில் குறிப்பிட்டுள்ள ஜுனைத் மற்றும் பிறரைப் போலவே, பிப்ரவரி 2019ல் புல்வாமா பயங்கரவாத குண்டுவெடிப்பு மற்றும் ஜனவரி 2020ல் குடியுரிமை திருத்தச் சட்டம் (CAA) 2019க்கு எதிரான போராட்டங்கள் போன்ற சில நிகழ்வுகளைச் சுற்றி தேசத்துரோக வழக்குகள் பதியப்பட்டுள்ளன.*

*கர்நாடகாவில் புல்வாமா தாக்குதலுக்குப் பிறகு 29 தேசத்துரோக வழக்குகள் பதிவாகி யுள்ளன.*

*"பாகிஸ்தானுக்கு ஆதரவான" அல்லது "அரசுக்கு எதிரான" செய்திகளை சமூக ஊடகங் களில் குறிப்பாக வாட்ஸ்அப் மற்றும் ஃபேஸ் புக்கில் பதிவிடுபவர்களுக்கு எதிரான தேசத் துரோகப் வழக்குகளின் எண்ணிக்கைகள் பெருமளவில் அதிகரித்துள்ளது.*

**வழக்கு போடுவதுதான் எங்கள் வேலை**

*Article - 14 தளம், இந்த வழக்குகளில் பல வற்றில் கைது நடவடிக்கைகளை மேற்கொண்ட காவல்துறை அதிகாரிகளிடம், "சமூக ஊடகங் களில் பதிவிடும் கருத்துகளுக்காக தேசத்துரோக குற்றச்சாட்டுகளை சுமத்துவதற்கான முடிவுக்கு நீங்கள் எப்படி வந்தீர்கள்?" என்று கேட்க முயற்சித்தது.*

*வழக்குப்பதிவு செய்த பல போலீசார் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.*

*மத்திய கர்நாடகாவில் உள்ள இரண்டு காவல் நிலையங்களில், ஐந்து தேசத்துரோக வழக்குகள் பதியப்பட்ட நிலையில், இந்தியாவுக்கு எதிரான செய்திகள் "கண்டிப்பான" முறையில் கட்டுப்படுத் தப்படுவதை உறுதிசெய்வது தங்கள் "கடமை" என்று போலீசார் தெரிவித்தனர்.*

*"இந்தச் செய்திகள் கிராம மக்களிடையே பரவி சில துயரங்களை ஏற்படுத்தியது. நாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது," என்று ஒரு நிலையத்தின் காவல்துறை அதிகாரி கூறினார். அவர் மூன்று தேசத்துரோக வழக்குகளில் 'விசாரணை'யில் ஈடுபட்டார். புல்வாமா தாக்கு தலுக்குப் பிறகு மக்கள் மத்தியில் "மிகவும் கோபம்"*

ஏற்பட்டது என்றார். "எந்த வகையான பாகிஸ்தானுக்கு ஆதரவான செய்திகள் அனுப்பப்படுவதையோ அல்லது தண்டிக்கப்படாமல் விடப்படுவதையோ நாங்கள் விரும்பவில்லை." என்றார்.

அப்போது எந்த வகையான வழக்கு பதிவு செய்வது என்பது குறித்து சிறிது நேரம் ஆலோசிக்கப்பட்டது. இறுதியில், பாகிஸ்தானுக்கு ஆதரவான செய்திகள் தேசத்துரோகக் குற்றச்சாட்டை உறுதி செய்கிறது என்று "நாங்கள் முடிவெடுத்தோம்".

கேதார் நாத் சிங் எதிராக தேச துரோக வழக்குகளை பதிவு செய்தது தொடர்பான உச்ச நீதிமன்ற தீர்ப்புகள் குறித்து கேட்கப்பட்ட போது, பீகார் மாநிலத்தின் ஒரு காவல்துறை அதிகாரி இப்படி பதிலளித்தார்: "அவர்கள் நிரபராதிகளா அல்லது தேசத்துரோக குற்றவாளிகளா என்பதை நீதிமன்றங்கள் தீர்மானிக்கட்டும். புகார் வந்தால் வழக்குப் பதிவு செய்வதுதான் எங்கள் வேலை"

## கல்வியறிவற்றவர்களின் விலையுயர்ந்த டிஜிட்டல் தவறுகள்

Article - 14 தளம், கர்நாடகா முழுவதும் 32 தேசத்துரோக வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மற்றும் அவர்களது வழக்கறிஞர்களைத் தொடர்பு கொண்டது. ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் அவர்களின் வீடுகளுக்குச் சென்று 25 வழக்குகளில் விரிவான நேர்காணல்கள் நடத்தியுள்ளது.

Article - 14 தளம், குற்றம் சாட்டப்பட்டவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகளை சில சந்தர்ப்பங்களில் அவர்களின் கோரிக்கையின் படியும், எல்லா சந்தர்ப்பங்களிலும் அவர்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு வெளியிடாமல் வைத்திருக்கிறது.

கர்நாடகாவில், சமூக ஊடகங்கள் தொடர்பான 20 தேசத்துரோக வழக்குகள் ஒன்பது கிராமப்புற இணைய பயனர்கள் மேல் போடப்பட்டது.

பெரும்பாலானவர்கள் முதல் முறையாக ஸ்மார்ட்போன் பயன்படுத்துபவர்கள். உள்ளூர் மொபைல் கடை ஊழியர் இவர்களில் பெரும்பாலானவர்களுக்கு பேஸ்புக், வாட்ஸ்அப் மற்றும் யூடியூப்-ஐ பதிவிறக்கம் செய்து கணக்குகளை துவங்கி கொடுத்துள்ளார். பின்னர் கிராமவாசிகள் பேஸ்புக்கில் 'நண்பர்களாக' சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும் கிராம அளவிலான வாட்ஸ்அப் குழுக்களில் புதிய எண்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

பலர் தங்களுக்கு ஆங்கிலம் மற்றும் கன்னடம் படிக்கத் தெரியாது என்று சொன்னார்கள். அவர்கள் சமூக ஊடகங்களை பயன்படுத்துவதில் கல்வியறிவற்றவர்கள்.

புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை 'லைக்' செய்ய அல்லது பகிர அவர்கள் பெரும்பாலும் பேஸ்புக்கைப் பயன்படுத்துகின்றனர். மேலும் வாட்ஸ்அப் செயலி படங்கள் மற்றும் ஆடியோ செய்திகளைச் அனுப்புவதற்காகவே பயன்படுத்துகிறார்கள்.

மத்திய கர்நாடகாவில் சமூக-பொருளாதார ரீதியாக பின்தங்கிய குருபா சமூகத்தைச் சேர்ந்த 28 வயதான பசவா (பெயர் மாற்றப்பட்டுள்ளது) கூறுகையில், "நான் ஆடு மேய்க்கும்போது யூடியூப்பில் பாடல்களைக் கேட்கலாம் அல்லது பேஸ்புக்கில் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களைப் பார்க்கலாம் என ஒரு ஸ்மார்ட்போன் வாங்கினேன்" என்கிறார்.

3ம் வகுப்பு வரை படித்த பசவா, பாகிஸ்தான் ராணுவ வீரர்களின் புகைப்படத்தை "பாகிஸ்தானை விரும்புவதாக" பதிவேற்றியதாக "ஒப்புக் கொண்டார்" என்று போலீசார் தங்கள் எஃப்ஐஆரில் கூறியுள்ளனர். இருப்பினும், Article - 14 தளம் காவல் நிலையத்திற்குச் சென்றபோது, பசவா "அப்பாவி" மற்றும் "தொழில்நுட்பத்தில் கல்வியறிவு இல்லாதவர்" என்பதால் இது தற்செயலான பதிவாக இருக்கலாம் என்று காவல் அதிகாரிகள் ஒப்புக்கொண்டனர். இருப்பினும் தேச துரோக குற்றச்சாட்டில் நான்கு மாதங்கள் சிறையில் இருந்தார் பசவா.

மாதாந்திர விசாரணைகளுக்காக நீதிமன்றத்திற்கு தொடர்ந்து வரும் பசவா, அவர் என்ன குற்றம் செய்தார் என்றும், எதற்கு இந்த வழக்கு அவர் மீது போடப்பட்டுள்ளது என்றும் அவருக்கு தெரியவில்லை. ஆனால், "நான் ஒரு தேசத் துரோகி இல்லை" என்று மட்டும் எனக்குத் தெரியும், "என்று அவர் கூறிகிறார்.

2018ம் ஆண்டு முதல் சட்டச் செலவுகளை ஈடுகட்ட அவர் வாங்கிய 2,50,000 ரூபாய்க்கு

மதிப்பிலான அவரது "தவறு" அவரது நிலத்தையும், ஆடுகளையும் இழக்கச் செய்துள்ளது.

**பிழைகள் பயங்கரவாதம் என விளக்கப்படுகிறது**

"பாகிஸ்தான் ஜிந்தாபாத்" என்று கூச்சலிடுவது கூட தேசத்துரோகமாக இருக்காது என்று 2020ல் உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி பி.சுதர்சன் ரெட்டி விளக்கினார், ஏனெனில் இந்தியா பாகிஸ்தானை எதிரி நாடாக அறிவிக்கவில்லை. அல்லது தனி நபர் கோஷமிடுவது இந்திய அரசுக்கு எதிரான அச்சுறுத்தலாக இருக்காது. ஆனால் உள்ளூர் காவல்துறையினர் தேசத்துரோகச் சட்டத்தை தாராளமாகப் பயன்படுத்துகிறார்கள்.


24 பிப்ரவரி 2020 அன்று, வடக்கு கர்நாடகாவில், வாடிக்கையாளர் அலுவலகத்தில் காத்திருந்த ஒரு மருந்து விற்பனையாளர் பறவை மீட்கப்பட்ட வீடியோவை பார்க்கிறார். இது அவருக்கு குர்ஆனில் உள்ள சாந்தகுண முள்ளவர்களுக்கு உதவுவது பற்றிய ஒரு சொற்பொழிவை நினைவூட்டியது. அவர் தனது ஃபோனின் ஒலியளவு குறைவாக இருந்த வீடியோவின் பிட்களைப் பார்த்தார். அதைப் பகிர்ந்து கொண்டார். ஒருநாள் கழித்து, போலீசார் அவரை கைது செய்தனர்.

விற்பனையாளர் வீடியோவைப் பார்த்தாரா என்று கேட்டார்கள். அவர் அதை முழுமையாகப் பார்க்கவில்லை. அவருக்காக அந்த வீடியோவை போட்டு காண்பித்தனர்.. "இறுதியில், யாரோ ஒருவர் "அந்த" வார்த்தைகளைச் சொல்வதை நீங்கள் கேட்கலாம்," என்று காவல்துறையினர் கூறுகிறார்கள்.

"பாகிஸ்தான் ஜிந்தாபாத்" (அவர் பேட்டியின் போது கூட பயன்படுத்த பயப்படுகிறார்) என்று ஆந்த வீடியோவின் இறுதியில் முழங்கப்படுகிறது.

"நான் அதிர்ச்சியடைந்தேன், இது எனக்குத் தெரியாது. தவறுதலாக நடந்தது என்று புரிய வைக்க போராடினேன். ஆனால் அது ஒரு தேசத்துரோக குற்றம் தான் என அவர்கள் வற்புறுத்தினார்கள்," என்று அந்த விற்பனையாளர் கூறுகிறார். அவர் 108 நாட்கள் சிறையில் இருந்தார்.

பல தேசத்துரோக வழக்குகளைப் போலவே இந்த வழக்கும் அரசியலாக மாறியது. தேசத்துரோகி என்று முத்திரை குத்தப்பட்டார் அவர்.




புகார்தாரர், பாஜக உறுப்பினர். எனவே பிற வலதுசாரி அமைப்புகளோடு இணைந்து அவருக்கு எதிராக போராட்டங்களை ஏற்பாடு செய்தனர்.

"நான் இந்து மத நூல்களை அறிவதில் பெருமை கொள்கிறேன். அதேபோல் குர்ஆனையும் அறிவேன். நான் சிறையில் இருந்தபோது, என் குடும்பம் ஒரு இந்து குடும்பத்தால் தான் அடைக்கலம் பெற்றது," என்கிறார் அந்த மருந்து விற்பனையாளர்.

"நான் ஆன்லைனில் செய்த இந்த சிறிய தவறு, நாட்டிற்கு எதிரான பயங்கரவாத குற்றம் போல் பார்க்கப்படும் என்று நான் நினைத்துக் கூட பார்த்ததில்லை" என்கிறார் அவர்.

**'பாகிஸ்தான்' என்று சொல்வதில் முஸ்லிம்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் போல!**

குறைந்தது இரண்டு நிகழ்வுகளில், தெளிவற்ற வாட்ஸ்அப் பதிவுகளின் விளக்கத்தின் மீது தேசத்துரோகக் குற்றச்சாட்டுகள் பதியப்பட்டுள்ளன. இந்த வழக்குகளில் இந்தியாவுக்கு எதிரான கோஷம் எதுவும் இல்லை. (சமூக ஊடகங்கள், முழக்கங்கள் மற்றும் ஒரு திறந்த கடிதம் சம்பந்தப்பட்ட தேசத்துரோக வழக்குகள் பற்றிய எங்கள் முந்தைய விசாரணையில் பிரிவு

124A இன் கீழ் கடுமையான குற்றச்சாட்டை நிரூபிக்க எந்த ஆதாரமும் இல்லை.)

இந்தியாவின் பாலகோட் தாக்குதலுக்குப் பிறகு, கர்நாடகாவின் தெற்கு விளிம்பில், ஒரு 19 வயது இளைஞர் தனது வாட்ஸ்அப் ஸ்டேட்டஸ் மூலம் இந்தியாவின் பழிவாங்கும் நடவடிக்கைகளுக்கு தனது பெருமையை வெளிப் படுத்த முடிவு செய்கிறார்.

ஆங்கில இலக்கணத்தில் ஓரளவு மட்டுமே அறிவுடன் இருந்த அவர் இப்படி எழுதினார்:

"நாங்கள் காத்திருப்போம் மற்றும் இந்தியா விற்கு மோசமான நேரம் தொடங்குவதைப் பார்ப்போம், எப்படியும் பாகிஸ்தான் ஒரு போதும் கைவிடாது பழிவாங்க வேண்டும்."

இந்த பதிவைக் கண்ட அதே கிராமத்தை சார்ந்த கடை உரிமையாளர் ஒருவர், "ஆந்த வாசகங்களை பாகிஸ்தானுக்கு ஆதரவான" கருத்துகளாக கருதி புகார் அளித்துவிட்டார்..

அந்த கடை உரிமையாளர் தனது புகாரில், இந்த சொற்றொடரை கன்னடத்தில் மொழி பெயர்த்தார், அதாவது:

"நாங்கள் காத்திருந்து பார்ப்போம். இந்தியா வுக்கு மோசமான விஷயங்கள் தொடங்கி விட்டன. இதற்கு பாகிஸ்தான் நிச்சயம் பழிவாங்கும்" என்று. அந்த மாணவருக்கு பலமுறை ஜாமீன் மறுக்கப்பட்டு ஐந்து மாதங் களுக்கும் மேலாக நீதிமன்ற காவலில் இருந்தார்.

இதுகுறித்து, அந்த இளைஞனின் குடும்ப வழக்கறிஞர் குறிப்பிடுகையில்,

"சரளமாக ஆங்கிலம் தெரியாத அவர், இந்தியாவிற்கு ஆதரவு தெரிவிக்க விரும்புவதாக எண்ணி தவறுதலாக பதிவிட்ட பதிவு இது. எந்த ஒரு முஸ்லீமும் பாகிஸ்தான் என்ற வார்த்தையை உச்சரித்தால், அது எப்போதும் ஆதரவாகத்தான் இருக்கும் என்று கருதப்படுகிறது. இப்படியான தவறான எண்ணம் எல்லா இடங்களிலும் ஊடுருவியுள்ளது," என்று கூறுகிறார்.

மத்திய கர்நாடகாவில் சுமார் 400 கி.மீ தொலைவில், 19 வயது இளைஞன் 2018ம் ஆண்டு இந்தியாவின் சுதந்திர தினத்தைக் குறிக்க 'தேசபக்தி' டிக்டாக் வீடியோவை தனது வாட்ஸ்அப் ஸ்டேட்டஸாக இடுகையிட்டார்.

ஹைதராபாத்தில் யாரோ ஒருவரால் உருவாக் கப்பட்ட வீடியோ, பின்னணியில் ஒலிக்கும் அக்ஷய் குமார் - திரைப்படமான கேசரியின் தேசபக்திப் பாடலுடன் இந்தியக் கொடிக்கு ஒருவர் வணக்கம் செலுத்துவது போன்ற படம் இடம்பெற்றுள்ளது. மூவர்ணக் கொடியில் நட்சத்திரங்கள் மற்றும் பிறை ('சந்த் தாரா'), இஸ்லாத்தின் பொதுவான சின்னமும் இடம் பெற்றுள்ளது.

அந்த வீடியோ தேசபக்தியை வெளிப்படுத்து வதாக அவர் உணர்ந்தார். அதேநாளில், அவர் தனது வாட்ஸ்அப் சுயவிவர புகைப்படமாக மூவர்ணக் கொடிக்கு வணக்கம் செலுத்தும் படத்தையும் வெளியிட்டார்.

அவரது வாட்ஸ்அப் ஸ்டேட்டஸ் வீடியோவை பார்த்து உள்ளூர் இந்து வலதுசாரி குழுக்கள் கொந்தளித்தன. அவர் பாகிஸ்தான் கொடியில் இருந்து நட்சத்திரம் மற்றும் பிறையை எடுத்து இந்தியக் கொடியின் மீது பதித்ததாக எஃப்ஐஆர் கூறுகிறது. தேசத்துரோகக் குற்றச்சாட்டுகளுடன், 1971ம் ஆண்டு தேசிய மரியாதைகளை அவமதிப்பதைத் தடுக்கும் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. அவர் கைது செய்யப்பட்டு, கீழ் நீதிமன்றங்களால் ஜாமீன் நிராகரிக்கப்பட்டது. 75 நாட்கள் சிறையில் இருந்தார்.

அவர் தனது கல்வி வகுப்புகளைத் தவற விட்டார். விடுதலையான பிறகும் படிக்க முடியாமல் சிரமப்பட்டார். "விநாயக சதுர்த்தியின் போது, கிராமத்தில் உள்ளவர்கள் கொடியில் விநாயகர் படத்தை வைப்பதில்லையா? அல்லது இந்தியக் கொடியில் சரஸ்வதியின் உருவத்தை வைப்பதில்லையா? நான் இருந்த சிறையில் கொலைக் குற்றம் சாட்டப்பட்டவரும், பலாத் காரக்குற்றம்சாட்டப்பட்டவர்களும்இருந்தனர்," என்கிறார். விடுதலையான பிறகு, அவரும் அவரது குடும்பத்தினரும் 100 கிமீ தொலைவில் உள்ள நகரத்திற்கு இடம் பெயர்ந்தனர்.

**கர்நாடகாவில் காஷ்மீரி மாணவர்கள் - எளிதான இலக்குகள்**

மாணவர்கள், குறிப்பாக காஷ்மீரைச் சேர்ந்த வர்கள், புல்வாமாவுக்குப் பிந்தைய தேசத் துரோக வழக்குகளின் சுமைகளை எதிர்கொள் கிறார்கள். நாடு முழுவதும் காஷ்மீர் மாணவர்கள்

துன்புறுத்தப்பட்டதாக அல்லது தாக்கப்பட்டதாக செய்திகள் வந்தன.

இந்த பரபரப்பான சூழலில், ஒன்பது காஷ்மீரிகளுக்கு எதிராக ஐந்து தேசத்துரோக வழக்குகளை கர்நாடகா மாநிலம் பதிவு செய்துள்ளது. இதில் எட்டுபேர் மாணவர்கள். கல்லூரி முதல்வர்களால் இரண்டு வழக்குகள், இரண்டு அந்த பகுதியில் ஊள்ள தோழர்கள், உள்ளூர் VHP தலைவர் ஒரு வழக்கில் புகார் அளித்தனர்.

பெங்களூருவில், புல்வாமா தாக்குதலுக்கு இரத்தம் தோய்ந்த பழிவாங்கும் முயற்சியில் ஈடுபட்ட மாணவர் ஒருவருடன் தகராறில் ஈடுபட்ட மூன்று மாணவர்கள் மீது தேசத்துரோக வழக்கு பதிவு செய்யப்பட்டது. ஹூப்பள்ளியில், பயங்கரவாதத் தாக்குதலின் முதலாம் ஆண்டு நினைவு நாளில், பாகிஸ்தானுக்கு ஆதரவான மற்றும் இந்தியாவுக்கு எதிரான வீடியோக்களை எடுத்ததாக மூன்று மாணவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டது. மாணவர்கள் குற்றச்சாட்டுகளை மறுத்தனர். இரண்டு வழக்குகளிலும், அவர்கள் கல்லூரியில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டனர்.


மே 2021ல் "மாணவர்களுக்கு எதிரான தேசத்துரோக குற்றச்சாட்டு ஏற்றுக்கொள்ள முடியாத கடுமையான தண்டனையாகும். இது அவர்களின் எதிர்காலத்தை அழிக்கும் மற்றும் அவர்களை மேலும் அந்நியப்படுத்தும்" என்று ஜே.கே மாணவர் சங்கத்தின் செயலாளர் தாவூத் அகமது, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா மற்றும் கர்நாடக முதல்வர் பி.எஸ் எடியூரப்பா ஆகியோருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். மாணவர்களின் கல்வி மற்றும் தொழிலை மேற்கோள் காட்டி, குற்றச்சாட்டுகளை வாபஸ் பெறுமாறு கோரினார்.

**உள்ளூர் காஜியை கேள்வி கேட்டதற்காக தேசத்துரோக குற்றச்சாட்டு**

அனைத்து சமூக ஊடக தேசத்துரோக வழக்குகளும் பாகிஸ்தான் அல்லது காஷ்மீர் சம்பந்தப்பட்டவை அல்ல. 2020 ஜனவரியில் மதரஸா ஆசிரியருக்கு எதிரான தேசத்துரோக வழக்கில் சாதாரணமான, கிட்டத்தட்ட அற்பமான, குற்றச்சாட்டுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. 34 வயதான ஆசிரியர், ஒரு காஜியின் "பாகுபாடான அணுகுமுறையை" கேள்விக்குட்படுத்தும் ஒரு பதிவை பகிர்ந்துள்ளார். அந்த பதிவு வேறொருவரால் எழுதப்பட்டது. மங்களூரில் உள்ள ஒரு மசூதியின் தலைவர், CAA எதிர்ப்பாளர்கள்மீது துப்பாக்கிச்சூடு நடத்திய காவல்துறை ஆணையரை ஏன் மகிழ்வித்தார் என்பதை பற்றிய பதிவு அது.

"அது 2,000 வார்த்தைகள் கொண்ட கட்டுரை என்று நினைக்கிறேன். தலைப்பைப் பார்த்தேன், கொஞ்சம் படித்தேன். இதில் ஏதேனும் உண்மை இருக்கிறதா என்று அறிய வாட்ஸ்அப் குழுவில் நான் அதை பகிர்ந்தேன்," என்று ஆசிரியர் கூறினார். குழுக்களிடையே பகையை வளர்ப்பது தொடர்பாக அந்த குழுவை சேர்ந்த ஒருவர் போலீசில் புகார் அளித்துள்ளார். இது எப்ஐஆரில் தேசத்துரோக வழக்காக மாற்றப்பட்டது.

ஆசிரியர் முன்ஜாமீனுக்கு விண்ணப்பித்தார். இரண்டு மாதங்களுக்குப் பிறகு, இந்த வழக்கில் தேசத்துரோகக் குற்றச்சாட்டுகள் ஏன் பயன்படுத்தப்பட்டன என்று திறம்பட கேள்வி எழுப்பி கர்நாடக உயர் நீதிமன்றம் வெற்றிகரமாக



அவருக்கு ஜாமீன் உத்தரவைப் பிறப்பித்தது.

**எளிதில் தவறாகப் பயன்படுத்தப்படும் தொன்மையான சட்டம்**

ARTICLE - 14 தேசத்துரோகச் சட்டத்தின் ஒரு சாதாரண விளக்கத்தை மட்டும் கொடுக்க இந்த ஆய்வை மேற்கொள்ளவில்லை. அதன் மூலம் நடந்த கைது நடவடிக்கைகளை விளக்கவே இந்த ஆய்வு.

"தேசத்துரோகம் என்பது ஒரு தொன்மையான சட்டமாகும், அதனால் எந்த பலனும் இல்லை. அதை ரத்து செய்ய வேண்டும். தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் பிரிவு 66A (இது 2015ல் உச்ச நீதிமன்றத்தால் ரத்து செய்யப்பட்டது) போலவே, இது தெளிவற்றதாகவும் இடைவெளிகள் நிறைந்ததாகவும் உள்ளது. இவைகள் அந்த சட்டம் தவறாக பயன்படுத்தப்படுவதை அனுமதிக்கின்றது" என்று இணைய சுதந்திர அறக்கட்டளையின் நிர்வாக இயக்குனர் அபர் குப்தா கூறுகிறார்.

இந்த அறக்கட்டளை, 2018ம் ஆண்டில் சட்ட ஆணையத்திடம் சமர்ப்பித்த ஒரு அறிக்கையில், "குடிமக்கள் தங்கள் சமூக ஊடக பதிவுகளுக்காக தேசத்துரோக சட்டத்தில் கைது செய்யப்படுவது அதிகளவில் நடக்கிறது" என்று குறிப்பிட்டது.

"சமூக ஊடகங்களில் பதிவிடப்படும் பதிவுகள் பொது பதிவுகளாக அனைவருக்கும் தெரியும் வகையில் பதிவிடப்படுகிறது. மேலும் இந்த வழக்குககளில் ஜாமீனுக்கான சட்ட செயல்முறைகளும் பெரும்பாலும் மிகவும் கடினமாக உள்ளது," என்று அபர் குப்தா கூறினார்.

**வாட்ஸ்ஆப் குழுக்களில் போடப்படும் பதிவுகளுக்கு அட்மின் கைது செய்யப்படுவதா?**

ஒரு வழக்கில், வாட்ஸ்ஆப் குழுவில் சர்ச்சைக்குரிய செய்திகளை பதிவிட்டதற்காக எந்த தொடர்பும் இல்லாத அந்த வாட்ஸ்அப் குழுக்களின் அட்மின்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

2018ம் ஆண்டின் இறுதியில், இரண்டு 19 வயது இளைஞர்கள் செல்ஃபியைக் கிளிக் செய்து, படத்தை அழகுபடுத்த புகைப்பட பயன்பாட்டைப் பயன்படுத்தினர். எடிட்டிங் தொடுதல்களில் நட்சத்திரங்கள் மற்றும் பிறை பதிக்கப்பட்ட பச்சை நிற கொடி இருந்தது. கொடியின் அடிப்பகுதியில் ஆங்கிலத்தில் 'பாகிஸ்தான் ஜிந்தாபாத்' என்ற வார்த்தைகள் இருப்பது அவர்களுக்குத் தெரியாது. அந்த புகைப்படத்தை அவர்களது உள்ளூர் வாட்ஸ்அப் குழுவிற்கு அனுப்பியுள்ளனர்.

நெல் வயல்களால் அனைத்து பக்கங்களிலும் சூழப்பட்ட அந்த கிராமத்தில் ஒரு சலசலப்பு எழுந்தது. இரு வாலிபர்களையும் போலீசார் கைது செய்தனர். தேசத்துரோகக் குற்றச்சாட்டு சேர்க்கப்பட்டது. அவர்களில் ஒருவர் 10 மாதங்களுக்குப் பிறகு விடுவிக்கப்பட்டார், மற்றவர் ஒரு வருடம் கழித்து.

"இது தவறுதலாக நடந்த ஒன்று, ஆனால் அவர்கள் அவரை 13 மாதங்கள் சிறையில் இருக்க வைத்தார்கள்" என்று புகைப்படத்தை அனுப்பிய முதன்மை குற்றவாளியின் தாய் கூறுகிறார்.

மேலும் சட்டச் செலவுக்காக ரூ. 500,000 செலவிட்டதாக அவர் கூறுகிறார். அவர்கள் தினக்கூலி தொழிலாளர்கள். அந்த கடனை இன்னும் திருப்பி செலுத்தவில்லை.

ஆனால் இந்த எஃப்ஐஆரில் 19 வயது இளைஞர்கள் தவிர, இரண்டு குரூப் அட்மின்களின் பெயர்களையும் போலீசார் சேர்த்துள்ளனர்.

இந்தக் குழுவின் அட்மினாக இருந்ததற்காக கைது செய்யப்பட்டவர்களில் ஒரு இந்து விவசாயியும் ஒருவர்.

"அவர்கள் என்னை ஒரு தேசத்துரோக வழக்கில் சிக்க வைத்ததை சிறையில் தான் உணர்ந்தேன். நான் குழப்பமாகவும், கோபமாகவும் இருந்தேன்." என்று நான்கு குழந்தைகளின் தந்தையான விவசாயி கூறினார். ஜாமீன் வழங்கப்படுவதற்கு முன்பு அவர் இரண்டு மாதங்கள் சிறையில் இருந்தார். சட்ட செலவுகளுக்காக வாங்கிய ரூ.100,000 கடனைத் தொடர்ந்து செலுத்தி வருகிறார்.

அவர் ஜாமீனில் விடுவிக்கப்பட்டார், ஆனால் தேசத்துரோகி என்ற முத்திரை அவர் மீது உறுதியாக இருந்தது. அந்த விவசாயி உள்ளூர் அரசியல் செயல்பாடுகளையும் கொண்டிருந்தார், மேலும் 2019ல் உள்ளூர் தாலுக்கா பஞ்சாயத்து மற்றும் கூட்டுறவு வங்கிக்கான தேர்தல்களில் தோல்வியடைந்தார்.


vaigarai velicham official

# 10 நிமிட தவறுக்காக - வாழ்நாள் முழுவதும் இழப்பு

குற்றம் சாட்டப்பட்டவர்களுடனான நேர்காணல்களில், குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டவர்கள், சில மாதங்கள் அல்லது ஆண்டுகளில், அவர்களின் வேலை இழப்பு, ரூ.100,000 முதல் 400,000 வரையிலான கடன்கள், தனிமைப்படுத்தல் மற்றும் அவப்பெயர் ஆகியவற்றைச் சந்தித்திருக்கிறார்கள். மேலும் முஸ்லிம்கள்மிக மோசமான விளைவுகளை எதிர்கொள்கிறார்கள்.

ஜுனைத் தனது சிதைந்த வாழ்க்கையின் துண்டுகளை அவரது கர்நாடக கிராமத்தில் மீண்டும் கண்டெடுத்தார். அவர் தனது கோழிக் கடையை மீண்டும் கட்டினார், ஆனால் இந்த முறை கிராமத்திற்கு வெளியே. அவர் கைது செய்யப்பட்டதில் இருந்து கிராமம் முழுவதும் காவி கொடிகள் பறக்கத் தொடங்கிவிட்டன.

"எனக்கு எதிரான வழக்கு கிராமத்தை பிளவுப் படுத்தியது," என்று அவர் கூறுகிறார்.

அவர் கைது செய்யப்படுவதற்கு முன்பு, ரம்ஜான் மற்றும் ஈத் பண்டிகைகள் ஆடம்பரத்துடன் அனுசரிக்கப்பட்டது. "சமுதாயத்தில் துரோகிகள் இருப்பதாகக் கூறி கடந்த ஆண்டு, சில வலதுசாரி குழுக்கள் எங்கள் கொடிகளை அகற்றினர்," என்றும் அவர் கூறுகிறார்.

பெங்களூருவில், மூன்று மாதங்கள் சிறையில் இருந்த 32 வயதான இளம் பேக்கரி ஊழியர். சட்ட செயல்முறைகள் அவரை கடனுக்குள் ஆழமாக தள்ளியது, மேலும் அவரால் புதிய வேலையை கண்டுபிடிக்க முடியவில்லை. "எனக்கு பாகிஸ்தான் மீது காதல் இல்லை. நான் இந்தியன், இந்தியா எனது நாடு. தொழில்நுட்பத்தை எப்படி சரியாகப் பயன்படுத்துவது என்று எனக்குத் தெரியாமல் இருக்கலாம், தவறுகள் நடக்கலாம். ஆனால், பத்து நிமிடத்தில் திருத்தப்பட வேண்டிய தவறுக்காக, என் வாழ்வாதாரத்தையும், வாழ்க்கையையும் இழந்துட்டேன்," என்கிறார். ■

இன்ஷா அல்லாஹ் தொடரும்...

Source : Article-14.com

**அஷ்ரப் அலீ**

# வாசகர் பக்கம்




அஸ்ஸலாமு அலைக்கும்

நான், ரசீன் தக்கலையிலிருந்து தற்போது துபையில் பணியாற்றுகிறேன், நான் Journalism and Mass Communication தொலைதூர கல்வித் திட்டத்தின் மூலமாக முதுகலை பட்டம் பயின்று வருகிறேன். இந்த துறை குறித்த உங்கள் தகவல்களை தொடர்ந்து YouTube வாயிலாக பார்த்து வருகிறேன், மிகவும் பயனுள்ள தகவல்களாக உள்ளது அல்ஹம்து லில்லாஹ். எனக்கு புகைப்படம் எடுப்பது, வீடியோ எடுப்பது போன்ற விஷயங்களில் ஆர்வமில்லை. இதை தவிர்த்து மற்ற விஷயங்களில் கவனம் செலுத்தி இந்த துறையில் நான் சிறந்து விளங்க முடியுமா? அல்லது கட்டாயம் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் எடுப்பது குறித்த அறிவு கட்டாயம் தேவையா? தெளிவுபடுத்துங்கள். இன்ஷா அல்லாஹ்.

- அல்லாமா அபுல் ஹஸன் அலி நத்வி (ரஹ்)

- தமிழில் மௌலவி நியாசுதீன் புகாரி நத்வி

# இந்தப் பாடத்திட்டம் தந்த சீலர்கள்!



இந்தியாவின் பழமையான இஸ்லாமிய பாடத்திட்டம் அறவே எந்தக் குறைகளும் தவறுகளும் அற்றது என்று கூற இயலாது.

அதன் பல பகுதிகள் சீர்படுத்தவும் திருத்தவும் விமர்சனத்திற்கு உட்படுத்தவும் வேண்டிய தேவையிருந்தது. ஆனாலும் இதனை தோற்றுவித்தவர்கள், வலுச்சேர்த்தவர்களின் பொருட்டால் இந்த திட்டம் பல்வேறு தனிச் சிறப்புகளை சிறப்பியல்புகளையும் கொண்டதாக விளங்கியது. இதுபோன்ற தனிச்சிறப்புகளை, சிறப்பியல்புகளை இன்றைய புதிய பாடத்திட்டத்தில் குறைவாகவே காணமுடிகிறது. இங்கே வரலாற்று நூல்களில் பரவி கிடக்கும் இந்த பாடத்திட்டத்தின் தனிச் சிறப்புகளில் சிலவற்றை குறிப்படுகிறோம்.

பல உலமாக்கள், ஆசிரியர்கள், மாணவர்களது வாழ்க்கையிலிருந்து இந்த சிறப்பியல்புகளை பதிவுசெய்கிறோம்.

**தூய எண்ணம் மற்றும் தியாகமனப்பான்மை**

கடந்த காலத்தில் இஸ்லாமிய பாடசாலையின் ஆசிரியர்களிடமிருந்த முக்கியமான குணமும், அவர்களது தனி அடையாளமாக திகழ்ந்ததும் தூய எண்ணம் மற்றும் தியாக மனப்பான்மை என்ற இந்த இரு பண்புகள்தான். கல்வி கற்பதற்கும் கற்பிப்பதற்கும் மறுமையில் நிச்சயம் கூலி கிடைக்கும், கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இஸ்லாத்தில் தனிச்சிறப்புள்ளது என்பது அவர்களது அடிமனதில் ஆழமாக பதிந்துவிட்டது. இதுவே அவர்களது ஈமானின் ஒரு பகுதியாக மாறிவிட்டது. இவர்களில் பெரும்பான்மையானவர்களுக்கு கற்பது மற்றும் கற்பிப்பதின் மூலம் அல்லாஹ்வுடைய பொருத்தத்தை பெறவேண்டும் மறுமையில் கூலியை பெஷ்வேண்டும் என்பதே பிரதான நோக்கமாக இருந்தது. இந்தப் பணியை மிகப்பெரிய இபாதத்தாக, உயர்ந்த பாக்கியமாக கருதினார்கள்.

தியாகமனப்பான்மை, உலகப் பற்றின்மை, மன நிறைவு, கல்வி கற்பதில் முழுமையாக ஈடுபடுவது, இந்த பாதையில் பசியையும், ஏழ்மையையும் சகித்து கொள்வது, எல்லா கஷ்டங்களையும் துயரங்களையும் இன்முகத்தோடு தாங்கி கொள்வதுபோன்ற மாணவர்கள் கொண்டிருந்த உன்னத பண்புகளை வெளிப்படுத்தும் பல்வேறு முன்னுதாரங்கள் வரலாற்றில் நீங்கா இடத்தைப் பிடித்துவிட்டது.

அதேபோல ஆசிரியர்கள் என்னும் மகான்களுடைய தியாகமனப்பான்மை, தங்களது வாழ்க்கையில் அவர்கள் சகித்துக்கொண்ட ஏழ்மை, பசி, உலக ஆசைகளை விட்டு தூரமாக இருந்தது போன்ற பண்புகளைக் எடுத்துரைக்கும் வரலாற்று நிகழ்வுகளும் இந்திய இஸ்லாமிய கல்வி வரலாற்றில் குவிந்து கிடக்கிறது.

உள்ளத்தை ஆழமாக பாதிக்கும் ஆசிரியர்களின் தியாகம் மற்றும் கஷ்டங்களை சகித்துக்கொண்ட சம்பவங்களை உள்ளடக்கிய பல ஆசிரியர்களது வரலாற்று சம்பவங்களில் ஒரு



vaigarai velicham official

வித்தியாசமான சம்பவத்தை இங்கே பதிவு செய்கிறோம்.

இந்தியாவின் மிகப்பெரும் வரலாற்று ஆசிரியர் மௌலானா குலாம் அலி ஆஸாத் அல்பில்கிராமி அவர்கள் தனது மஆசிருல் கிராம் என்ற நூலில் ஒரு வரலாறை பதிவு செய்கிறார்.

பில்கிராம் என்ற நகரத்தில் பிரபல்யமான முஹத்திஸ் உஸ்தாத் மீர் ஸய்யித் முபாரக் (ரஹ்) (ஹி1115) அவர்களுடைய மாணவர் மீர்துஃபைல் முஹம்மத் என்பவர் தன் ஆசிரியரிடம் நடந்த நிகழ்வை கூறுவதை அந்நூலில் இவ்வாறு பதிவு செய்கிறார்.

“நான் ஒருமுறை உஸ்தாத் மீர் முபாரக் அவர்களது மஜ்லிஸிற்கு சென்றேன். உஸ்தாத் அவர்கள் ஒழு செய்வதற்காக எழுந்தார்கள். கால்கள் தடுமாறி கீழே விழுந்தார்கள். நான் வேகமாக சென்று அவரது கையைப் பிடித்து அமர வைக்க முயன்றேன்.

உடனே அவர் மயக்கமுற்றார். மயக்கம் தெளிந்ததும் ஏன் இந்தளவிற்கு பலவீனமாக உள்ளீர்கள் என்று கேட்டேன். அவர் ஒன்றுமே பதில் கூறவில்லை. மௌனமாகவே இருந்தார். நான்திரும்பத்திரும்ப கேட்டு வற்புறுத்திய போது கூறினார், "மூன்று நாட்களாக எந்த உணவையும் நான்சாப்பிடவில்லை". இவ்வாறு உஸ்தாத் மூன்று நாட்கள் சாப்பிடவில்லை என்பதை எவரிடத்திலும் வெளிப்படுத்தவில்லை. யார் எதை வழங்கினாலும் அதை ஏற்பதும் உஸ்தாத் அவர்களது வழக்கமல்ல. உஸ்தாத் அவர்களது இந்த நிலை என் இதயத்தை உருக்கியது. உடனே என் வீட்டிற்கு சென்று உஸ்தாத் அவர்களுக்காக உணவு எடுத்து வந்தேன். இந்த நிலையில் அவர் இருக்கும்போது அதனை நிச்சயமாக விரும்பி உண்ணுவார் என்றே நினைத்தேன். அவருக்கு முன்னால் உணவு பாத்திரங்களை வைத்ததும் அவரது முகத்தில் புன்முறுவல் எட்டிப்பார்த்தது. எனக்காக பிரார்த்தனையும் செய்தார். பிறகு என்னிடம் கூறினார், "அல்லாஹ் உன் மீதும் உனது உணவின் மீதும் பரகத் செய்வானாக" ஆனால் என் மகனே ! எனது வேண்டுகோளை ஏற்று கொள்வாயா? என்று கேட்டார். பிறகு சிறிது நேரம் கழித்து கூறினார்.

"நிச்சியமாக இது இஷ்ராஃப் உணவு (இஷ்ராஃப் என்றால் தஸவ்வுஃப்பில் பயன்படுத்தப்படும் சொற்பிரயோகம். அதாவது சாப்பிட வேண்டும் என்று ஆசை ஏற்பட கூடிய உணவு). ஃபிக்ஹை பொருத்தவரை இந்த உணவு ஆகுமாக்கப்பட்டதுதான்.

ஷரீஅத்தை பொறுத்தவரை மூன்று நாட்கள் பசியோடு இருந்தவனுக்கு இறந்தவற்றை சாப்பிடுவது கூட அனுமதிக்கப்பட்டதே.ஆனால் தஸவ்வுஃப்-பை பொருத்தவரை சாப்பிட வேண்டும் என்று ஆசை ஏற்பட்ட உணவை சாப்பிடுவதற்கு அனுமதியில்லை."

உஸ்தாத் இவ்வாறு கூறியபிறகு நான் எதனையும் கூறாமல் உணவு பாத்திரங்களை எடுத்துக்கொண்டு வாசல் கதவருகில் சிறிது நேரம் நின்று கொண்டிருந்தேன். பிறகு மீண்டும் ஒருமுறை தலையில் உணவு பாத்திரங்களை சுமந்து உஸ்தாத் அவர்களிடம் சென்று கூறினேன் "நான் சென்றபிறகு இந்த உணவின் மீது ஆசைப் பட்டீர்களா? அதற்கு உஸ்தாத் இல்லை, என்றார். "நீங்கள் இப்போது சாப்பிடலாமே" என்றேன்.

நான் இவ்வாறு கூறியதை கேட்டு ஆச்சிரியமடைந்தார். பிறகு கூறினார் அறிவிலும், விளக்கமளிப்பதிலும் என்னை மிகைத்துவிட்டாய். பிறகு விருப்பத்தோடு உணவை உண்டார்.

இந்த சம்பவம் வழக்கத்திற்கு மாறாக இருந்தாலும் இதுபோல ஒன்றல்ல இரண்டல்ல இந்திய இஸ்லாமிய கல்வி பாரம்பரியத்தில் இது போன்ற பல சம்பவங்களை நம்மால் கூற இயலும். அவர்களது உலக பற்றின்மை மற்றும் மனநிறைவை எடுத்து கூறும் நிகழ்வுகள் இந்திய இஸ்லாமிய கல்வி வரலாற்றில் நிரம்பி கிடக்கிறது. எந்த அளவிற்கு என்றால் ஏழ்மையும் பசியும் இவர்களது தனிச்சிறப்பாக இயல்பாக மாறிவிட்டது.

கடந்தகால உலமாக்களின் தூய எண்ணம் மற்றும் தியாகமனப்பான்மைக்கு எடுத்துக்காட்டாக மேல்கூறிய சம்பவத்திற்கு ஈடாக மற்றொரு சம்பவத்தையும் எடுத்துரைக்கிறோம்.

இது ஹிஜ்ரி 13 நூற்றாண்டில் நிகழ்ந்தது.

அஷ்ஷைகு அப்துர் ரஹீம் (ரஹ்) (ஹி1234) ராம்பூரில் ஆசிரியராக பணி புரிந்து வந்தார். ரோஹில்கன்ட் மாகாணத்தின் அமைச்சரான ஹாகின்ஸ் அவர்கள் அஷ்ஷைகு அப்துர் ரஹீம் (ரஹ்) அவர்களிடம் “பரேலி கல்லூரியில் ஆசிரியர் பணிக்கான வாய்ப்புள்ளது மாதச் சம்பளம் 250

ரூபாய். பதவிகள் உயரும்போது சம்பளமும் உயரும். இந்த நல்ல வாய்ப்பை தாங்கள் பயன் படுத்தலாமே?" என்று கூறினார்.

அதற்கு அஷ்ஷைகு அப்துர் ரஹீம் (ரஹ்) அவர்கள் "என்னால் இதனை ஏற்றுக்கொள்ள இயலாது. ஏனென்றால் இந்த பணிக்கு நான் ஒப்புக்கொண்டால் ராம்பூர் அரசு அலுவலகத் திலிருந்து வரும் ஊக்கத்தொகை பத்து ரூபாய் நின்று விடும்". இதனைக்கேட்ட அமைச்சர் ஹாக்கின்ஸ் அவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. "நான் பத்து ரூபாயை விட பன்மடங்கு அதிக சம்பளமுள்ள பணியை உங்களிடம் கூறுகிறேன். நீங்கள் நின்றுபோகும் பத்து ரூபாய்க்காக முடியாது என்கிறீர்கள்.!!"

அதற்கு அஷ்ஷைகு அப்துர் ரஹீம் (ரஹ்) அவர்கள் "மற்றொரு காரணமும் உண்டு. என்னுடைய வீட்டில் இலந்தை மரம் உள்ளது. அதில் சுவைமிகுந்த கனிகள் காய்க்கும். அதனை என்னால் உண்ண இயலாதே" என்றார் .இதன் மூலம் அஷ்ஷைகு அப்துர் ரஹீம் (ரஹ்) தனது மாணவர்களை குறித்து இவ்வாறு கூறுகிறார் என்பதை விளங்காத அமைச்சர் "பழங்களை உங்களுக்காக நான் அங்கு வரவழைக்கிறேன்" என்று கூறினார். பிறகே அறிஞர் கூறினார் "ராம்பூரில் எனது மாணவர்கள் உள்ளனர். அவர்களை விட்டு விட்டு என்னால் எப்படி வர இயலும் இதன் மூலமாக அவர்களுக்கு பாடம் எடுக்கும் நற்பாக்கியத்தை இழந்து விடுவேன்".

அப்துர் ரஹீம் (ரஹ்) அவர்களை ஒப்புக் கொள்ள செய்ய அமைச்சர் மிகவும் முயற்சி செய்தார். இவ்வாறு கூறினார் "தங்களது மாணவர் களையும் பரேலி கல்லூரிக்கு அழைத்து வாருங்கள் அவர்களுக்கு உதவித்தொகை வழங்க நான் ஏற்பாடு செய்கிறேன்." தன்னிடமிருந்த கடைசி அம்பை எறிவதை போல இவ்வாறு கூறினார் "நீங்கள் சொல்வது சரிதான். ஆனால் ஆசிரியர் பணி போன்ற அறப்பணிக்கு பணம் வாங்கினாயா என்று மறுமை நாளில் நான் கேள்வி கேட்கப் பட்டால் என்ன பதில் சொல்வேன்?"

**ஆசிரியர் பணியை புனிதமாக கருதுதல்**

இந்திய இஸ்லாமிய கல்வி பாரம்பரியத்தின் கடந்த கால வரலாற்றில் ஆசிரியர்கள் பாடம் எடுப்பதில் மூழ்கினார்கள். கற்பனை செய்து பார்க்க முடியாத அளவு அவர்கள் அதிலேயே முழுமையாக மூழ்கினார்கள். கற்பதும் கற்பிப் பதும்தான் அவர்களது ஆன்மாவின் உணவு, அதுவே அவர்களது வணக்க வழிபாடாக, தியானமாக திகழ்ந்தது. தங்களது வாழ்வின் பெரும்பாலான பகுதிகளை அதற்கே ஒதுக்கினார்கள். அவர்களது இரவுகள் மற்றும் பகல்களின் பெரும்பான்மையான நேரங்கள் பாடம் எடுப்பதிலேயே கழிந்தன. உலமாக்களின் அரசன் அல்லாமா வஜீஹுத்தீன் குஜராத்தி(ரஹ்) தனது ஆயுட்காலத்தில் 65-லிருந்து 67 வருடங்கள் பாடம் நடத்துவதிலேயே செலவழித்தார். அஷ்ஷைகு அப்துஸ் ஸலாம் லாஹுரி (ரஹ்), முல்லா அப்துல் ஹக்கீம் சியால் கோட்டி (ரஹ்), அஷ்ஷைகு அலி அஸ்கர் கன்னோஜி (ரஹ்) இவர்கள் அனைவரும் 60 வருடங்கள் ஆசிரியராக பணி புரிந்தார்கள். முல்லா ஜீவன் என்று பிரபல்ய மாக அறியப்படும் அஷ்ஷைகு அஹ்மத் அம்பூதி (ரஹ்) தனது வாழ்க்கை முழுக்க பாடம் நடத்தி னார்கள். தனது வாழ்வின் கடைசி நாளில்கூட பாடம் எடுத்தார் என்றால் நீங்களே கொஞ்சம் சிந்தித்துப்பாருங்கள்.

ஒரு மனிதனுக்கு சராசரியாக தேவைப்படும் நேரம், ஓய்வு நேரத்தை தவிர்த்து மீதமுள்ள அனைத்து நேரத்தையும் பாடம் நடத்துவதிலேயே ஆசிரியர்கள் செலவிட்டார்கள். அதுவே அவர்களது முழு பணியாகத் திகழ்ந்தது. இன்னும் சில ஆசிரியர்கள் உணவருந்தும் போதும் பாதையில் நடக்கும் போதும்கூட பாடம் நடத்தி னார்கள். அஷ்ஷைகு அப்துல் காதிர் அல்பதாயுனி (ரஹ்) தன் ஆசிரியரான அப்துல்லாஹ் அல்ப தாயுனி (ரஹ்) அவர்களை குறித்து கூறுகிறார்," உஸ்தாத் அவர்கள் தனக்கு தேவையானவற்றை வாங்குவதற்குத்தானே சந்தைக்கு செல்வார். மாணவர்கள் படையே அவரோடு செல்லும். உஸ்தாத் அவர்கள் கடைவீதிக்கு செல்லும் வழியி லேயே பாடம் நடத்திக் கொண்டே செல்வார்."

**மாணவர்களோடு ஆசிரியர்கள் கொண்டிருந்த உறவும் அவர்கள் மீது கொண்டிருந்த அன்பும்**

ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் மத்தியில் ஆழமான நெருக்கமான உறவு நிலவியது. இதுபோன்ற ஒரு ஆசிரியர் மாணவர் உறவை தற்கால கல்வி நிறுவனங்களில் நம்மால் பார்க்க இயலாது. மாணவர்கள் ஆசிரியர்களு டைய பிள்ளைகளைப்போல இருந்தார்கள், இல்லை அதைவிட நெருக்கமாக இருந்தார்கள்.


vaigarai velicham official

மாணவர்களை தங்களின் பிள்ளைகளைப் போல ஆசிரியர்கள் பராமரித்தார்கள் அவர்களோடு சேர்ந்து உணவு அருந்துவார்கள்.

மன்னர் அக்பரின் காலத்தில் வாழ்ந்த மிகப்பெரிய மருத்துவராகவும் மன்னர் அக்பரின் அரசவை மருத்துவராகவும் விளங்கியவர் ஹக்கீம் அல்கீழானி (ரஹ்) மாணவர்களுக்கு எப்போதும் பாடம் நடத்திக்கொண்டே இருப்பார். உணவருந்துவதற்காக மாணவர்கள் தன்னோடு அமர்ந்தாலே தவிர உணவருந்தமாட்டார்.

உஸ்தாத் மௌலானா முஹம்மது அப்சல் ஜோன் பூரி (ரஹ்) தன் மாணவர்களிடையே மிக நெருக்கமான உறவைப் பேணிவந்தார். அதிலும் குறிப்பாக அவர்களின் மாணவர்களில் ஒருவரான அல்லாமா மஹ்மூத் ஜோன்பூரி (ரஹ்) அவர்கள் உஸ்தாத் அவர்களுக்கு மிகவும் நெருக்கத்திற்குரிய மாணவர். உஸ்தாதவர்கள் இவரை மிகவும் நேசித்தார். இப்படியான மாணவரின் மரணச் செய்தியை கேட்ட உஸ்தாத் அவர்களுக்கு தாங்கிக் கொள்ளமுடியாத பேரிழப்பாக அந்த செய்தி இருந்தது.

அஷ்ஷைகு குலாம் அலி ஆஸாத் அல்கீழானி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:

40 நாட்களுக்கு உஸ்தாத் அவர்களை சிரித்த முகத்தோடு யாராலும் பார்க்க இயலவில்லை. 40 நாட்களுக்கு பிறகு தனது மாணவர் சென்ற இடத்திற்கே சென்றுவிட்டார் (மரணித்து விட்டார்).

முன்ஷி ஸத்ருத்தீன் கான் அவர்கள் உலமாக் களின் மன்னர் அப்துல் அலி பஹ்ருல் உலூம் (ரஹ்) அவர்களை போஹரில் பாடம் நடத்த அழைத்தார். சம்பளமாக மிகப்பெரிய தொகையை தருவதாகவும் கூறினார். ஆனால் பஹ்ருல் உலூம் அவர்கள் நிராகரித்து விட்டார்." என்னோடு நூறு மாணவர்கள் உள்ளார்கள் அவர்களைவிட்டு என்னால் வர இயலாது எனது மாணவர்களுக்கும் உணவு தங்குமிடம் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டால் நான் வருவேன்" என்றார் அதற்கு முன்ஷி ஸத்ருத்தீன்கான் ஒப்புக் கொண்ட பிறகே அந்தப் பணியை ஒப்புக் கொண்டார். அதேபோல இந்த அறிஞரை மெட்ராஸ் வாலஜாவின் நவாப் பாடம் எடுப்ப தற்காக அழைத்து மாதம் 1,000 ரூபாய் சம்பள மாகவும் வழங்கினார்.ஆனால் 1,000 ரூபாயையும் தனது மாணவர்களுக்கே செலவழித்தார். சிறிது தொகையை கூட லக்னோவில் உள்ள தனது குடும்பத்திற்கு அனுப்பவில்லை. எந்தளவிற்கு என்றால் சிரமங்களை சகித்துக்கொள்ள இயலாமல் அவரது மகன் அஷ்ஷைகு அப்துந் நாஃபிஃ லக்னோவிலிருந்து மெட்ராஸ் வந்து

தன் தந்தையிடம் குடும்ப செலவிற்கு பணம் வேண்டும் என்று கேட்டபோதும்கூட தனது வழக்கத்தை மாற்றிக்கொள்ளவில்லை. தன் மகனை சமாளித்து ஊருக்கு வெறுங்கையோடு திருப்பி அனுப்பி விட்டார்.

இதுபோன்ற சம்பவங்கள் இந்திய இஸ்லாமிய கல்வி வரலாற்றில் புதிதானவை அல்ல மாறாக பரவலாக இவை காணப்பட்டன. பழங்காலத்து உலமாக்கள் இப்படியான தங்களின் ஆசிரியர்கள் தங்களிடம் காட்டிய பரிவையும் கருணையையும் நிறையவே பதிவு செய்திருக்கிறார்கள்.

**மாணவர்கள் ஆசிரியர்களிடம் கொண்டிருந்த நெருக்கம்**

ஆசிரியர்கள் தங்களுடைய மாணவர்களி டத்தில் எவ்வாறு மிகுந்த நெருக்கத்தோடும் பாசத்தோடும் பழகினார்களோ மாணவர்களும் தங்களது ஆசிரியர்களிடம் மிகுந்த நெருக்கத் தோடும் பாசத்தோடும் பழகினார்கள். அவர் களுக்கு மத்தியிலிருந்த உறவு உறுதியான உறவாக ஆத்மார்த்த உறவாக திகழ்ந்தது.

அல்லாமா நிஜாமுதீன் அல்லக்னவி (ரஹ்) அவர்களது சம்பவம் வரலாற்றில் நிரந்திரமாக இடம்பிடித்துவிட்டது. அவரது மரணச் செய்தி பரவியபோது அவரது மாணவரான அஸ்ஸய்யித் லரீஃப் அலீமாபாதி (ரஹ்) அழுது அழுது தனது பார்வையையே இழந்துவிட்டார். மற்றொரு மாணவரான அஸ்ஸய்யித் கமாலுத்தீன் அலீமா பாதி (ரஹ்) உஸ்தாத் அவர்களது மரணச் செய்தியை தாங்கிக்கொள்ள இயலாமல் மரணச் செய்தியை அறிந்த மாத்திரத்திலேயே அவரும் மரணித்தார். அதற்குப் பிறகு உஸ்தாத் மரணிக்கவில்லை, அது வெறும் செய்திதான் என்பது தெரியவந்தது. இப்படியான நிகழ்வு நடப்பது மிகவும் அரிதான ஒன்றாக இருந்தாலும் ஆசிரியர்களை நேசிப்பது அவர்களுக்காக எதனையும் இழப்பது கடந்தகால தலைமுறையின் தனிப்பெரும் அடையாளமாக விளங்கியது.

தொடரும்...



உலக கால்பந்து போட்டி - கத்தார் நாட்டின்

# முஃப்தாஹ் அல்கானி முதல் மனிதரல்ல.! எங்களுக்கு நீண்டப் பட்டியல் உண்டு.!!

" Ganim Muftah is not first, We have a long list"

சமீபத்தில் கத்தாரில் உலக கோப்பை போட்டியில் திருமறையை தனது தித்திக்கும் குரலில் ஓதி துவங்கி வைத்தார் முஃப்தாஹ் அல்கானிம். பாதி உடல் கொண்ட இந்த இளைஞர் முழு உடல் கொண்ட அனைவரையும் திரும்பி பார்க்க வைத்தார். இவரை அறிந்து இவரது முகநூல், யூடியூப் அதிகார பக்கத்தை மக்கள் பின் தொடர்ந்தபோது, நான் ஊனமுற்றவன் அல்ல என்னால் எதையும் செய்ய இயலும். கடலில் நீந்தவும் முடியும் சாலையில் தனியாக காரை இயக்கவும் முடியும் என்பதை நிரூபித்து "நிஜத்தில் ஊனம் என்பது உள்ளத்தின் ஊனம்தான் உடலின் ஊனம் என்பதே கிடையாது" என்பதை அவரது காணொளி காட்சிகள் மக்களை உணரச் செய்தன.

இஸ்லாமிய வரலாற்றில் மாற்றுத்திறனாளி களை குறித்து நாம் தேடினால் ஒரு நீண்ட பட்டியலை நம்மால் கூற முடியும். இஸ்லாமிய உலகம் மாற்றுத்திறனாளிகளுக்கு மிகப்பெரிய நன்றிக் கடன்பட்டுள்ளது, என்று கூறினாலும் அது மிகையல்ல.

இரு கண்கள் தெரியாத அப்துல்லாஹ் இப்னு உம்மி மக்தூம் (ரலி) அவர்களை தான் நபி (ஸல்) அவர்கள் போருக்கு செல்லும் போது மதீனாவின் பொறுப்பாளராக நியமித்து சென்றார்கள்.காதிஸிய்யா என்ற மாபெரும் போரில் முஸ்லிம்களது கொடி இவரிடமே வழங்கப்பட்டது

முதன்முதலாக மக்காவில் பகிரங்கமாக குர்ஆனை ஓதிய இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்களது இரண்டு சூம்பிய கால்களை பார்த்து ஸஹாபிகள் நகைத்தபோது நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்விடத்தில் உஹத் மலையை விட இந்த கால்கள் கனமானது என்று கூறினார்கள்.

அம்ர் இப்னு ஜுமூஹ் (ரலி) அவர்கள் கால் ஊனமுற்ற ஸஹாபி. உஹதில் கலந்துகொள்ள அனுமதி கேட்டபோது அர்ஷின் அதிபதியே சலுகை அளித்தபோதும் கலந்தே தீருவேன் என்று கூறிக் கலந்துகொண்டார். தனது இன்னுயிரை தியாகம் செய்தார்.

அல்லாஹ் நேசிக்கும் இரண்டு குணங்கள் உங்களிடம் உள்ளது என்று நபி (ஸல்) அவர்கள் பாராட்டிய அஹ்னஃப் இப்னு கைஸ் (ரலி) அவர்கள் வளைந்த கால்களுடையவர்.

ஹதீஸ் கலையின் ஜாம்பவானாக விளங்கிய இமாம் கதாதா (ரஹ்) அவர்கள் பிறவியிலேயே இரு கண்களும் குருடாக பிறந்தவர்.

இமாம் மஸ்ரூக் (ரஹ்), ஆயிஷா (ரலி) அவர்களது பிரியத்திற்குரிய மாணவர். போரில் ஏற்பட்ட காயத்தால் இமாம் அவர்களது இரு கைகளும் செயலிழந்தது. இமாம் ஷுரைஹ் (ரஹ்) அவர்களை விட இமாம் மஸ்ரூக் (ரஹ்) அவர்கள், ஃபத்வா வழங்குவதில் திறமை மிக்கவர் என்று போற்றப்படுபவர்.

ஒரு கண் குருடு, உடலின் ஒரு பக்கம் முழுக்க வாதம், கூன் முதுகு வித்தியாசமான உருவத்தை கொண்டவரான இமாம் அதா இப்னு அபி ரபாஹ் (ரஹ்) அவர்களே ஹஜ் சம்பந்தப்பட்ட சட்டங்களை இந்த சமூகத்தில் அதிகம் அறிந்தவர். மன்னர் அப்துல் மலிக் இப்னு மர்வான் ஹஜ் சட்டம் சம்மந்தப்பட்ட ஃபத்வாக்களை இவரை தவிர வேறு யாரும் வழங்க கூடாது என்று உத்தர

விட்டு புகழாரம் சூட்டினார்.

நபி யூசுஃப் (அலை) அவர்களுக்கு பிறகு கனவுகளுக்கு விளக்கம் அளிக்கும் இறை அருளை பெற்ற இமாம் இப்னு ஸிரீன் (ரஹ்) அவர்கள் இரு காதும் கேட்காதவர்.

"நபி (ஸல்) அவர்கள் உன்னோடு பேச வேண்டும் என்றால் திர்மிதியை படியுங்கள்" என்று கூறி அற்புதமான ஹதீஸ் கிரந்தத்தை இந்த உம்மத்திற்கு அர்ப்பணித்த இமாம் திர்மிதி (ரஹ்) அவர்கள் இந்த ஹதீஸை திரட்ட பெறும் முயற்சி எடுத்ததன் காரணத்தால் தனது கண் பார்வையை இழந்தார்.

தனது எண்பது வயதுவரை தான் கலந்து கொண்ட எந்த போர்களத்திலும் தோற்காது ஸ்பெயினின் வெற்றியாளராக கருதப்படும் மூஸா இப்னு நுஸைர் (ரஹ்) ஒரு கால் ஊனமுற்றவர். "எனக்கு கீழ்ப்படிந்தால் ரோம பேரரசை வென்று காட்டுவேன்" என்று கூறினார்.

தஃப்ஸீர் கலையின் தலைமை இமாம் என்று போற்றப்படும் இமாம் ஸமக்ஷரி (ரஹ்) ஒரு கால் ஊனமுற்றவர்.


மிகப்பெரிய தாபியீன்களில் ஒருவரான இப்ராஹிம் நஃகயீ (ரஹ்) ஹனஃபீ மத்ஹபின் முன்னோடியாக திகழ்ந்த இவர் ஒரு கண் பார்வையற்றவர்.

உஸ்மானிய்யா பேரரசின் மிகப்பெரிய மருத்துவரான தாவூத் அல்அன்தாகி (ரஹ்) பல மொழிகளை கற்றறிந்தவர். மூன்று பாகங்களை கொண்ட இவர் எழுதிய தத்கிரா என்ற நூல் இன்றும் மருத்துவ உலகில் ஒரு மைல்கல் என்றே கருதப்படுகிறது. இந்த நூலில் மருத்துவ சக்தியை கொண்ட 3000 செடிகளை ஆய்வு செய்து எழுதி யுள்ளார் ஆனால் இவர் ஒரு பிறவி குருடர்.

இதே காலகட்டத்தில் வாழ்ந்த மற்றுமொரு மொழியியல் அறிஞர் அல்முஃகஸிஸ் என்ற நூலை எழுதியவர் இந்த நூல் 17 பாகங்களை கொண்ட நூல். ஒவ்வொரு பாகமும் 300 க்கும் அதிகமான பக்கங்களை கொண்டது. இவரும் இரு கண் இல்லாதவர். இன்னும் இருக்கிறது ஏராளம்.. ■

தொகுப்பு:
**மௌலவி நியாசுதீன் புகாரி நத்வி**


## இப்பொழுது பரபரப்பான விற்பனையில்




**வேர்கள் பதிப்பகம்,** சென்னை

தொடர்புக்கு : 7401213394, 8148129887

வாட்ஸ்ஆப் வழியாக ஆர்டர் செய்ய : 9786214186



# மனித உள்ளங்களை மடைமாற்றம் செய்த சுல்தான்!

சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்) அவர்களது ஆட்சியில் திருட்டிலும், வழிப் பறியிலும் ஈடுப்பட்டுக் கொண்டிருந்த முஸ்லிம் களை, ஒன்றுத் திரட்டி அவர்கள் அனைவர்களது சாமார்த்தியத்தை அரசாங்கத்திற்கு உதவியாக பயன்படுத்த வேண்டும் என்று எண்ணினார். சிலுவை யுத்தக்காரர்களோடு போர் தொடர் படியாக நடந்துக் கொண்டிருப்பதால், இவர்கள் அனைவரிடமும் சிலுவை யுத்தகாரர்களுக்கு எதிராக இவர்களது சாதுர்யத்தை காண்பிக்கு மாறு வேண்டினார்.

சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்) அவர்களது கட்டளையை, இந்தக் கூட்டம் சிறந்த முறையில் நிறைவேற்றியது. இருள் சூழ்ந்து சிலுவை யுத்தகாரர்கள் நன்கு தூக்கத்தில் அயர்ந்திருக்கும் நேரத்தில் அவர்களது அறைகுள் திடீரென்று நுழைந்து அவர்களை பீதியில் ஆழ்த்தினார்கள். இது மிகப்பெரும் அச்சுறுத்தலை எதிரிகளுக்கு மத்தியில் ஏற்படுத்தியது. இந்த அச்சுறுத்தலானது அவர்களை உறங்கவிடாமல் இடையூறுச் செய்தது.

தனது மதிநுட்பத்தால், சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்)அவர்கள், திருட்டு மற்றும் வழிப்பறியில் ஈடுபட்டு வந்தவர்களை சமூகத்தை விட்டு ஒதுக்கவில்லை,இவர்கள் பாவம் செய்யக் கூடிய கூட்டம் என்று இவர்களை புறம்தள்ளவு மில்லை. மாறாக இறைவழியில் போர்ச் செய்யக் கூடிய உத்தமர்களாக மாற்றினார்கள்.சுல்தான் அவர்கள் கொடுத்த பணியை செவ்வனே செய்து அவர்கள் அனைவருமே தாங்கள் இதுவரைச் செய்து வந்த பாவத்திற்காக தவ்பா செய்தார்கள்.

ஒரு நாள் சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்) அவர்களது படைத்தளபதிகளில் ஒருவர், சிலுவை யுத்தகாரர்களது கூட்டத்தைச் சார்ந்த பெண்ணோடு சுல்தான் அவர்களிடம் வந்தார். அச்சத்தால் அவள் நடுங்கிய வண்ணம் அழுது கொண்டே இருந்தாள். படைத்தளபதி சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்) அவர்களிடம் இந்த பெண் சிலுவை யுத்தகாரர்களது நாட்டைச் சார்ந்தவள் உங்களிடம் ஏதோ கூற வேண்டும் என்று கூறினாள், ஆதலால் அழைத்து வந்தேன் என்றார்.

உடனே சுல்தான் அவர்கள் மொழிபெயர்ப் பாளரிடம் இந்த பெண் வந்ததற்கான கார ணத்தை கேட்குமாறு கூறினார்: "அதற்கு அந்த பெண் நேற்றிரவு முஸ்லிம் திருடர்கள் எனது கூடாத்திற்குள் நுழைந்து எனது அன்பு மகளை கடத்திச் சென்று விட்டார்கள். எனது புகாரை எனது நாட்டு கிறிஸ்துவ மன்னரிடம் கூறியப் போது முஸ்லிம் மன்னர் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்) அவர்கள் கருணை உள்ளம் கொண்டவர். அவரிடம் உங்களை அனுப்பிவைக்கிறோம். அவரிடம் சென்று நிகழ்ந்ததைக் கூறு என்றார்கள் இதுவே எனது வருகைக்கான காரணம்."


அந்த பெண்ணின் அழுக்குரல் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்) அவர்களை மிகவும் வருத்தத்திற் குள்ளாக்கியது. எதிரிகளிடம்கூட மனிதநேயத்தை காண்பிக்கும் குணம் படைத்த ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்) அவர்கள், உடனே சந்தைக்கு படைவீரர்களை அனுப்பி அந்த சிறியக் குழந் தையை விலைக்கொடுத்து யார் வாங்கினார் என்று கண்டறிந்து அவருக்கு அந்த தொகையை வழங்கி அந்த சிறியப் பெண் குழந்தையை மீட்டு வருமாறு கட்டளையிட்டார்.

சிறிது நேரத்தில் குதிரை வீரர் ஒருவர் பெண் குழந்தையை தோளில் சுமந்தவாறே வந்தார். குழந்தையை பார்த்த மகிழ்ச்சியில் கீழே விழுந்த தாயாரது முகத்தில் மண் புழுதி படர்ந்தது. அவளது குழந்தை அவளிடம் பத்திரமாக ஒப்படைக்கப்பட்டது. தாயையும் சேயையும் பத்திரமாக அனுப்பிவைத்தார்கள்.

**மூலம் : சீரத்து ஸலாஹுத்தீன் அய்யூபி**
**தமிழில்: மௌலவி நியாசுதீன் புகாரி நத்வி**


vaigarai velicham official

# சமுதாயத்தை பிளவுபடுத்திய வஞ்சகக் குழுக்கள்



ஹாஜி.பீ.எம்.அப்துல் கரீம்
கஸைச்சல்

மதீனாவில் நபிகள் நாயகம் (ஸல்) யூதர்களோடு, நஸாறாக்களோடு மற்றும் பலப் பிரிவினவர்களோடும் உடன்படிக்கை செய்து சமாதானமும் ஒற்றுமையும் ஏற்பட வழிவகை செய்தார்கள். ஒரு தலைவன் நாடாளும்போது பல்வேறு மத கலை, கலாச்சாரங்களைப் பின்பற்றும் மக்களோடு எவ்வாறு நாம் வாழ வேண்டும் என்பதை நம்மவர்களுக்கு வாழ வழிவகை செய்துள்ளார்கள்.

மதீனாவில் ஆட்சித் தலைவராக இருந்தபோது நபிபிரானை யூதர்கள் உடன்பாட்டிற்கு மாற்றமாக பல தில்லுமுல்லுகளை ஏற்படுத்தினர். முதலாவதாக இஸ்லாமிய ஆரம்பகால முஸ்லீம்களுக்கிடையே பிளவை உண்டு பண்ணுவது, இரண்டாவது முனாபிகீன்யென்னும் நயவஞ்சகர்களை சமுதாயத்தில் ஊடுருவச் செய்து சமுதாயத்தை நலிவடையச் செய்வதும் யூத சதியின் பிரதான நோக்கமாக இருந்தது.

ஷாஸ் இப்னுகைஸ்யென்னும் வயோதிக யூதன் முஸ்லிம்கள் மீது குரோதமும், பொறாமையும் அதிகம் கொண்டு வாழ்ந்தான். இஸ்லாமில் இணைவதற்கு முன்பு அவ்ஸ், கஸ்ரஜ் குலத்தார் குலச்சண்டையை தொடர்கதையாக நடத்தி இருவர்க்கத்தாரும் இஸ்லாத்தில் இணைந்தபின் சகோதரர்களா வாழ்வதைப் பார்த்த யூதர்கள் இவர்களை பழயபடி மோத வைக்கத் திட்டம் தீட்டினார்கள். ஷாஸ் இப்னு கைஸ்யென்னும் யூதன் ஓர் இளம் யூதச்சிறுவனை அவ்ஸ், கஸ்ரஜ் ஓர் இடத்தில் சதோதர உறவோடு இருப்பதை பார்த்து அவ்விடம் அனுப்பி இரு குலத்தாரிடையே இரு குலமும் முன்பு பரம்பரையாக பல ஆண்டுக் குலச்சண்டை போட்டதையும் இல்லாத வார்த்தைகளை எல்லாம் மிகை படச்சொல்லி அவ்ஸ், கஸ்ரஜ் கிளையார்களை மோதும்படியான சூழ்நிலையை ஏற்படுத்தினான். இதனால் இஸ்லாத்தில் இணைந்து ஒற்றுமையோடு வாழ்ந்த இவ்விரு கிளையாரும் பழயபடி மோதத் தலைப்பட்டனர்.

அவ்ஸ், கஸ்ரஜ் கிளையார் இஸ்லாத்தில் இணைந்து சகோதர பாசத்தோடு வாழ்ந்ததை சகியாத யூதர்களின் சதிக்காரணம் இரு கிளையாரும் மீண்டும் போருக்கு தயாராகினர். இது விபரம் கேள்விப் பட்டு நபிகள் கோமான் முஹாஜிர் தோழர்களோடு அன்ஸார் தோழர்களின் இருப்பிடம் சென்றனர்.

அன்ஸார் தோழர்களான அவ்ஸ், கஸ்ரஜ் கூட்டத்தார்களான முஸ்லீம்களே! அல்லாஹ்வை அஞ்சுங்கள். அல்லாஹ்வை அஞ்சுங்கள். நான் உங்களோடு வாழும் போதே அறியாமைக்காலச் செயல்களை செய்கிறீர்களா? அல்லாஹ் இஸ்லாத்தின் மூலம் உங்களை நல்வழிப்படுத்தினான். அதன்மூலம் உங்களை கண்ணியப்படுத்தினான். உங்களை அய்யாமுல்ஜாஹிலித் காலத்தை விட்டும் தடுத்திருக்கிறான். இறை நிராகரிப்பிலிருந்தும் உங்களிடையே அன்பு பிணைப்பை ஏற்படுத்தியிருக்கிறான். இதற்கு பிறகுமா சண்டை போட எத்தனிக்கிறீர்களென உருக்கமான உரையை நபிபிரான் ஆற்றினார்கள்.

நபிகள் நாயத்தின் உருக்கமான உரை கேட்டு அவ்ஸ், கஸ்ரஜ் கூட்டத்தார் ஒருவரோடொருவர் கட்டி அணைத்து தவறை நினைத்து அழுதனர். இது எதிரிகள் போட்ட சூழ்ச்சியென்பதை அறிந்து மனம் வருந்தினர். ஷாஸ் இப்னு கைஸ் யென்னும் யூதவயோதிகனின் சதியை வல்ல

அல்லாஹ் பெருமானார் மூலம் முறியடித்தான்.

இஸ்லாத்தில் ஆரம்ப காலத்தில் முஸ்லீம்களாக சேரக்கூடியவர்களை வேண்டுமெனவே குழப்பி இஸ்லாத்தில் சேர்ந்து பிறகு மதம் மாற தூண்டும் செயலை ஒரு குழு செய்து வந்தது. மேலும் வியாபாரம் சம்பந்தமான கொடுக்கல் வாங்கலில் யூதர்கள் மூலம் முஸ்லீம்கள் பல இன்னல்களுக்கு ஆளாக்கினர். முஸ்லீம்களுக்கு பணம் கொடுக்க வேண்டியதிருந்தால் இழுத் தடிப்பது அவர்கள் தர வேண்டியதிருந்தால் கறாலாக வாங்குவது போன்ற முறைகள் கையாளப்பட்டது இதெல்லாம் பத்ர் யுத்தத்திற்கு முன்பு உள்ள நிலையாகும்.

பத்ர் யுத்தத்திற்குப் பிறகு யூதர்களுக்கு இஸ்லாத்தின் மீதும் நபிபிரான் மீதும் பொறாமை ஏற்பட்டது. யூதர்களில் மூன்று பிரிவினரில் கைனுகா கிளையினரேமிகவும் மோசமானவர்கள் முதலில் பெருமானாரோடு ஏற்பட்ட உடன் படிக்கையை முறித்தவர்கள் இவர்களே.

யூதர்களில் அப்இப்னு அஸ்றப் என்பான் முதல் எதிரியாக செயல்பட்டான். இவனுடைய கைனுகாகிளை மதீனாவில் வசித்தவர்கள் சாய மிடுதல், இரும்பு வேலை பாத்திர தயாரிப்புயென பல தொழில்களை செய்தனர். இவர்களிடம் போர் தளவாடங்களும் ஏராளம் இருந்தது. இவ்யூதர்கள் முஸ்லீம்களுக்கு இடையூறு விளைவித்தனர். பத்றுபோரை வைத்து முஸ்லீம்களை தமாஸ் செய்து வம்புக்கு வக்கணை பேசினர். தங்கள் கடை வீதிக்கு வரும் முஸ்லீம்களை கிண்டல் செய்தனர். அதிலும் பெண்களை கிண்டல் செய்ய ஆரம்பித்தனர்.

நபிகள் நாயகம் யூதர்களை ஓர் இடத்தில் கூட்டி அருள் எச்சரிக்கை செய்தனர். யூதர்களே! குறைஸியர்களுக்கு ஏற்பட்ட தோல்வியை உங்களுக்கு எச்சரிக்கையாக சொல்கிறேன். தோல்வி ஏற்படுவதற்கு முன்பு இஸ்லாத்தில் இணைந்து விடுங்களென அவ்யூதர்களைப் பார்த்து நபிபிரான் உபதேசித்தனர். முஹம்மதே! குறைஷியர் போர் செய்ய தெரியாதவர்கள் நாங்கள் போர் முறை தெரிந்தவர்கள். எங்களோடு போரிட்டால் எங்கள் போர் வலிமை தெரியுமென பதிலுரைத்தனர். அப்பொழுது இறைவனின் கீழ் குறிப்பிடும் இறைவசனத்தை இறக்கியருளினான்.

எவர்கள் இவ்வேதத்தை நிராகரிக்கிறார்களோ அவர்களுக்கு நபியே! நீங்கள் கூறுங்கள் “அதிசீக்கிரத்தில் நீங்கள் வெற்றி கொள்ளப்படுவீர்கள். அன்றி (மறுமையில்) நரகில் சேர்க்கப்படுவீர்கள். அது மிகக்கெட்ட தங்குமிடம். பத்ருப் போர்களத்தில் சந்தித்த இரு சேனைகளில் நிச்சயமாக உங்களுக்கொரு அத்தாட்சியிருந்தது. ஒன்று அல்லாஹ்வின் பாதையில் போர் செய்யும் கூட்டம். மற்றொன்று நிராகரிப்பவர். அல்லாஹ்வின் பாதையில் போர் புரிவோரை போர்களத்தில் எதிராளிகள் இரு மடங்காக கண்டனர். அல்லாஹ் தான் விரும்பியவர்களை தன் உதவியை கொண்டு பலப்படுத்துகிறானென்ற வசனம் கைனுகா கூட்டத்தை எச்சரிப்பதாக இறங்கியது. பெருமானார் கைனுகா கூட்டத்தினர் வாதத்தை கேட்டு அமைதியடைந்தனர்.

கைனுகா யூதர்கள் முஸ்லீம்களை பல வழிகளில் இன்னல் செய்தனர். ஓர் அரபி பெண் ஒட்டகத்தின் மீது விரிக்கப்படும் தோல் விரிப்பை விற்க கைனுகா பிரிய கடை வீதிக்கு போனபோது அப்பெண் ஒரு பொற்கொல்லன் கடை அருகே பெற வேண்டிய தொகையை பெற காத்திருந்தாள். அவளிடம் பர்தாவை மாற்ற யூதர்கள் வேண்டினர். அவள் மறுத்தாள் பொற்கொல்லன் அரபி பெண்ணின் ஆடையை சூழ்ச்சி செய்து அகலச் செய்தான். இதனை பார்த்த யூதர்கள் கொல்லென சிரித்தனர். இதனால் அரபி பெண் வெட்கி நாணினாள். இது கண்ட ஒரு முஸ்லீம் பொற்கொல்லனை கொன்றுவிட்டார். யூதன் பொற்கொல்லனாக இருந்ததால் யூதர்கள் கும்பலமாக முஸ்லீமை கொன்றனர். இதன் தொடர்ச்சியாக கைனுகா யூதர்களோடு பெருமானார் போர் பிரகடனம் செய்தனர்.

ஹிஜ்ரி 2 ஷவ்வாப் பிறை 15 சனிக்கிழமை தொடங்கி 15 இரவுகள் முற்றுகை நடைபெற கோட்டைக்குள் பதுங்கினர். யூதர்கள் நபிபிரான் கட்டளையை ஏற்பதாக யூதர்கள் சொல்லவும் அப்துல்லா இபுனு உபை நயவஞ்சகன் பெருமானாரிடம் யூதர்களை மன்னிக்க மன்றாடினான். நபிபிரான் அவன் வேண்டுகோளை புறக்கணித்தனர். அவன் நபிபிரான் சட்டைக்குள் கையை போட்டு வற்புறுத்தியும் நபிபிரான் மறுத்தனர்.

நபிகள் நாயகம் முகக்குறிப்பு அறிந்து தோழர்கள் திகைத்தனர். இந்நிகழ்வு நடைபெறும் போது அப்துல்லாஹ் இப்னு உபை இஸ்லாத்தில்

இணைந்து ஒரு மாதம் இருக்கும். அவன் கோரிக்கையை ஏற்று யூதர்களை விடுதலை செய்து அனைவரும் சிரியாவுக்கு நாடு கடத்தப் பட்டார்கள்.

அப்துல்லாஹ் இப்னுஉபை போன்ற முஸ்லீம் வேடம் பூண்டவர் பெருமானார் காலத்திலேயே இருந்துள்ளனர். முஸ்லீமாக நடித்து இஸ்லாத்தை ஒழிக்க முற்பட்ட ஓர் கூட்டம் அன்றும் இன்றும் என்றும் இருப்பர்.

மதீனாவில் மஸ்ஜிதுந்நபவி இருக்க மாற்று ஓர் பள்ளிகட்ட அப்துல்லாஹ் இபுனு உபையும் கூட்டமும் சதித்திட்டமிட்டு ஓர் இடத்தை தேர்வு செய்து பள்ளிவாசல் கட்டி அதை திறக்க நபி பிரானை அழைத்தனர். இப்பள்ளி வாசலில் தங்களுடைய முனாபிக் தன்மையை அரங்கேற்றலாமென எண்ணினர். சூழ்ச்சியாளனிலும் சூழ்ச்சியாளனான அல்லாஹ் இச்சதித்திட்டத்தை நபிகள் நாயகத்திற்கு வஹீ மூலம் (இறையறிவிப்பு) புதிய பள்ளி வாசல் குறும்பு மனப்பான்மையாலும் முஸ்லீம்களை பிரிக்கும் மனப்பான்மையாலும் கட்டப்பட்ட தென்று 9:107, 108 வசனம் மூலம் எச்சரித்தான். இப்பள்ளி வாசலை எரிக்க நபிபிரான் உத்தர விட்டனர். இச்சதித்திட்டம் இறை எச்சரிக்கை யால் நிர்மூலமாக்கப்பட்டது.

அன்னை ஆயிஷா நாயகி மீது பொய் புனைந்து பெருமாருக்கு அவப் பெயரை ஏற்படுத்த முனைந்து இறையறிவிப்பு மூலம் தெளிவு ஏற்பட எதிராளி சதி பொய்த்தது. யூதர்கள், நயவஞ்சகர்கள் மறைமுகமாக பல வியூகங்களை ஏற்படுத்தி அதிலெல்லாம் தோல்வி யுற்றனர்.

மதீனாவில் யூதர்களுக்கும் பெருமானாருக்கும் ஏற்பட்ட உடன்படிக்கைப்படி நபி (ஸல்) நீதிபதி. ஆனால் நீதியில் ஏழைக்கும், வசதி படைத்தவ னுக்கும் பிரச்சனை எழும்போது நீதி விசயத்தில் யூதர்கள் தலையிட்டு குளப்பம் விளைவித்தனர். பெருமானருக்கு உணவில் விசமிடவும் கொல்லவும் பலவித சூழ்ச்சிகளை செய்தனர்.


சமுதாயத்தில் பல்வேறு சூழ்ச்சிகளை செய்ய முயன்றும் இறைவன் பெருமானாரை காப்பாற்றி இறுதி ஹஜ்ஜில் இன்றுடன் இஸ்லாமிய மார்க்கத்தை பூர்த்தி செய்து பரிபூரணமாக்கி இஸ்லாத்தை மக்கள் பின்பற்றும் நெறியாக ஆக்கியுள்ளேன் என்ற இறைவசனத்தின் மூலம் இஸ்லாத்தை பூரணப்படுத்தினான். இன்று இஸ்லாம் உலகில் பெருமளவு மக்கள் பின்பற்றக் கூடிய ஒரு மார்க்க நெறியாகவுள்ளது. எதிர்ப்பு களுக்கிடையே இன்று உலகில் பரவும் நெறியாகவும் உள்ளது.

நாம் வாழும் இக்காலத்திலும் வாழுமிடங் களில் நகர்களில் நாட்டில் சமூகத்தைப் பிளவு படுத்தும் ஒரு குழு இருந்தே வருகிறது. இது நம் எதிரியைவிட ஆபத்தானது என நினைத்து நாம் செயல்பட வேண்டும்.

கண்ணின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க
முன்னின்று பின்நோக்காச் சொல்

என்ற பொருள் பொதிந்த வள்ளுவனின் வாக்ககாகும்.

நாம் திருமறை நபிவழியை வாழுமிடங்களின் பின்பற்றி ஒழுகினால் வாழுமிடம் அமைதி பூங்கா வாகத் திகழும். உலகம் அமைதி அடையும்.




# போலி NIA அதிகாரிகளாக பா.ஜ.க.வினர்

## பொதுமக்கள் ஜாக்கிரதை

சென்னை, டிசம்பர்-13, இங்கே 6 பேர் கொண்ட ஒரு குழு அப்துல்லாஹ் என்பவரின் கடையில் சோதனை செய்ய வேண்டும் எனக்கூறி இருக்கின்றார்கள். தாங்கள் என்.ஐ.ஏ. என்ற தேசிய புலனாய்வுக் குழுவைச் சார்ந்தவர்கள் என்றும் கூறி இருக்கின்றார்கள்.

என்.ஐ.ஏ. - அல்லது தமிழ்நாடு காவல்துறை என்றால், உடனேயே கடையையும் வீட்டைத் திறந்துவிட்டிட வேண்டும், அவர்கள் அள்ளிக் கொண்டு சென்றபின் இருப்பதைக் கொண்டு உயிர் வாழ்ந்திட வேண்டும் என்பது இப்போது விதி என முஸ்லிம்கள் எடுத்துக் கொள்கிறார்கள்.

ஏனென்றால் தமிழகமெங்கும் காவல்துறையினர் நடத்திவரும் சட்டத்திற்கு புறம்பான அதிரடி சோதனைகள் அப்படியொரு எண்ணத்தை முஸ்லிம்களின் மனதில் பதிய வைத்துள்ளது. கோவை சிலிண்டர் வெடிப்புத் தொடர்பாகத் தான் வந்திருப்பதாகக் கூறி இருக்கின்றார்கள்.

இது முஸ்லிம்களை முதல்வருக்கு எதிராகத் திருப்பிடும் மிகப்பெரிய சதியின் ஒரு பகுதி என்பதை வைகறை வெளிச்சம் டிசம்பர் 2022 இதழில், கள ஆய்வுகள் வழி தெளிவுபடுத்தி இருந்தோம். (வாசகர்கள் அதனைப் படிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.)

இந்தப் பீதியால் பீடிக்கப்பட்ட மண்ணடி அப்துல்லாஹ், தன்னுடைய கடைக்கு வந்த அந்தப் போலி NIA - அதிகரிகளை நிஜ என்.ஐ.ஏ. அதிகாரிகள் என நினைத்து, கடையை திறந்து விட்டிருக்கின்றார். அவர்கள் கையில் கிடைத்தப் பணத்தையும், வேண்டிய அளவு செல்போன்களையும் அள்ளி மூட்டை கட்டிவிட்டு அங்கிருந்து, அவரை அவருடைய வீட்டிற்கு அழைத்துச் சென்றிருக்கின்றார்கள். வந்திருப்பது, வானளாவிய அதிகாரத்தைப் பெற்ற என்.ஐ.ஏ. என்பதால் அப்துல்லாஹ், வீட்டுக்கு அழைத்துச் சென்றிருக்கின்றார். அங்கேயும் பணத்தையும், தங்களுக்கு வேண்டியப் பொருள்களையும் மூட்டைக்கட்டி எடுத்துச் சென்றிருக்கின்றார்கள். மொத்தமாக இவர்கள், ரொக்கமாகவும், இதரப் பொருள்களாகவும் 20+10 30 இலட்சம் எடுத்துச் சென்றாக அவர்களே கூறி இருக்கின்றார்கள்.

ஆனால், இந்தச் சம்பவத்தை நன்றாக அறிந்த வழக்கறிஞர் ஒருவர், ஒரு கோடி ரூபாய்க்கு மேலாக இந்தப் போலி என்.ஐ.ஏக்கள் கொள்ளையடித்துச் சென்றதாக வைகறை வெளிச்சத்திடம் சொன்னார். இதில் உண்மை உள்ளது. ஏனெனில் இந்தப் போலி என்.ஐ.ஏ. அதிகாரிகளை எந்த நிஜ என்.ஐ.ஏக்களோ - நமது காவல்துறையோ கைது செய்யவில்லை. அவர்களாகப் பார்த்து சென்னை மண்ணடியிலுள்ள ஒரு நீதிமன்றத்தில் (George Town)-ல் சரணடைந்துள்ளார்கள். அவர்களே சொன்ன தொகைதான் 20+10 - 30 இலட்சம்.

இப்படிக் கொள்ளையடித்தவர்கள், தாங்கள் எடுத்துச் செல்லும் பொருள்களையெல்லாம் என்.ஐ.ஏ. அலுவலகத்தில் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம், போதிய ஆதாரங்களைத் தந்து எனக்கூறி சென்றிருக்கின்றார்கள்.

இந்த மொத்த நிகழ்வையும் சந்தேகப்பட்டு, தங்களோடு நித்தம் வாழ்ந்துகொண்டிருக்கும் சில காவலர்களிடம் சொல்லி இருக்கின்றார்கள். அவர்கள் அப்துல்லாஹ்வின் கடைக்கு சென்று CCTV பார்த்து இவர்கள் உண்மையான என்.ஐ.ஏ. அதிகாரிகள் இல்லை, எனத் தெரியவந்ததாம். ஆனாலும், அவர்களும் எதுவும் செய்ததாகத் தெரியவில்லை.


vaigarai velicham official

**இப்படி தங்களுடைய பெயரைத் தவறாகப் பயன்படுத்தியவர்கள் மீது, என்.ஐ.ஏ. எடுத்த நடவடிக்கை?**

மூத்த வழக்கறிஞர் ஒருவரோடு பேசிக் கொண்டிருக்கும் போது, அவர் இப்படிக் கூறினார்.

**என்.ஐ.ஏ. பாரதீய ஜனதா கட்சிக்குத்தானே வேலை செய்து கொண்டிருக்கின்றது என்பதை நன்றாகப் புரிந்துகொண்ட பா.ஜ.க.வினர் நாமே ஏன் என்.ஐ.ஏ.வாக மாறிடக்கூடாது என எண்ணிச் செயல்படுகின்றார்கள் என்றார்.**

பின்னர் அப்துல்லாஹ்வே மண்ணடி பகுதியில் வரும் முத்தையால்பேட்டை காவல்நிலையத்தில், புகார் ஒன்றை கொடுத்திருக்கின்றார்.

ஆனாலும் காவல்துறையினர் பாய்ந்துப் பிடித்ததாகத் தெரியவில்லை.

கொள்ளையடித்த போலி என்.ஐ.ஏவினர் தாங்கள் ஒதுக்க வேண்டியதையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு நீதிமன்றத்தில் சரணடைந்திருக்கின்றார்கள்.

இவர்கள் மூன்று, மூன்று பேராகப் பிரிந்து கொள்ளை அடித்துள்ளார்கள்.

அவர்களில் பலர், ஒன்றியரசை ஆளும், பாரதீய ஜனதா கட்சியைச் சார்ந்தவர்கள்.

எடுத்ததெற்கெல்லாம் கத்தும் பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை வாய்த் திறக்கவில்லை.

தமிழ்நாடு எந்த அளவுக்கு வெள்ளரிக்காய்ப் பட்டணமாக மாறி இருக்கின்றது என்பதற்கு இந்தப் போலி என்.ஐ.ஏக்களின் கொள்ளை ஓர் எடுத்துகாட்டு.

பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதாக இது தெரிகின்றது.

**வினாக்கள்?**

இந்த விவகாரத்தில் பின்வரும் வினாக்கள் எழுகின்றன...

மண்ணடியில் உலாவரும் உளவுத்துறையினர் CCTV என்ற தொலைக்காட்சிப் பதிவுகளைப் பார்த்து, வந்தவர்கள் என்.ஐ.ஏ. என்ற தேசியப் புலனாய்வுத்துறையைச் சார்ந்தவர்கள் அல்ல என்பதை எப்படிக் கண்டு பிடித்தார்கள்.

யார்? யார்? என்.ஐ.ஏ. என்ற தேசியப் புலனாய்வு முகமையில் இருக்கிறார்கள் என்பதற்காக போட்டோக்கள் இவர்களிடம் இருக்கின்றதா?

அல்லது என்.ஐ.ஏ. அதிகாரிகளிடம் காட்டி, இவர்கள் என்.ஐ.ஏ சார்ந்தவர்களா? எனக் கேட்டு அப்துல்லாஹ்வின் கடைக்கு வந்தவர்கள் என்.ஐ.ஏ.யைச் சார்ந்தவர்கள் அல்ல என்பதை ஊர்ஜிதம் செய்தார்களா?

நமது புலனாய்வு இதழ்கள் இவற்றையெல்லாம் கண்டுகொள்ளவில்லை.

இதில், இன்னொரு சாத்தியமும் இருக்கின்றது. போலி என்.ஐ.ஏ.வாக வந்தவர்கள் (லோக்கல்) வட்டார உளவுத்துறையினருக்கு ஏற்கெனவே தெரிந்திருக்க வேண்டும். அதனால் CCTV யைப் பார்த்தவுடன், இவர்கள் எந்தத் துறையையும் சார்ந்தவர்கள் அல்ல, நமக்கு நன்றாகத் தெரிந்தவர்கள் என முடிவு செய்திருக்கலாம். அதனால் சம்மந்தப்பட்டவர்களிடம், உடனேயே நீதிமன்றத்தில் சரணடைந்து விடுங்கள், காவல்துறையிடம் வேண்டாம் எனவும் அறிவுறுத்தி இருக்கலாம்.

ஆனால், பின்னர் அவர்கள் காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டார்கள். காவல்துறையினர் நீதிமன்றக் காவலிலிருந்து அவர்களை விடுவித்து, காவல்துறையின் கட்டுப்பாட்டின் கீழ்கொண்டு வந்திருக்கின்றார்கள். அதில்தான் இந்தப் போலி என்.ஐ.ஏக்கள், கொள்ளை அடித்தது ஒரு கோடிக்குமேல் இருக்கும் என்பது தெரிந்திட வந்துள்ளது.

**கைது செய்யப்பட்டவர்கள்**

1. புஷ்பராஜ், 2. கார்த்திக், 3. கேதரின், 4. கலா, 5. பாஸ்கர், 6. அமரான். இவர், ஒரு பாரதீய ஜனதா கட்சியின் செயற்பாட்டாளர்கள்.

ஆக பாரதீய ஜனதா கட்சியினர் முஸ்லிம்களைக் கொள்ளையடிக்க என்.ஐ.ஏ. போன்ற ஒன்றிய அரசின் நிறுவனங்களையே பயன்படுத்திடத் தலைப்பட்டுவிட்டார்கள். அந்த அளவுக்கு தைரியத்தைப் பெற்றுவிட்டனர்.

With Inputs from Some Lawyer **- MGM**
Based on TOI : 14/12/2022

# என்.ஐ.ஏ. ஒரு சமுதாயத்திற்கு (முஸ்லிம்) எதிரானதா?



## நாடாளும் மன்றத்தில் வைகோ கேள்வி!

**நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத் தொடரில் மதிமுக தலைவர் கேள்வி...**

இப்படி உண்மையைப் போட்டுடைத்த வை.கோ.விற்கு நன்றி. இதற்கு பாசிச அமைச்சர், இல்லை என்.ஐ.ஏ. யாருக்கும் எதிரானதல்ல என நீட்டி முழக்கி இருக்கின்றார். அத்தோடு ஒரு பொய்யையும், தங்கள் வழக்கமான பாணியில் கட்டவிழ்த்துவிட்டிருக்கின்றார். அது,

என்.ஐ.ஏ. பதிவு செய்த வழக்கில், பெரும் பாலும் தண்டனைகள் வழங்கப்பட்டதாகக் கூறி இருக்கின்றார்.



இவருடைய பதிலுக்கு நேர் மாற்றமாக, நாம் வைகறை வெளிச்சம், நவம்பர் இதழில் வெளி யிட்ட பி.யு.சி.எல். அறிக்கை குறிப்பிடுகின்றது.

அது, என்.ஐ.ஏ. தாக்கல் செய்த வழக்குகளில் 98% சதவீதம் வழக்குகள் பொய்யானவை. இதில் இன்னொரு விவகாரம், என்னவெனில் என்.ஐ.ஏ. பெரும்பாலான வழக்குகளை அதுவே முன்வந்து எடுப்பதில்லை. அதன்மீது திணிக்கப்படுகின்றது. இப்படி திணிக்கப்படும் வழக்குகள் 88% சதவீதம். மொத்த வழக்குகளில் 12 சதவீதம் மட்டுமே என்.ஐ.ஏ. முன்வந்து எடுக்கும் வழக்குள் (ஆதாரம் : PUCL அறிக்கை முழு அறிக்கையையும் படிக்க வைகறை வெளிச்சம், நவம்பர், 2022-ஐ படிக்கவும்.

88 சதவிகிதம், வழக்குகள் அதன்மீது ஏன் திணிக்கப்படுகின்றது என்றால் அந்தக் குற்ற சம்பவங்களில் இந்துத்துவ வாதிகள் ஈடுபட்டிருப் பார்கள். அவர் பழியை அப்பாவி முஸ்லிம்கள் மேல் போட்டிருப்பார்கள். அங்கே அந்த வழக்குகளில் இந்துத்துவத் தீவிரவாதிகளைக் காப்பாற்றியே ஆக வேண்டும் என்ற நிர்ப்பந்தம், அதே நேரத்தில் கைது செய்யப்பட்ட அப்பாவி முஸ்லிம்களுக்குத் தண்டனைகளைத் தந்தாக வேண்டும். அதற்கு நீதி மன்றத்தை வளைத்தாக வேண்டும் என்ற நிலை. இதனால்தான் என்.ஐ.ஏ.யிடம் வழக்குகள் திணிக்கப்படுகின்றன. இதற்கான அண்மைக்கால எடுத்துக்காட்டுதான் கோவையில் நடந்த கார் சிலிண்டர் வெடிப்பு, பா.ஜ.க. அண்ணாமலையும், கவர்னரும் என்.ஐ.ஏ-க்கு உடனேயே மாற்றிட வேண்டும் என எகிறி குதித்தார்கள். காரணம் உண்மை வெளிப்பட்டுவிடக்கூடாது என்பதுதான்.

இதனால் வை.கோ. போன்ற அரசியல் தலைவர்கள், முஸ்லிம்களை அழிக்கவா என்.ஐ.ஏ. எனக் கேட்டதில் நியாயமிருக்கின்றது. ஆறுதல் அளிக்கின்றது. அவர் கேட்டிருக்க வேண்டிய இன்னொரு கேள்வி, இந்துத்துவ தீவிரவாதத்தைப் பாதுகாக்கவா என்.ஐ.ஏ.? அடுத்த நாடாளு மன்றக் கூட்டத் தொடரில் அதையும் கேட்பார் என எதிர்பார்ப்போம். - இன்ஷாஅல்லாஹ்

- MGM



vaigarai velicham official



# பாசிசமும் வெளிநாட்டுப் பணமும்

## வெளிச்சத்திற்கு வர வேண்டிய வேடதாரிகள்

ஒரு நோக்கத்திற்காக ஒருவரைக் கொலை செய்வதற்கும், ஒரு குறிக்கோளுக்காக ஒருவர் இறப்பதற்கும் பெருமளவில் வேறுபாடுகள் இருக்கின்றன. இந்தியாவில் உள்ள மதப் பிரிவினைவாதிகள் ஒரு நோக்கத்திற்காக ஒருவரைக் கொலை செய்ய எப்போழுதுமே தயாராக இருக்கின்றனர்.

ஆனால் ஒரு பொழுதும் எந்தவொரு குறிக்கோளுக்காகவும் அவர்கள் தங்கள் இன்னுயிரை இழக்கமாட்டார்கள். தேசிய வாதத்திற்காகவும், சுதந்திரத்திற்காகவும், தங்கள் நாட்டின் பெருமை காக்கவும் பெருமளவில் இந்துக்கள் தங்கள் உயிரைத் தியாகம் செய்திருக்கின்றனர். அதே சமயம் 'இந்துயிஸம்' என்னும் கோட்பாட்டிற்காக தன்னுயிரை மாய்த்து தியாகியான ஒரு இந்துவைக்கூட வரலாற்றில் உதாரணமாகக்கூட காட்ட முடியாது.

உலகிலுள்ள மற்ற மதங்களில் தன்னுயிர் ஈந்த தியாகிகள் இருக்கின்றனர். தாங்கள் சார்ந்திருக்கும் மதங்களுக்காக தங்கள் உயிரையும் உடமைகளையும் தியாகம் செய்ததற்காக இன்றளவும் அவர்கள் நினைவு கூரப்படுகின்றனர்.

இந்துயிஸத்தில் இம்மாதிரியான பாரம்பரியம் இல்லை. ராணா பிரதாப், ராணி இலக்குமிபாய், லஜபதிராய் போன்றோர் இந்துக்களாக இருந்த போதிலும், இந்துயிசத்திற்காக இறக்கவில்லை.

ராமஜென்ம பூமியின் தலைவர் ராமச்சந்திர பரமஹன்ஸ் சர்ச்சைக்குரிய இடத்தில் கோயில் கட்டுவதற்கு அனுமதி தராவிடில் உயிரை மாய்த்துக் கொள்வேன் என்று மிரட்டியபொழுது, அரசுத் தரப்பினரும், மற்ற அனைவரும் பெரிதும் கவலையடைந்தனர். அவர்கள் அந்த அளவிற்குக் குழப்பமடைந்திருக்கத் தேவையில்லை.

ஏனெனில், சமீபத்திய புள்ளிவிவரத்தைப் பார்க்கும்பொழுது, எந்த இந்து ஆதிக்க வெறியாளர்களும் இந்துயிஸம் என்னும் கோட்பாடிற்காக எந்தத் தியாகமும் செய்து விடவில்லை என்பது புலனாகிறது.

இத்தகைய இந்து வெறியாளர்கள் வெறும் காகிதப் புலிகள்; அவர்கள் சிறுபான்மையினரின் மீது தாக்குதல் நடத்துவதில் மட்டும்தான். அதுவும் அரசின் உறுதுணையோடு சாதனை புரிந்திருக்கின்றனர். மேற்கு வங்கத்தைப்போல், தங்கள் ஈனச் செயல்களுக்கு உறுதுணையில்லாத மாநிலங்களில் அவர்கள் அனல் பறக்கும் பேச்சுக்களை மூட்டை கட்டி வைத்து, ஒழுங்காக நடந்து கொள்கின்றனர்.

அனைத்துத் தரப்புகளையும் சார்ந்திருக்கும் இந்து மதப் பிரிவினைவாதிகளுக்கு பதிலடி எவ்வாறு கொடுக்க வேண்டும் தெரியுமா? அவர்களுக்கென்று சட்டங்களைப் பிறப்பித்து, அந்தச் சட்டங்களை அவர்கள் மீறும் பொழுதெல்லாம் அவர்களைத் தண்டிப்பதுதான் அந்தப் பதிலடி

அம்மாதிரியான சமயங்களில் வரலாற்று உண்மை நிலைகளையும், கலாச்சார பொருள் விளக்கங்களையும் விவாதிப்பது என்பது அப்பிரிவினைவாதிகளை மேலும் தவறுகள் செய்யத்தான் ஊக்குவிக்கும். எனவே மதப் பிரிவினைவாதிகளிடம், கலாச்சாரத்தையும், கலை போன்றவற்றையும் பேசுவது என்பது எதிர் விளைவைத்தான் உண்டாக்கும்.

சட்டத்தை மீறும் எந்த மனிதனும் தண்டிக் கப்பட வேண்டும். இதைப்பற்றி விவாதிக்க எந்த அவசியமும் இல்லை. இத்தகைய மக்களுடன் இத்தகைய மக்களுடன் காலங்கடந்த பேச்சு வார்த்தை நடத்த எக்கச்சக்க காரணங்கள் இருக் கின்றன என்று அரசு கடுமையான குற்றங்கள் புரிந்ததின் அடிப்படையில் தண்டிக்க மறுக்கும் பட்சத்தில், அரசு அதனுடைய சட்டத்தை ஏன் இந்திய அரசியலைமைப்புச் சட்டத்தையே மாற்றிக் கொள்ளட்டும்.

கலவரம் நடந்த பல பகுதிகளை உதாரணங் களாக எடுத்துப் பார்க்கும்பொழுது அனைத்து சம்பவங்களிலும், குற்றவாளிகளுக்கு அரசின் உதவி நேரிடையாகவோ, மறைமுகமாகவோ கிடைத்திருக்கின்றது என்பது எவ்வித சந்தே தத்திற்கிடமின்றியும் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

இத்தகைய கலவரங்களில் கொல்லப்பட்ட சிறுபான்மை சமூகத்தினரின் எண்ணிக்கை, கொல்லப்பட்ட பெரும்பான்மை சமூகத்தினரின் எண்ணிக்கையை விட ஒப்பீட்டு அளவில் மிக மிக அதிகமாக இருந்தது.

1969ம் வருடம் அஹமதாபாத்தில் நடந்த கலவரத்தில் முஸ்லிம்கள் பெரும் எண்ணிக்கை யில் இறந்திருக்கின்றனர். டெல்லியிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் கிட்டத்தட்ட இரண்டா யிரம் சீக்கியர்கள் இறந்திருக்கின்றனர். அதேபோல், சிவசேனர்கள் பிவாண்டியில் வெறியாட்டம் நடத்திய பொழுதும் இது நிரூபணமாயிருக்கிறது.

26.2.2002ல் அகமதாபாத்தில் நடந்த கோத்ரா நிகழ்ச்சியும் இதைத்தான் காட்டுகிறது. கோத்ரா நிகழ்ச்சி நடப்பதற்கு முன்பாக, அஹமதாபாத் திற்கு சென்று கொண்டிருந்த சபர்மதி விரைவு வண்டியில் கரசேவகர்கள் கொல்லப்படுவதற்கு முன்பாக, பிப்ரவரி 24ம் தேதியன்று இதே ரயில் வண்டியில் பஜ்ரங்தன் ஊழியர்கள் முஸ்லிம் களைப் பலவித இன்னல்களுக்கு உட்படுத்தியிருக் கின்றனர். இஸ்லாமியப் பெண்களின் பர்தாக் களின் திரைகள் கிழித்தெறியப்பட்டன; பல குழந்தைகள் தாக்கப்பட்ட அதிர்ச்சிகரமான சம்பவங்கள் நடந்தன.

இந்துக்கள் என்று கூறிக்கொண்டு தாக்குதலி லிருந்து சில முஸ்லிம்கள் தப்பித்தனர். ஃபைஸா பாத்தில் மிகச் சிறிய அளவிலேயே அறியப்படு கின்ற ஜன் மோர்ச்சா என்ற பத்திரிகையில் பிப்ரவரி 25ம் தேதியன்று இச்செய்திகள் வெளி யாகியிருக்கின்றன.

கோத்ரா நிகழ்ச்சிக்குப் பின் நிகழ்த்தப்பட்ட படுகொலைகள், பாதிக்கப்பட்ட இந்துக்களின் மனவெளிப்பாடுகள்தான் என்று குஜராத் அரசும், அதன் ஆதரவாளர்களும், டெல்லிக்குச் சென்று நியாயம் கற்பிப்பதற்காக, பிப்ரவரி 24ம் தேதி நிகழ்ச்சி வேண்டுமென்றே மறைக்கப் பட்டிருக்கின்றது.

இது உண்மையாகவே இருப்பினும், மதவெறி யாட்டங்ளும், கலவரங்களும் காவல்துறை யையும், இராணுவத்தையும் தத்தம் பணியைச் செய்ய விடாமல் தடுத்த அரசின் துணையின்றி, நாள் கணக்காக நடந்துகொண்டிருக்க முடியாது.

நரேந்திர மோடி அரசியலமைப்பு சட்டப் படிதான் நடந்திருக்கிறாரா (அ) ஒரு இந்து வெறியராகச் செயல்பட்டிருக்கின்றாரா என்பதை உறுதி செய்ய பிரதமரின் தலையீடோ (அ) பாரதிய ஜனதா அமைச்சர்களின் தலையீடோ முற்றிலும் இல்லை.

மார்ச் 15 அன்று அயோத்யாவில் நடந்தது உச்சக்கட்டத்தின் வீழ்ச்சி என்று ஏன் கருதப்படு கிறது தெரியுமா? மக்கள், கரசேவகர்கள் ஒரு மன உறுதி வாய்ந்த, விசுவாசமிக்க கூட்டம் என்று நினைத்ததினால்தான்.

இந்த மதவெறியர்கள் ஒரு சவால் மிகுந்த சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டால், அவர்கள் அச்சூழலிருந்து தப்பி காணாமல் போய்விடுவர். ஏனெனில், அவர்கள் வெற்று வேட்டுப் பொய் யர்கள். இந்தக் குற்றச்சாட்டிற்கு பழமையானதாக இருந்தாலும் கூட, ஒரு வரலாற்றுப் பூர்வமான ஆதாரம் இருக்கின்றது. பிரிவினைக்குப் பிறகு சில மாதங்களிலேயே தில்லியின் மக்கள்தொகை பிரமிக்கத்தக்க வகையில் இரண்டு மடங்காகப் பெருகிவிட்டது. பாகிஸ்தானிலிருந்து வந்த அகதிகள் அதிக வெறுப்புடனும், கோபத்து டனும் இருந்தனர்.

இந்நேரத்தில்தான் இந்து மதவெறியர்களின் உணர்வுகள் உச்சக்கட்டத்தில் இருந்தன; மதக் கலவரங்கள் தில்லி நகரத்தையே ஆட்டம் காண வைத்தன. அதுவரையில் தில்லி ஓர் அமைதியான, ஆரவாரமற்ற பிரதேசமாக இருந்தது.

உண்மையைக் கூறினால், கவுன்சிலுக்குத்


vaigarai velicham official

தேர்ந்தெடுக்கப்பட்ட நபர் ஒரு முஸ்லிம்தான். மதக்கலவரங்கள் அபாயங்கள் உண்டாக்கும் சட்டத்திற்கு வந்தபொழுது ஜவஹர்லால் நேரு நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வரும் முயற்சியில் நேரடியாக இறங்கினார்.

கலவரத்தில் ஈடுபட்ட இந்து மகா சபையைச் சார்ந்த இந்துக்கள் தண்டனையிலிருந்து தப்பி விடக்கூடாது என்பதில் அதிக முனைப்புடன் இருந்தார். அனைத்து அரசு அதிகாரிகளுக்கும் முன்னுதாரணமாக அவர்கள் இயக்கத்தை தடை செய்து அவர்களைச் சிறையில் அடைத்தார்.

அவரது இத்தகைய நடவடிக்கை இந்து மகா சபையினரின் நடவடிக்கைகளை சிறிது காலத்திற்கு முடக்கி வைத்தது. அதுபோல் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி படுகொலை செய்யப்பட்ட பொழுது ராஷ்ட்ரீய ஸ்வயம் சேவக் அமைப்பைத் தடை செய்ததோடு மட்டுமின்றி, அதன்மீது கடும் நடவடிக்கையும் மேற்கொண்டார்.


இந்த ஆர்.எஸ்.எஸ். உறுப்பினர்கள் அப்பொழுது என்ன செய்தனர்? அவர்கள் சிங்கத்தைப் போல் கர்ஜித்து பிரதம மந்திரியை அணுகவில்லை. ஆட்டுக் குட்டிகளைப்போல் கதறிக் கொண்டு அவர் பின்னால் சென்றனர். கட்டிய கைகளுடனும், முழங்காலிட்டும், அவர்கள் தங்களின் மீது கனிவான நடவடிக்கை மேற்கொள்ளும்படி இறைஞ்சினர். ஆர்.எஸ்.எஸ். என்பது ஒரு கலாச்சார அமைப்பாக மட்டுமே செயல்படும். அரசியலில் ஈடுபடுவதற்குத் துளியும் ஆர்வங்காட்டாது என்று அரசிற்கு உறுதியளித்தனர்.

அனைத்துத் தரப்பினராலும் அறியப்பட்ட இந்து மதத்தில் வீரர்கள் என்று அழைக்கப்படுகின்ற இவர்களின் இக்கோழைத்தனத்தை வெட்ட வெளிச்சமாக்க நிறைய ஆவணங்கள் இருக்கின்றன.

இவர்களுக்குக் கற்பிக்கும் பாடம் மிக எளிமையானது. சட்டத்தை உடைத்தெறியும் இம்மத வெறியர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமாயின், அவர்கள் தங்கள் நிலையை உணர்ந்து ஒழுங்காக நடந்து கொள்வர். இச்சந்தர்ப்பத்தில் இந்து மகாசபையும் ஜனசங்கும் தேர்தல் கட்சிகள் என்ற அடிப்படையில் கூட காங்கிரஸ் கட்சியுடன் மோதுவதில் ஒரு பொழுதும் பொருத்தமில்லாதவர்கள் என்பதை நினைவுகூர வேண்டும்.

1951ம் வருடத்திலிருந்து 1967ம் ஆண்டு வரை, அதாவது பிரிவினைக்குப் பிறகு இருபது ஆண்டுகளாக ஒவ்வொரு தேர்தலிலும் காங்கிரஸ் கட்சிதான் வென்றது. இது எவ்வாறு நடந்திருக்க முடியும்? அனைவரும் தேர்தலில் இந்து மத ஆதிக்க வெறியர்கள்தான் வெற்றி பெறுவர் என்று நினைத்திருந்த பொழுது, காங்கிரஸ் வெற்றி அடைவதற்கு எது பிரதான காரணமாக இருந்தது தெரியுமா?

பெரும்பாலான இந்துக்கள் மதவாதிகள் அல்ல என்பதுதான். அவர்களுக்கும் தொழில்கள் இருந்தன; அவர்கள் பேண வேண்டிய குடும்பங்கள் இருந்தன; அவர்களுக்கும் எதிர் காலத்தைப் பற்றிக் குறிக்கோள்களும், கொள்கைகளும் இருந்தன. நேரு இந்த வகுப்புவாதிகளை, ஒன்றிற்கும் லாயக்கற்றவர்களாக எப்படி வைத்திருந்தார். தெரியுமா?



நேரு இந்திய நாட்டிற்கு ஒரு மாற்று பொருளாதாரத் திட்டத்தைவைத்திருந்தார். பக்ராதங்கள் திட்டத்தையும், பொக்காராபிலாய் இரும்புத்தொழில்களையும் அறிமுகப்படுத்தினார். நிலச் சீர்திருத்த திட்டத்தையும், ஐந்தாண்டுத் திட்டங்களையும் பொருளாதார சீர்திருத்தத்தின் முக்கிய அம்சங்களாக்கினார்.

காங்கிரஸ் அரசு அகதிகளுக்கு வீட்டு வசதிகள் உட்பட பல உதவிகளைச் செய்தது. இவ்விஷயங்களில்லாம். இந்து மதவாதிகள் பயனற்றவர்களாயிருந்தனர். ஒருநாடு ஏழ்மையிலும், பிணியிலும் இருந்தால் அதை எப்படிக் கையாள வேண்டும் என்பது பற்றிய எந்த அறிவும் அவர்களுக்கு இருந்ததில்லை. அவர்களால் கூற முடிந்ததெல்லாம் "இந்துமதம் ஆபத்தில் இருக்கிறது" என்பதை மட்டும்தான். "அயோத்யா" நிகழ்ச்சி ஒன்றிலிருந்து இந்து மதவாதிகள் அவர்களுடைய மதவெறிக் கொள்கைகளிலிருந்து இன்னமும் மாறவில்லை என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். அவர்களை வெறும் காகிதப் புலிகள்தான் என்று தோலுரித்துக் காட்ட நேரு போன்றவர்கள் இந்திய நாட்டில் இல்லை என்ற

மாறுதல் மட்டும் ஏற்பட்டிருக்கிறது.

இந்திரா காந்தியும், அவருடைய மகனும் மதவாதம் என்னும் துருப்புச் சீட்டை பரிதாப கரமான முறையில் கை யாண்டனர். நேருவிற்குப் பிறகு வந்த நிர்வாக வாரிசுகள், நடைமுறையில் இருக்கும் மதச்சார்பின்மை என்னும் தூண்களின் சக்தியை கணிக்கத் தவறி விட்டனர்.

வறுமையை, பசிக்கொடுமையை, பிணியை ஒழிப்பதற்கு ஏதுவான வழிமுறைகளில் இறங் காமல் அவர்களுடைய குறுகிய கால அனுகூலங் களுக்காக நாம் சிந்தித்துப் பார்க்க முடியாத அரசியல் அதிரடி நடவடிக்கைகளில் இறங்கினர்.

முன்பில்லாத அளவிற்கு மதவாதிகள் இன்று ஏன் வலுவாக இருக்கின்றனர்? நிர்வாக பொறுப் பிலுள்ள மதச்சார்பற்ற ஊழியர்கள் தங்கள் கடமைகளைத் துறந்துவிட்டு, மதப் பிரிவினை வாதிகள் ஒரு வலிமை பொருந்திய மாற்றுக் கட்சிகளாக உருவெடுப்பதற்கு பாதையை வழிவகுத்து கொடுத்ததுதான் அதற்குக் காரணம்.

இன்று வாஜ்பாய்க்கு ஆர்.எஸ்.எஸ்.சுடனும், இந்துமத வெறியர்களுடனும் கைக் கோர்த்துச் செல்வதைத் தவிர வேறு மாற்று வழியில்லை. பிஜேபியின் வலுவான மையப்பகுதி இந்து மத வெளியர்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிறது.

சமீபத்திய தேர்தலில் பி.ஜே.பி. தோற்ற பொழுது அதற்கு முன்பாக இரண்டு மாற்று வழிகள்தான் இருந்தன. ஒன்று, அதனுடைய அடிப்படையான கொள்கைகளை மறுபரீசிலனை செய்து, நாட்டு குடிமக்களுக்கு அனுகூலமாக மாற்றுவது. கண்டிப்பாக இது ஒரு கடினமான காரியம். அதன் உறுப்பினர்கள் மற்றும் எண்ணற்ற ஆதரவாளர்களின் தியாகங்கள் செய்வதன்மூலம்தான் இதைச் செய்ய முடியும்.

இப்படி இருக்கும் பட்சத்தில், பிஜேபி முன் உள்ள பொருத்தமான வழி எதுவாக இருந்தது தெரியுமா? பிஜேபி கோயில் பிரச்னையை திரும்பவும் கையில் எடுத்து, அதனுடைய மையப் பகுதியில் உள்ள ஆதரவாளர்களைத் திருப்திப் படுத்துவதுதான்.

எனவே கோத்ரா சம்பவம் நிகழ்த்தியிருக்கா விட்டாலும் கூட, ஒருவேளை ஒரு கோத்ராவே கண்டுபிடிக்கப்பட்டிருக்கக்கூடும். இது ஒன்றும் அரசியல் தந்திரங்களில் கேள்விப்படாத செய்தியல்ல.

மார்ச் 15 அன்று நடந்த கோயில் கட்டும் நிகழ்ச்சி ஒரு சின்ன முனகலுடன் மட்டுமே நடந்ததற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று உச்ச நீதி மன்றம் கோயில் கட்டுவதற்கு ஆதரவாக இல்லை. உச்ச நீதிமன்றம் ஒரு குழப்பமில்லாத, தெளிவான நீதியை வழங்கியது பற்றி ஒவ்வொரு இந்தியனும், தன்னுடைய சட்டத்துறை இன்னும் நல்லவிதமாக பணியை ஆற்றிக்கொண்டிருக்கிறது என்று எண்ணிப் பெருமைப்பட வேண்டும்.

ஆனால் ஒரு கொள்கைக்காக உயிர்விட கரசேவகர்கள் ஒரு வேளை தயாராக இருந்திருந் தால், உச்ச நீதி மன்றத்தின் நடவடிக்கை, அந்தத் தியாக மனப்பான்மையை அசைக்க முடியாமல் இருந்திருக்கும். குறைந்தபட்சமாக பரிவாரமாவது தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்து தங்கள் பெருமைகளை இவ்வுலகம் முழுவதும் பிரதி பலித்திருக்கலாம்

ஆனால் இதுவும் நடக்கவில்லை. அதனால்தான் சங்பரிவாரிலுள்ள இந்து மத வெறியர்கள் அனைவரும் முட்டாள்கள்போல் தோற்றமளிக்கின்றனர்.

இம்முறை, இந்து மத வெறியர்களின் உண்மை யைத் தோலுரித்துக்காட்ட நேரு இல்லையென்ற போதிலும், உச்சநீதி மன்றம் அவர்களுடைய கயரூபத்தை உலகிற்கு அம்பலப்படுத்தியது. ■



# வேறு பெயரில் வசூல் வேட்டை

நம் நாட்டில் சிறுபான்மையினருக்கு எதிராக நடக்கும் இனப்படுகொலைகளுக்குப் பின்னால் வெளிநாட்டுப் பணம் இருக்கின்றது. இந்தப் பணத்தின் பெரும் பகுதி அமெரிக்காவி லிருந்து வருகின்றது. இதற்காகவே அமெரிக்காவில் ஒரு நிறுவனம் தொடங்கப்பட்டது. அதன் பெயர்: "இந்திய வளர்ச்சி மற்றும் நிவாரண நிதி" (India Development and Relief Fund-IDRF).

இது அமெரிக்காவில் மேரிலேண்ட். என்ற இடத்தை மையமாகக்கொண்டது. இந்தியாவிலிருந்து புலம் பெயர்ந்த NRI (Non Resident Indian) என்பவர்தான் இதைத் தொடங்கியுள்ளார்

அவரது பெயர் வினோத் பிரகாஷ், இவர் உலக வங்கியில் பணியாற்றியவர். இந்த நிதி நிறுவனம் அல்லது அறக்கட்டளை *1978*ல் தொடங்கப் பெற்றது. வெளிநாட்டில் வாழும் குறிப்பாக அமெரிக்காவில் வாழும் இந்தியர்களிடம், "தாய் நாட்டு முன்னேற்றத்திற்குப் பணம் தாருங்கள்" எனக் கேட்டு இவர்கள் பணம் வசூலிக்கின்றார்கள். குறிப்பாக, கம்ப்யூட்டர் துறையில் பணிபுரிபவர்களும் வசூல் நடத்துகின்றார்கள். அங்கு வாழும் இந்துக்களுக்கு. எழும் பாஸ்போர்ட் பிரச்னை, இடம்பெயர்தல் பிரச்னை (Migration Problem) இவற்றைத் தீர்த்து வைக்க முயற்சிகளைச் செய்து இந்த நிதிக்கு அவர்களை இழுத்து விடுகின்றார்கள்.

ஆதிதிராவிடர்களை - பழங்குடியினரை முன்னேற்றுகின்றோம் என்று சொல்லியும் பணம் வசூல் செய்கின்றார்கள்.

இந்தியாவில் நம் பணத்தில் படித்துவிட்டு, உயர்தரமான இந்தியக் கல்வியைப் பெற்றுவிட்டு வெளிநாட்டில் வேலை என்ற பெயரில் சென்று அங்கு உழைப்பவர்கள் ஏராளமாக இருக்கின்றார்கள்.

நம்நாட்டுப் பணத்தில் படித்துவிட்டு வெளிநாட்டில் சம்பாதித்து அந்த நாடுகளில் உல்லாசமாக வாழ்கின்றோம் என்று இவர்களின் மனதில் ஓர் உறுத்தல். இவர்களிடம் சென்று, "நீங்கள் நம் நாட்டுக்கு ஏதேனும் செய்ய வேண்டாமா?" எனக் கேட்கின்றார்கள். ஏற்கெனவே மன உறுத்தல்களுக்கு ஆளாகி நிற்கும் இவர்கள், 'சரி, பணத்தையாவது தாராளமாகக் கொடுப்போம்' எனக் கொடுக்கின்றார்கள்.

இப்படித் தனிமனிதர்கள் அல்லாமல் பெரிய, பெரிய அமெரிக்க நிறுவனங்களிடமும் வசூல் செய்யப்படுகின்றன.

அமெரிக்காவிலுள்ள பெரிய வியாபார நிறுவனங்கள், அறக்கட்டளைகள், இவை ஏழை, எளிய மக்களின் முன்னேற்றத்திற்கு உதவி செய்வதை வழக்ககமாகக் கொண்டுள்ளன. இந்த நிறுவனங்களை நமது ஃபாசிஸ்டுகள் அணுகி, 'ஆதிவாசிகளை முன்னேற்றுகின்றோம்; பழங்குடியினரின் வாழ்க்கையை வளப்படுத்துகின்றோம், அதற்காக நிதி தாருங்கள்' எனக் கேட்கின்றார்கள்.

இப்படி தனிமனிதர்களிடமும், பெரும் பெரும் வியாபார நிறுவனங்களிடமும் பெறும் பணம், நாம் மேலே குறிப்பிட்ட IDRF என்ற இந்திய வளர்ச்சி மற்றும் நிவாரண நிதி வழியாக இந்தியாவில் ஃபாசிசவளர்ச்சிக்குப் பயன்படுத்தப் படுகின்றது.

இப்படி ஒரு பெரும் தொகை ஆஷிம் ஆனந்த் என்பவருக்கு வந்திருக்கின்றது. இவர் டேங்க்ஸ் என்ற இடத்தில் கிருஸ்தவப் பாதிரியார் ஒருவரும் அவருடைய மகனும் அவர்கள் தூங்கிக்கொண்டிருந்த வேனில் வைத்து எரித்துக் கொல்லப்பட்ட சம்பவத்தோடு தொடர்புடையவர்.

*1999*ல் நடந்த இந்தக் கொலை விசாரணையின்போது அவர் காணாமல் போய் விட்டார். பின்னர்தான் தெரிய வந்தது. இவர் ஆதிவாசிகளிடையே ஃபாசிச சிந்தனையை வளர்ப்பதற்கு இந்தப் பணத்தைச் செலவு செய்திருக்கின்றார் என்பது.

இதில் ஒருபெரும் பகுதி பணம் பஜ்ரங்தள் என்ற பயங்காரவாத அமைப்பிற்கும் போயிருக்கின்றது என்று தனது கண்டுபிடிப்பில் ஃபிரண்ட் லைன் ஆங்கில இதழ் குறிப்பிடுகின்றது.

இவர்கள் வசூல் செய்த பணத்தில் ஒரு பெரும் பகுதி குஜராத்தில் ஆதிவாசிகளிடையே செலவு செய்யப்பட்டு அவர்களை முஸ்லிம்களுக்கெதிராக திருப்பிவிட பயன்படுத்தப்பட்டிருக்கின்றது.

குஜராத் கலவரத்தில் இனப்படுகொலை செய்யப்பட்ட முஸ்லிம்களின் பின்னணியில் ஆதிவாசிகளிடம் இருந்தப் பணமுமிருக்கின்றது.

இதையெல்லாம் வெளிநாட்டில் உள்ள சில நல்லவர்கள் கண்டுபிடித்து இந்த நிதி திரட்டலுக்கு எதிராக ஒரு போரையே நடத்தி வருகின்றார்கள். அந்தப் போருக்கு "வெறுப்பை இந்தியாவில் வளர்ப்பதற்கு நிதி தருவதை நிறுத்துங்கள்" (Stop Funding Hate - SFH) என்று பெயர்.

இந்தப் பணம் இந்தியாவில் இனப்படு கொலைகளை நிகழ்த்தவும், ஃபாசிசத்தை வளக்கவுமே பயன்படுத்தப்படுகின்றது.

இதுகுறித்து அவுட்லுக் ஆங்கிலப் பத்திரிகை நடத்திய விசாரணையின் முடிவை அடுத்தக் கட்டுரையில் பார்ப்போம். ■

# வெளிநாட்டுப் பணம் இங்கே செய்யும் கொலைகள்



வினோத் பிரகாஷ்-சர்ளா ஆகிய இருவரும் தம்பதிகள். இவர்கள் அமெரிக்காவில் மேரி லேண்டில் 1978 முதல் IDRF என்ற அறக் கட்டளையைத் துவங்கி நடத்தி வருகின்றார்கள்.

“இந்திய ஆதிவாசிகளின் நலனுக்காகவே இந்த அறக்கட்டளையை நடத்தி வருகிறோம்” என்கின்றார்கள் இவர்கள். இந்த வினோத் பிரகாஷ் உலக வங்கியின் முன்னாள் ஊழியர். அத்தோடு இவர் ஆர்.எஸ்.எஸ். தொண்டருமாவார்.

“RSS எந்த நன்கொடைகளையும் ஒப்புக் கொள்வதில்லை. வாங்குவதில்லை” என்கிறார் இவர். ”IDRF ஒருபோதும் RSSக்குப் பணம் அளித்ததில்லை. நாங்கள் நிவாரணப் பணி களுக்கும் ஆதிவாசிகளின் முன்னேற்றப் பணி களுக்குமே நிதியுதவி அளித்து வருகின்றோம். தீவிரவாத இயக்கங்களுக்கு எங்களின் நிதி செல்வதில்லை.” என்கிறார்.

மேலும் அவுட்லுக் ஆங்கில வாரஇதழ் புலன் விசாரணை செய்ததில் IDRF, RSS க்குத் தொடர்புடைய இயக்கங்களுக்கு நிதி அளித்தது அப்பட்டமானது. இதற்காக ஒரு வருடமாக அவுட்லுக் தனது கண்காணிப்பைத் தொடர்ந்தது.

இதனால் அமெரிக்காவிலுள்ள சங்பரிவார் அமைப்பினர் VHP, பஜ்ரங்தள் அமைப்பிலிருந்து தங்களை விலக்கிக் காட்ட முயற்சித்தனர். ஆனாலும் அவர்கள் அநேகக் கால்தடங்களை இண்டர்நெட்டில் விட்டுச் சென்றுள்ளனர்.

தடங்களை மட்டுமல்ல, பல ஆதாரங்களே இருந்தன. IDRF-ன் போலித்தனம் இதன்மூலம் வெளிப்பட்டது.

"சேவா பாரதி மத்தியஷேத்ரா" என்ற RSSக்கு நெருக்கமான அமைப்புக்கு IDRF கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் 2.5 லட்சம் அமெரிக்க டாலர்கள் நிதியுதவி அனுப்பியுள்ளது. சேவா பாரதி அமைப்பு பழங்குடி இன மக்களை மதம் மாறாமல் பாதுகாப்பதோடு அவர்களை இந்துத்துவ நீரோட்டத்தில் இணைக்கவும் பாடுபடுகிறது.

ஹைதராபாத்தில் இயங்கிவரும் ஜனசேவா என்ற அமைப்பிற்கு இதிலிருந்து 40,000 டாலர்கள் அனுப்பியுள்ளது.

ஹைதராபாத்தில் இதே முகவரியில்தான் RSSன் தலைமையகமும் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

VHPன் கீழ் இயங்கும் "பாரத் கல்யாண் பிரதிக்ஷான்" (BKP) என்ற அமைப்பு 1998லிருந்து 2002 வரை 81750 டாலர்கள் IDRFலிருந்து பெற்றுள்ளது.

இந்திய அரசின் விதிகளின்படி மத இயக் கங்கள் வெளிநாட்டிலிருந்து நேரடியாக உதவி பெற முடியாது. எனவே அரசாங்கத்தின் இந்த நெருக்கடியைத் தவிர்க்க பாரத் கல்யான் பிரதிக் ஷன் என்ற பெயரில் ஓர் அறக்கட்டளையை துவங்கியது.

தற்போது இந்த BKP பெயரில் வெளிநாடு களிலிருந்து IDRF மூலம் நன்கொடைகளைப் பெற்று வருகிறது. நிதி அனுப்பும்போது வங்கி வரைவோலையும் ஒரு கடிதமும் வைத்து, “இந்தப் பணம் ஆதிவாசிகளின், தலித்துகளின் நல்வாழ்வுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும் என்ற வாசகத்துடன் அனுப்பப்படுகிறது.

“செயலாளர், பாரத் கல்யாண் பிரதிக்ஷன், சன் மோச்சன் ஆஷ்ரம், பிரிவு, ராமகிருஷ்ணாபுரம், புதுதில்லி-110, இந்தியா என்ற முகவரிக்கு நிதி அனுப்பப்படுகிறது.

ஆனால் இதுவே VHPன் சாட்சாத் டில்லி செயலகம், டில்லியில் இந்த முகவரியிலிருந்து VHP இயங்குகிறது.

IDRF நிதி அனுப்பிய இன்னும் சில அமைப்பு களும் RSS உடன் தொடர்புடைய VHPல் சகோதர இயக்கங்களே.

பாரத் விகாஸ் பரிஷத், ஸன்ஸ்கிரிட் பாரதி. இவை இரண்டின் பெயர்களும் RSS ன் இணைய தளததில் பிரிக்கப்பட்டுள்ளது.

ஜீவன் தாரா ரக்த் அறக்கட்டளை என்ற RSSன் அமைப்புக்கு சுமார் 48,000 டாலர் வரை 1998லிருந்து 2002க்குள் அனுப்பப்பட்டுள்ளது. IDRFஆல்.


vaigarai velicham official

இது ஷியாம் பெஹாரி லால் என்பவரால் நடத்தப்படுகிறது. இவர் ஒரு சம்பர்க் ப்ரமுக், ராஷ்ட்ரீய சுயம் சேவக் சங்கம், மீரட் விபாக் என்று இந்த அறக்கட்டளையின் இணைய தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

IDRF வனவாசி கல்யாண் ஆசிரம் என்ற VHP அமைப்புக்கும் நிதி அனுப்பியுள்ளது.

இந்த அமைப்பு பழங்குடியினரை இந்துத் துவத்திற்கு மாற்றி வருகிறது.

இவர்கள்தான் இனப்படுகொலையில் முஸ்லிம்களுக்கெதிராகக் களமிறங்கி விடப்பட்டார்கள்.

IDRFக்கு நிதியளிப்பவர்களில் பெரும்பாலா னவர்கள் தாங்கள் அளிக்கும் நிதி எதற்காக பயன்படுத்தப்படுகிறது என்று அறிந்தே கொடுக் கிறார்கள். ஒருசிலர் மட்டுமே இவர்களின் பொய்ப் பிரச்சாரத்தை - ஆதிவாசி நலன்களுக்காக - என்று நம்பி நிதியளிக்கிறார்கள்.

சுமித் கங்குலி (விரிவுரையாளர், ஆசியன் ஸ்டடீஸ், டெக்ஸாஸ் பல்கலைக்கழகம், ஆஸ்டின்) என்பவர் அமெரிக்கக் குழுவிடம், பன்னாட்டு மதச் சுதந்திரக் குழுவிடம் மிஞ்ஸிதி பற்றி தெரிவித்தபோது, "பல்வேறு வதந்திகள் இதுபற்றி வருகின்றன. ஆனால் இந்துத் தீவிரவாத இயக்கங்களுக்கு அறியாமையினால் இங்கி ருந்து பணம் அனுப்புகிறார்கள். இதைச் சட்டப்படி தடுக்க பல வழிகள் உள்ளன" என்றார்கள்.


அமெரிக்காவில் கனெக்டிகட்டில் வழக்கறி ஞராகப் பணிபுரியும் சுனில் தேஷ்முக் கூறுகிறார்:

"இந்தியாவிலுள்ள வலதுசாரி இந்துத்துவ வாதிகளை விட அதிக நம்பிக்கையோடும் பலத்தோடும் இங்குள்ள இந்துத்துவவாதிகள் இருக்கிறார்கள். குஜராத்தில் கலவரம் நடந்த போது இவர்கள் நிசப்தமாக எந்தச் சலனமுமின்றி இருந்தார்கள். ஆபத்தான கூறு என்னவெனில் எங்களுடைய பணத்தை வைத்து எங்களால் எதையும் சாதிக்க முடியும் என்று நினைக் கிறார்கள் இவர்கள்."

தகவல்கள் : Frontline Dec 20, 2002 &
Outlook 22.7.2002

- MGM

# இடம் மாற்றம் அறிவிப்பு





# அன்பகம்

நெ.30 ஸ்ரீ நகர் காலனியில், 3வது குறுக்கு தெருவில் செயல்பட்டு வந்தது. தற்போது கீழ்காணும் இடத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.

## அன்பகம் இஸ்லாமிய கல்விக்கூடம்

நெ.1183 அவ்வை நகர், குப்பங்குளம், நைல் நகர் அருகில்,
கும்பகோணம். தஞ்சை மாவட்டம் - 612 001.

**தொடர்புக்கு : 8248963991, 9786214186, 8870960662, 8148129887**

தொடர்



# பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்

## மும்பை புறநகர் இரயில் தொடர் குண்டு வெடிப்பு வழக்கு 11 ஜூலை 2006 (7/11)

*நவம்பர் மாத தொடர்ச்சி*

ஏ6–இன் வீட்டில் இருந்த படுக்கையின் உட்புறத்தில் கருப்பு மற்றும் வெள்ளை புள்ளிகள் கண்டெடுக்கப்பட்ட விஷயத்தில் பாஞ்ச் சாட்சியாக இருந்த பிரீத்தம் மாத்ரே என்பவரின் சாட்சியத்தினை நீதிமன்றமே நிராகரித்துவிட்டது. காரணம் அவர் காவல் துறையினருக்கும் தீவிரவாதத் தடுப்புப்படையின ருக்கும் கையிருப்பில் இருந்த நபர்களில் ஒருவர். ஆனாலும் மூன்றாம் நபர் ஒருவரின் (ஏ6–இன் சகோதரர்) வாக்குமூலத்தின் அடிப்படையில் பஞ்சநாமாவில் கூறப்பட்டிருந்தவை நிரூபிக்கப் பட்டதாக நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப் பட்டது. அந்த நபர் தன்னுடைய வாக்கு மூலத்தில், ‘ காவல்துறையினர் 29, செப்டம்பர், 2006 அன்று குற்றம் சாட்டப்பட்டவரின் வீட்டிற்கு வந்தார்கள். ஏதோ சிலவற்றை எடுத்து சென்றார்கள் ‘ என்று சாதாரணமாகக் கூறியிருந்தார்.

சபூ சித்திக் மருத்துவமனையில் இருந்த ஏ2வின் லாக்கரில் இருந்து மூன்று வேதியியல் (கெமிக்கல்) பாட்டில்களை கைப்பற்றியது குறித்து நீதிமன்றத்தில்சாட்சியம்அளிக்கும்போது பாஞ்ச் சாட்சியமான சந்திரகாந்த் ஷிக்வான் என்பவர், குற்றம் சாட்டப்பட்டவர் தன் முன் எதையும் கூறவில்லை என்றும் காவல் துறை ஆய்வாளர் ரதோட் அவர்களின் அலுவலகத்தில் தான் தன்னுடைய எல்லா கையெழுத்துகளையும் போட்டதாகவும் கூறினார்.

இவையனைத்தும் ஒரு சில மாதிரிகள் தான். கைப்பற்றப்பட்ட, பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் குறித்த சம்பவ இடத்தின் குறிப்பு களான பஞ்சநாமாக்களில் இதுபோன்ற ஏகப் பட்ட பலவீனங்கள் உள்ளன. அப்படி இருந்தும் நீதிமன்றம் இந்த குறிப்புகளையும், கைப்பற்றப் பட்டதாக கூறப்பட்டவற்றையும் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டது.

### முக்கியமான சாட்சிகள்

அரசு தரப்பால் விசாரணை செய்யப்பட்ட 192 சாட்சியங்களில் 6 சாட்சியங்கள் முக்கிய மானவை. இரண்டு கார் ஓட்டுனர்கள் (டாக்ஸி டிரைவர்கள்), நான்குஇரயில்பயணிகள். இவர்கள் குற்றம்சாட்டப்பட்டவர்களில்சிலரைதெளிவாக பார்த்துள்ளார்கள். அதனால் இவர்களின் சாட்சியம் முக்கியமானது. இவர்களின் சாட்சி யத்தின் நம்பகத்தன்மை மீது கீழ்வரும் விஷயங்கள் மிகப்பெரிய சந்தேகங்களை கிளப்புகின்றன.

இரண்டு கார் ஓட்டுனர்கள். ஒருவர் ராஜேஷ் சட்புடே மற்றொருவர் சந்தோஷ் சிங். இருவரும் தனித்தனியே குற்றம் சாட்டப்பட்ட இருவரையும் 11 ஜூலை 2006 அன்று அதாவது குண்டு வெடிப்புகள் நடந்த அதேநாளில் கார்டர் சாலை பாந்த்ராவிலிருந்து சர்ச் கேட்டிற்கும் பெர்ரி கிராஸ் பாந்த்ராவிலிருந்து சர்ச் கேட்டிற்கும் அழைத்து சென்றனர். நான்கு மாதங்களுக்கு பிறகு அவர்கள் காவல்துறையினரால் கண்டுபிடிக்கப் பட்டனர்.

இந்த நான்கு மாதங்களில் அவர்கள் எத்தனையோ ஆயிரக் கணக்கான பயணிகளை சவாரிக்கு அழைத்து சென்றிருப்பார்கள். இருந்தபோதும் அவர்கள் குற்றம் சாட்டப்பட்டவர்களின் படங்களை வரைய குறிப்புகளை தந்தனர். அதில் அவர்களுடைய வயது, அவர்கள் பேசிய மொழி, அவர்களின் உச்சரிப்பு, டாக்ஸியை வாடகைக்கு அமர்த்திய நேரம், எங்கிருந்து எங்கே அழைத்து சென்றார்கள், அவர்களை சர்ச்கேட் அருகே இறக்கியமிகச்சரியானநேரம், அவர்கள்கொடுத்த பணத்தில் என்னென்ன நோட்டுகள் இருந்தன போன்ற தகவல்களை எல்லாம் தந்ததோடு அவர்களை அடையாள அணிவகுப்பில் அடையாளமும் காட்டினர். இந்த கார் ஓட்டுனர்களின் அலாதியான ஞாபக சக்தி நீதிமன்ற தீர்ப்பில் இவ்வாறு விளக்கப்பட்டிருந்தது, 'உண்மைகள் புதுப்பிக்கப்பட்டவுடன் அந்த நபரின் ஞாபக சக்தி தூண்டப்பட்டது.'

இதே நிலை தான் உள்ளூர் இரயில்களில் பயணம் செய்த நான்கு பயணிகள் விஷயத்திலும் நடந்தது. தலா இருவரும் ஒவ்வொரு குற்றம் சாட்டப்பட்ட நபரை பார்த்தார்கள். குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் இரயில் பெட்டிகளுக்கு நுழைந்ததையும், அவர்கள் கையில் வெடி குண்டுகள் இருந்ததாக சந்தேகிக்கப்படும் ரெக்ஸின் பைகளையும் கண்டதாக கூறினார்கள். மூன்று மாதங்களுக்கு பிறகு குற்றம் சாட்டப்பட்ட 13 நபர்களின் கைதுகளைப்பற்றி தெரிய வந்ததும் காவல்துறையினரை அணுகி தகவல் தெரிவித்து அடையாள அணிவகுப்பில் இரண்டு பேருக்கு ஒரு குற்றம் சாட்டப் பட்டவர்களென அடையாளம் காட்டினார்கள். திடீரென்று மூன்று மாதங்களுக்கு முன்பு நடந்த நிகழ்வுகளை நினைவுக்கு கொண்டு வந்ததை பற்றி நீதிமன்றம் கூறுகையில், 'இவர்களுக்கு நினைவுகளை கொண்டுவர தூண்டுகோலாக அமைந்தது செய்தித்தாள்களிலும் தொலைக்காட்சி களிலும் வந்த தகவல்களே' என்று கூறியது.

பயணிகளில் ஒருவரான சுபாஷ் நாகர்சேகர் தன்னிடம் இரண்டு கைபேசிகள் இருந்ததை ஒப்புக்கொண்டார். ஆனால் அதன் எண்களை தந்தால் தன் உயிருக்கு ஆபத்து எனக்கூறி அந்த எண்களை தர மறுத்துவிட்டார். இது ஒரு நொண்டிச்சாக்கு என்பது வெளிப்படை. அவர் வெளிப்படையாக நீதிமன்றத்தில் வந்து சாட்சியம் அளிக்கும்போது மட்டும் அவருக்கு ஆபத்து ஏற்படாதா? ஆனால் நீதிமன்றம் இந்த கோரிக்கையை ஏற்று குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பு வழக்கறிஞரின் வாதத்தை நிராகரித்தது.

கார் ஓட்டுனர்கள் மற்றும் மூன்று பயணிகளை பொறுத்தவரையில் அவர்களுடைய கைபேசிகளை பொறுத்தவரையில் தீர்ப்பில் இது குறித்து எதுவும் விவாதிக்கப்படவில்லை. அந்த கைபேசிகள் குறித்து விசாரணை நடத்தப்பட்டால் அது உண்மைக் கதையை வெளிக்கொணர்ந்திருக்கும். ஆனால் இந்த முக்கியமான விஷயம் குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பு வழக்கறிஞரின் வாதத்தில் காணப்படவில்லை அல்லது அந்த விஷயம் குறித்து விவாதிக்க ஊக்கம் கொள்ளவில்லை. வழக்கு நடத்தப்பட்ட விதத்தை காணும் போது இரண்டாவதாக கூறியதே நடந்திருக்க அதிகம் வாய்ப்புள்ளது. உண்மையை கூறின் நீதிமன்றம் தான் முன்வந்து இந்த அறிக்கைகளை கேட்டு அதில் உள்ள உண்மைகளை ஆய்வு செய்திருக்க வேண்டும்.

நான்கு பயணிகளில் ஒருவரான கிஷோர் ஷாவை பொறுத்தவரையில் அவர் சாட்சியம் அளிக்கும்போது குற்றம் சாட்டப்பட்டவர் தன்னுடைய பையை இரயில் பெட்டியின் வலது புறத்தில் வைத்ததாகவும் அதற்கு எதிர் புறத்தில் தான் இருந்ததாகவும் கூறி இருந்தார்.

ஆனால் குண்டு வெடித்ததோ இரயில் பெட்டியின் இடது புறத்தில். பின்னர் இதனை தனக்கு வலது, இடது, கிழக்கு, மேற்கு என்பதில் பொதுவாகவே குழப்பம் என்றும் எனவே தான் காவல்துறையினரிடம் என்ன கூறினேன் என்பது நினைவில் இல்லை என்று கூறினார். இந்த விளக்கத்தை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது. அவரது சாட்சியத்தையும் ஏற்றுக் கொண்டது.

இரயில் பயணிகள் தந்த இரயில் வண்டிகளின் எண்களும், அதன் நேரங்களும் இரயில்வே கட்டுப்பாட்டு அறையின் அட்டவணைகளுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது. அதில் சில ஒத்துப் போகவில்லை என்பது இரயில்வே அதிகாரி ஒருவரின் சாட்சியத்தின் மூலம் நிரூபிக்கப் பட்டது. இரயில்வே அதிகாரி தன்னுடைய சாட்சியத்தில் இந்த அட்டவணைகள் கையால் நிரப்பப்படுவது கிடையாது மாறாக தானாக

உருவாகும் வகையில் (ஆட்டோமெடிக்) வடிவமைக்கப்பட்டுள்ளது என்று விளக்கம் அளித்தார். ஆனால் நீதிமன்றம் அவருடைய சாட்சியத்தை நிராகரித்தது. ‘சாட்சியம் பொய் சாட்சி அளிக்கிறது என்பதை உறுதி செய்ய இரயில்வே கட்டுப்பாட்டு அறை அட்டவணை களை சார்ந்து இருக்க இயலாது‘ என நீதிமன்றம் கூறிவிட்டது.

## இதர விஷயங்கள்

விசாரணையின் உண்மைத்தன்மையை மிகத் தீவிரமாக சந்தேகிக்க இன்னும் சில விஷயங்கள் உள்ளன.

இந்த வழக்கின் விசாரணை இந்த குண்டு வெடிப்புகளில் தொடர்புடைய பிஹாரில் உள்ள பஸோபட்டி என்ற இடத்தை சேர்ந்த 99346 10679 என்ற எண்ணுடைய கைபேசிக்கு சொந்தக் காரரான கமால் (ஏ1) என்பவரின் தகவல்களின் அடிப்படையிலேயே கண்டறியப்பட்டது. இத்தகைய திட்டவட்டமான உறுதியான தகவல்கள் அந்த கைபேசியை கண்காணிப்பில் வைத்து உளவெடுத்திருந்தால் அன்றி கிடைத் திருக்க இயலாது. ஆனால் அவ்வாறு அந்த கைபேசி எண் கண்காணிப்பின் கீழ் வைக்கப்பட்டிருந்ததா என்பது குறித்து நீதிமன்ற தீர்ப்பில் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

ஒருவேளை இந்த கைபேசி எண் கண் காணிப்பின் கீழ் வைக்கப்பட்டிருந்தது என்றால் இயல்பாகவே எழும் கேள்விகள் என்னவென் றால் குண்டுவெடிப்புகளுக்கு முன்பே கண் காணிக்கப்பட்டதா அல்லது குண்டுவெடிப்பு களுக்கு பின்பா? ஒருவேளை குண்டுவெடிப்பு களுக்கு முன்பே என்றால் ஏன் சம்பந்தப்பட்ட நபர் கைது செய்யப்படவில்லை? குண்டுவெடிப்பு களுக்கு பின்பு என்றால் எதன் அடிப்படையில் அவ்வாறு கண்காணிக்கப் பட்டது?

குண்டுவெடிப்புகளை நிகழ்த்த தூண்டுதல் கருவியாக பயன்பட்டது கைபேசிகளா அல்லது ரிமோட் கண்ட்ரோல்களா அல்லது டைமர் கருவிகளா என்பது குறித்து அரசு தரப்பில் இருந்து தெளிவுப்படுத்தப்படவில்லை. ஒருவேளை டைமர்கள் என்றால் அது சர்க்யூட் போர்டுகளா அல்லது குவார்ட்ஸ் கடிகாரங்களா?

எல்லா வெடிகுண்டுகளும் பிரஷர் குக்கர் களுக்குள் வைக்கப்பட்டிருந்ததாக கூறப்பட்டது. ஆனால் தானாக முன்வந்து கொடுத்ததாக கூற ப்பட்ட எந்த ஒப்புதல் வாக்குமூலத்திலும் அது பற்றி குறிப்பிடப்படவில்லை.

நார்கோ அனாலிசிஸ் டெஸ்ட் எனப்படும் மயக்கநிலை சோதனை என்பதே போலியானதாக தெரிகிறது. மாலேகான் 2006 வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களில் 6 மற்றும் 13வது நபர்கள் மயக்க நிலை சோதனையில் குண்டு வைத்ததாக ஒப்புக்கொண்டதாக கூறப்பட்டது. ஆனால் பின்னர் இவர்கள் இருவரும் நிரபராதிகள் என விடுவிக்கப்பட்டனர். இதிலிருந்தே இந்த மயக்கநிலை சோதனை போலியானது என்பது உறுதியாகும். எனவே, இந்த உண்மைகள் மயக்க நிலை சோதனைகள் மற்றும் அதன் அறிக்கை களின் நம்பகத்தன்மைமீது மிகப்பெரிய கேள்வியை எழுப்புகிறது. ஒன்று அவை போலி யானவை அல்லது திருத்தப்பட்டவை என்பது தெளிவாகிறது.

அயர்வின்றியும் உறுதியாகவும் இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 8 நபர்களுக்காக வழக்காடிய வழக்கறிஞர் ஷஹீத் ஆஸ்மி அவர்கள் சந்தேகத்திற்கிடமான முறையில் மர்மமாக கொலை செய்யப்பட்டதும், அது கண்டறியப் பட்டதும் இதற்கு இணையாக சந்தேகத்திற்கிட மானதே.

இந்த வழக்கில் விசாரணைக்குழுவில் இருந்த நேர்மையான தீவிரவாதத் தடுப்புப்படை அதிகாரியான வினோத்பாட் என்பவர் சந்தேகத் திற்கிடமான சூழலில் தற்கொலை செய்து கொண்டார். இந்த வழக்கை தவறான பாதையில் கொண்டு செல்ல அவருக்கு உயரதிகாரிகள் கொடுத்த அழுத்தத்தை அவரால் தாள இயல வில்லை என்ற வதந்தி உள்ளது.

## அடுத்தது என்ன?

விசாரணை நீதிமன்றம் குற்றம் சாட்டப் பட்டவர்களை குற்றவாளிகள் என தண்டனை யளித்ததை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் செய்யப் படும் மேல்முறையீட்டில், குற்றம் சாட்டப்பட்ட வர்களுக்காக ஆஜராகும் வழக்கறிஞர்கள் குற்றம் சாட்டப்பட்ட வர்களை விடுவிக்க வேண்டும் என்பதை மட்டும் கோராமல் இந்த வழக்கின்


vaigarai velicham official

விசாரணையில் உள்ள குறைபாடுகளையும் முக்கியமான முரண்பாடுகளையும் உயர்நீதிமன்றத்தின் பார்வைக்கு எடுத்து செல்ல வேண்டும். இந்த வழக்கை மேற்கொண்டு விசாரணை நடத்த உத்தரவிட நீதிமன்றத்தை கோரவேண்டும். அதற்கு பின்வரும் முக்கியமான புள்ளிகள் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும்.

எந்த ஒரு வெடிகுண்டு வழக்கிலும் முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியது அந்த குண்டு வெடிப்பை நிகழ்த்ததூண்ட பயன்படுத்தப்பட்ட முறை என்னவென்பதை கண்டறிவது. இந்த வழக்கை பொறுத்தவரை இந்த குண்டுவெடிப்புகளை நிகழ்த்த தூண்ட பயன்படுத்தப்பட்ட பொருட்கள் டைமர்களா அல்லது கைபேசிகளா அல்லது ரிமோட் கண்ட்ரோல்களா என்பதை கண்டறிய விசாரணை நிறுவனம் எந்த ஒரு முயற்சியையும் மேற்கொள்ளவில்லை என தெரிகிறது. அனைத்து 7 குண்டுவெடிப்பு வழக்குகளிலும் இதுதான் நிலைமை. எல்லா குண்டுவெடிப்புகளும் இரயில் நிலையத்திலும் அல்லது அதற்கு அருகாமையிலும் அதுவும் ஐந்து நிமிட இடைவெளிக்குள் நிகழ்ந்துள்ளது. 18.23லிருந்து 18.28க்குள் நிகழ்த்தப்பட்டுள்ளது. இதற்கு என்ன அர்த்தம் என்றால் இந்த திட்டத்தை செயல்படுத்த மிக துல்லியமாக திட்டமிடப்பட்டுள்ளது. இரயில் நிலையத்தில் மட்டும் வெடிக்கும் படி டைமர்களை கொண்டு கணிக்க இயலாது,

ஏனெனில் அனைத்து குண்டுவெடிப்புகளும் இரயில் நிலையத்தில் நிகழ்ந்துள்ளதால் இந்த குண்டுவெடிப்புகளை டைமர் கருவிகளை கொண்டு செயல்படுத்தியிருக்க சாத்தியமில்லை. எனவே, இது, இந்த குண்டுவெடிப்புகளில் கைபேசிகளே ரிமோட் கண்ட்ரோல்களாக பயன்படுத்தப்பட்டிருக்கும் என்ற ஒரே தர்க்க ரீதியான அனுமானத்திற்கு நம்மை கொண்டு செல்கிறது.

இது மாதிரியான நேரங்களில் காவல்துறையினருக்கு முன் உள்ள சிறந்த வழிமுறை என்னவென்றால் கைபேசி தரவுகளின் பதிவுகளிலிருந்து குண்டுவெடிப்புகள் நடந்த இடத்திற்கு அருகில் உள்ள செல்போன் அலைக்கற்றை கோபுரங்களின் (செல்போன் டவர்கள்) மூலமாக குண்டுவெடிப்புகள் நடந்த நேரத்தில் செய்யப்பட்ட அழைப்புகளின் தகவல்களை எடுக்க வேண்டும். அதன்பின்னர் அந்த தகவல்களிலிருந்து சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட நபர்களை நீக்க வேண்டும். இப்படியே அந்த வழியை குறுக்கிக் கொண்டே வரவேண்டும். அதிலிருந்து சந்தேகத்திற்குரிய அழைப்புகளை தேர்ந்தெடுக்க வேண்டும். இந்த முறையை கையாள்வதின் மூலம் குற்றவாளிகளை கண்டுபிடிப்பது மிகவும் சாத்தியம்.

ஆனால் அவ்வாறு செய்யப்படவில்லை. கைபேசிஅழைப்புகளின்தகவல்கள்காந்தநாடாக்களில் செல்போன் நிறுவனங்களால் நிரந்தரமாக பதிவு செய்து வைக்கப்படுகின்றன. எனவே, இந்த தகவல்களை இப்போது எடுப்பதும் சாத்தியமே.

குண்டுவெடிப்புகள் நடந்த இடத்தில் சந்தேகப்படும் வகையில் கைபேசிகள் அல்லது சிம் கார்டுகளை கிடைத்ததா என்பதையும் அந்த சந்தேகிக்கப்படும் கைபேசிகளின் சிம் கார்டுகளின் சொந்தக்காரர்கள் யார் என்பதையும் காவல்துறையினர் தேடிப் பார்த்திருக்கலாம். ஒருவேளை காவல்துறையினர் குண்டு வெடிப்புகள் நடந்த இடத்தில் கிடைத்த பொருட்களை எச்சரிக்கையுடன் பாதுகாத்து வைத்திருந்தால் மட்டுமே இப்போது இதை செய்ய இயலும்.

அத்தியாயம் 3ன் பகுதி 1ல் ஏற்கனவே விவாதித்ததன் படி மஹாராஷ்டிராவின் அவ்ரங்காபாத்தை சேர்ந்த காந்தேராவ் என்பவர் மஹாராஷ்டிராவின் யவட்மால் பகுதியில் உள்ள அமோல் சந்திரா கலை, அறிவியல் மற்றும் வணிக கல்லூரியில் தற்போது பேராசிரியராக பணியாற்றி வருகிறார். இவருக்கு இந்த குண்டு வெடிப்பில் தொடர்பிருப்பதாக தெரிகிறது. அவரும் அவருடைய மனைவியும் ஆழமாக விசாரணை செய்யப்பட வேண்டும். அவ்வாறு செய்தால் நிச்சயமாக சில துப்புகள் கிடைக்கும்.

குற்றம் சாட்டப்பட்டவர்களில் 2,4,6,7,8 மற்றும் 11 எண்ணுடையவர்கள் தங்களுடைய வாக்குமூலத்தில் அவர்கள் சட்ட விரோதமாக காவல்துறையினரால் தீவிரவாதத்தடுப்புப் படை அலுவலகத்தில் 5 நாட்கள் முதல் 2 மாதம் வரை சிறை வைக்கப்பட்டிருந்ததாக கூறியிருந்தனர். மேலும் அந்த நாட்களில் அவர்களுடைய

# முஸ்லிம்களுக்கு எதிராக ஊடகங்கள்

பிராமணர்கள் குண்டு வைத்தார்கள், முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள். தலைப்பே முழு செய்தியையும் சொல்லிவிடுகிறது. இந்த புத்தகம் கடும் உழைப்பையும், எந்த இடத்திலும் நிதானமிழக்காமலும் தான் நிறுவ எண்ணிய குறிக்கோளை அட்டைவதில் வெற்றிபெற்றுள்ளது.

தொடர்ந்து படிப்பதில் சிரமம் இருக்கிறது. திரும்பத்திரும்ப சட்டநுணக்கங் களையே படிப்பதில் ஏற்படும் சோர்வை தவிற்க முடியவில்லை. இன்றைய சூழலில் ஒரு வாசகன் இவ்வாறு சொல்வதற்கு வெட்கப்படவேண்டும். ஆனலும் தொடர்ந்து படிக்கமுடியவில்லை.

இப்படி ஒரு நிகழ்வு சமூகத்தில் நடக்கும் போது இந்த சமூகம் அலட்டாமல் இயந்திர கதியில் நடப்பதை புரிந்துகொள்ள முடியவில்லை.

பாதிப்படைந்த சமூகம் 2வது 3வது நிகழ்வுக்குப் பின்னால் சுதாரித்து கொண்டு என்ன ஏது என்று ஏன் துப்புதுலங்கவில்லை. ஒட்டு மொத்த சமூகத்தின் மீதும் கரிபூசும் செயல் என்பது அப்படமாக தெரிந்து விட்டபின்னாலும் இது பல,பலமுறை நிகழ்ந்துள்ளது, இந்த சமூகத்தை சிக்கலுகுள்ளாக்க எளிமையான இந்த உத்திபோதும் என்று சதிகாரர்கள் முடிவெடுத்து ஆச்சிரியமாக இருக்கிறது. இதே ஆச்சரியம் ராஜீவ் கொலைவழக்கிலும் ஏற்படுத்தியது. இந்த இரண்டிற்கும் பின்னால் இருந்து மிகச்சிறப்பாக செயல்பட்டது ஊடகங்கள், ஊடகங்கள், ஊடகங்கள் மட்டுமே.

அப்படியனால் இந்த ஊடகங்கள் எதை வேண்டுமானலும் சாதித்துவிடுமா. ஆம் எதை வேண்டுமானாலும் அதனால் சாதிக்க முடியும். அந்த பக்கபலத்துடன்தான் அந்த ஊடங்கள் செயல்படுகின்றன. போதாத குறைக்கு மதமும் சேர்ந்துவிடுவதால் யாராலும் எதுவும் செய்ய முடியாத நிலை ஏற்பட்டு விடுகிறது.

**– வைகை குமாரசாமி, திருநெல்வேலி**

*கைபேசிகள் அவர்களுடன் இருந்ததாகவும் அந்த கைபேசிகள் அணைத்து வைக்கப்படவில்லை என்றும் கூறியிருந்தனர். மேலும் தங்களை சட்ட விரோதமாக காவலில் வைத்திருந்ததை நிரூபிக்க நீதிமன்றம் தங்களுடைய கைபேசிகளின் தகவல் பதிவுகளை ஆய்வு செய்ய வேண்டும் என்றும் கோரியிருந்தனர். தீவிரவாதத்தடுப்புப் படையினர் திருத்தம் செய்யப்பட்டபோலியான கைபேசி அழைப்பு தகவல்களை நீதிமன்றத்தில் தந்து நீதிமன்றத்தை தவறாக வழி நடத்தியது.*

*நீதிமன்றம் மறுவிசாரணைக்கு உத்தரவிடும் போது குற்றம் சாட்டப்பட்டவர்களின் கூற்று களான தங்களை சட்டவிரோத காவலில் வைத் திருந்தது குறித்தும் சரிபார்க்கப்பட வேண்டும். உண்மையான கைபேசி அழைப்புகளின் பதிவுகள் குற்றம் சாட்டப்பட்டவர்கள் கூறியது போல் அவர்கள் சட்டவிரோத காவலில் இருந்ததாக கூறப்படும் நேரத்தில் அவர்கள் எங்கிருந்தார்கள் என்பதை சுட்டிக்காட்டிவிடும். இது அவர்கள் கூறியது உண்மையா பொய்யா என்பதை நிரூபித்து விடும்.*

*குற்றவியல் நடைமுறை சட்டத்தின் பிரிவு **373**ன்கீழ் தங்களுடைய ஒப்புதல் வாக்குமூலத்தை மறுத்து திரும்பப் பெறும் மனுவில் தங்களை இந்த வழக்குகளில் பொய்யாக சிக்க வைத்த, சித்ரவதைக்கூடங்களில் நரக வேதனை கொடுத்த, கட்டாயப்படுத்தி ஒப்புதல் வாக்குமூலங்கள் கொடுக்க வைத்த காவல் துறையின் கடைநிலை காவலர் முதல் ஆணையாளர் வரையிலான அனைத்து அதிகாரிகளையும் அடையாளம் காட்டியிருந்தார்கள். அவர்களில் முக்கியமான வர்கள் மும்பை காவல்துறை ஆணையாளர் ஏ.என்.ராய், மஹாராஷ்டிர தீவிரவாதத் தடுப்புப் பிரிவின் தலைவர் கே.பி.ரகுவான்ஷி, தீவிரவாதத் தடுப்புப்படையின் கூடுதல் ஆணையர் எஸ்.கே. ஜெய்ஷ்வால், தீவிரவாதத் தடுப்புப் படையின் துணை ஆணையாளர் ஜக்ஜீத் சிங், நவல் பஜாஜ், தீவிரவாதத் தடுப்புப்படையின் உதவி ஆணை*


யாளர் ஷெங்கால், மும்பை மாநகரின் துணை ஆணையாளர், குற்றம் சாட்டப்பட்டவர்களின் ஒப்புதல் வாக்குமூலங்களை பதிவு செய்த துணை ஆணையாளர் அளவிலான அதிகாரிகள், காவல் துறை ஆய்வாளர்கள் அளவிலான அருண் கான்வில்கர், தாஜ்னே, ஆர்.ஆர்.ஜோஷி, எஸ்.எல். பாடீல், தினேஷ் கடம், சச்சின் கடம், ஷைலேஷ் கெய்க்வாட் மற்றும் பி.பி. ரதோட் போன்றோர்.

இந்த வழக்கை மேற்கொண்டு விசாரணை செய்யும்போது இந்த அதிகாரிகளை குற்றம் சாட்டப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுடன் எதிர்கொள்ள வேண்டும். குற்றம் சாட்டப்பட்டவர்களின் வாக்குமூலங்கள், அவர்களின் கைபேசி அழைப்புகளின் தரவுகள் பெறப்பட்டு தீவிர ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு குற்றம் சாட்டப்பட்டவர்கள் சொல்வது உண்மைதானா என்பது உறுதி செய்யப்பட வேண்டும்.

ஒருவேளை இந்த அதிகாரிகள் குற்றவாளிகள் என்பதோ அல்லது குற்றம் சாட்டப்பட்டவர்கள் அவர்கள் அப்பாவிகள் என்று தெரிந்தும் வேண்டு மென்றே இந்த வழக்கில் சம்பந்தப்படுத்தி கைது செய்ததும் உறுதியானால் அதே குற்றச்சாட்டின் கீழோ அல்லது வேறு குற்றச்சாட்டுகளின் கீழோ இந்த அதிகாரிகளும் கைது செய்யப்பட வேண் டும். இந்த வழக்கின் மேல் விசாரணையில் வெளிப்படக்கூடிய ஆதாரங்களின் அடிப்படை யில் இந்த அதிகாரிகள்மேல் இந்த வழக்குகள் பதியப்பட வேண்டும்.

– இன்ஷாஅல்லாஹ் தொடரும்.

# பாரதி புத்தகாலயம் புத்தக விமர்சன போட்டி




2022ல் வெளிவந்த ஏதோ ஒரு புத்தகத்தை படித்து அதை விமர்சனம் செய்து காணொளி காட்சியாக டிசம்பர் 31க்குள் அனுப்பி வைக்க சொல்லியிருந்தார்கள்

நானும் வாசிப்பின் மீது இருந்த ஆர்வத்தில் கலந்து கொண்டேன். என் புத்தக விமர்சனம் மூன்றாம் பரிசுக்கு தேர்வாகியிருக்கிறது. இந்த தலைப்பில் உள்ள புத்தக விமர்சனம் முதலில் ஏற்றுக்கொள்ளப்படுமா என்கிற தயக்கத் தையும் மீறி தேர்வாகி இருப்பது பாரதி புத்தகாலயத்தின் நடுநிலை தன்மையையும் நேர்மையும் பறைசாற்றுகிறது.

பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள். குண்டுகளை வைத்துவிட்டு, முஸ்லிம் களின் மீது பழிபோடும் பிராமிணிஸ்ட்டுகளின் சதிகள்.

**தமிழாக்கம் வைகறை வெளிச்சம் ஆசிரியர் குழு,**
**எஸ்.எம். முஷ்ரிஃப், முன்திசைப்பக் ஜெனரல்**

**சகோ. புதுமடம் ஹலீம் அவர்களுக்கு வாழ்த்துக்கள்!**

நான் பலருக்கும் புத்தகங்களை பரிசளிப்பது வழக்கம். அப்போதெல்லாம் "நாம் கொடுக்கும் இந்த புத்தகத்தை அவர்கள் படிப்பார்களா? "- என்ற சந்தேகம் வரும். அந்த சந்தேகத்தை துடைத்தெரிந்துவிட்டார் சகோ.புதுமடம் ஹலீம் அவர்கள்.

ஆம், நான் கொடுத்த, பிராமிணிஸ்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப் பட்டார்கள் என்ற புத்தகத்தை படித்ததோடு அல்லாமல் புத்தக விமர்சன போட்டியிலும் இந்த புத்தகத்தை விமர்சனம் செய்து பரிசும் பெற்றுள்ளார். அவர் பெற்ற பரிசு எனக்கு மிகுந்த உற்சாகத்தை தந்துள்ளது. இந்த புத்தகத்தை தேர்ந்தெடுத்ததற்கு நன்றி

இந்த புத்தகத்தை அவருக்கு அறிமுகம் செய்த சகோ. கமருத்தீன் அவர்களுக்கு நன்றி!!

# வெட்கம்

இஸ்லாம் மனிதகுலத்திற்கு பல நற்குணங்களை போதிக்கின்றது. அவற்றில் மனித குலத்திடம் இருக்க வேண்டிய அவசியமான நற்குணம் வெட்கம். எப்பொழுது மனிதன் வெட்கத்தை இழக்கின்றானோ, அப்பொழுது மிருகத்தைவிட கேவலமானவனாக, அவனுடைய செயல்கள் மாறிவிடுகின்றது. பாவமான காரியங்கள் அவனுக்கு பாவமாக தோன்றுவதில்லை.

வெட்கப்படுவது ஈமானின் ஒரு முக்கிய கிளையாகும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இறை நம்பிக்கை (ஈமான்) அறுபதுக்கும் அதிகமான கிளைகளைக் கொண்டதாகும். வெட்கமும் (நாணமும்) இறை நம்பிக்கையின் ஒரு கிளையே. (புகாரி)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

மக்கள் இறைத் தூதர்களின் சொற்களிலிருந்து அடைந்து கொண்ட (அறிவுரைகளில்) ஒன்றுதான் "நீ வெட்கப்படவில்லை என்றால், விரும்பியதையெல்லாம் செய்து கொள்" என்பதும். (புகாரி)

வெட்கம் இல்லையென்றால் எதை வேண்டுமானாலும் சொல்லலாம், செய்யலாம் என்றாகிவிடும். எந்த தவறையும் செய்ய துனிந்துவிடுவான் என முஹம்மது நபியவர்கள் நமக்கு எச்சரிக்கிறார்கள்.

அன்சாரிகளைச் சேர்ந்த ஒருவர் தம் சகோதரர் (அதிகம்) வெட்கப்படுவதைக் கண்டித்து கொண்டிருந்தபோது, அவ்வழியே இறைத்தூதர் (ஸல்) அவர்கள் சென்றார்கள். உடனே அவரை(க் கண்டிக்காதீர்கள்) விட்டுவிடுங்கள். ஏனெனில், நிச்சயமாக வெட்கம் ஈமான் எனும் இறைநம்பிக்கையின் அம்சமாகும் என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

தீய குணங்கள் எதில் இருந்தாலும், அதை அது அசிங்கப்படுத்தாமல் இருப்பதில்லை.

வெட்கம் எங்கு இருந்தாலும், அது அதை அழகுபடுத்தாமல் இருப்பதில்லை. வெட்கம் நல்லதை தவிர வேறெதையும் கொண்டு வராது. வெட்க உணர்வு, பாவம் செய்வதை தடுக்கும்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எச்சரிக்கிறார்கள், ஒரு சமூகத்தில் வெட்கமின்மை, நாணமின்மை பரவிவிட்டால், அந்த சமூகத்தில் கொள்ளை நோய் போன்ற துன்பங்கள் அவர்களுடைய முன்னோர்கள் அறியாத பலப்பல நோய்கள் தாக்கத் தொடங்கும்.

சத்தியத்தை சொல்வதற்கும் உண்மையை உரைப்பதற்கும், கல்வியைக் கற்பதற்கும் எவரும் வெட்கப்படக்கூடாது. "கொசுவையோ அதைவிட அற்பமானதையோ உதாரணமாக கூற அல்லாஹ் வெட்கப்பட மாட்டான். நம்பிக்கைக் கொண்டோர் இது தமது இறைவனிடமிருந்து வந்த உண்மை என்பதை அறிந்து கொள்கின்றனர். ஆனால், (ஏக இறைவனை) மறுப்போர் "இதன்மூலம் அல்லாஹ் என்ன உண்மையை நாடுகிறான்? என்று கேட்கிறான். இ(வ்வுதாரணத்)தின் மூலம் அல்லாஹ் பலரை வழிகேட்டில் விடுகிறான். இதன்மூலம் பலரை நேர்வழியில் செலுத்துகிறான். இதன்மூலம் குற்றம் புரிவோரைத் தவிர (மற்றவர்களை) அவன் வழிகேட்டில் விடுவதில்லை. (அல்பகரா-26)


உம்மு சுலைம் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, "அல்லாஹ்வின் தூதரே! சத்தியத்தைச் சொல்ல அல்லாஹ் வெட்கப்படுவதில்லை. ஒரு பெண்ணுக்குத் தூக்கத்தில் ஸ்கலிதம் ஏற்பட்டால் அவள்மீது குளியல் கடமையாகுமா? என்று கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் (ஆம் உறங்கி) விழித்ததும் தன்மீது, அவள் (மதன) நீரைப் பார்த்தால் (குளியல் அவள்மீது கடமைதான்)" என்று பதிலளித்தார்கள். உடனே நான், (வெட்கத்தினால்) எனது முகத்தை மூடிக் கொண்டு "பெண்களுக்கு ஸ்கலிதம் ஏற்படுமா என்று கேட்டன், அதற்கு நபி (ஸல்) அவர்கள் உன் வலக்கரம் மண்ணைக் கவ்வட்டும் (நன்றாகக் கேட்டாய் போ) பிறகு எவ்வாறு குழந்தை தாயின் சாயலில் பிறக்கிறது? என்று கேட்டார். (புகாரி)

**"ஒவ்வொரு மார்க்கத்திற்கும் தனிதயே ஒரு சிறப்பு குணமுண்டு. இஸ்லாமிய மார்க்கத்தின் சிறப்பு குணம் வெட்கமாகும்."**
**(இப்னுமாஜா)**

# சிலுவைப் போர்கள் 2.0

தொடர்...

ஆங்கிலம் : **JOHN FEFFER**
தமிழ் வடிவம் : மு. குலாம் முஹம்மத்




**ஜான் பெஃபர் கூறுகின்றார் :**

முஸ்லிம்களின் ஆட்சி 'இஸ்லாமிய ஆட்சி' வரலாற்றின் மத்திய காலக்கட்டத்தில் உலகெங்கும் ஒளி வீசியது. அந்தக் காலக்கட்டத்தில். இஸ்லாமிய ஆட்சியாளர்கள் மிகப்பெரிய சகிப்புத்தன்மையோடு இதர மத நம்பிக்கையாளர்களை நடத்தியதாக வரலாறு பேசுகின்றது. இதனை இஸ்லாமோபோஃபியாவை வளர்ப்பவர்கள் வேறு வகையாகத்தான் பார்க்கின்றார்.

அவர்கள் பார்வையில் முஸ்லிம்களின் மத சகிப்புத்தன்மையைப் பற்றி மிகையாகக் கூறி இருக்கின்றார்கள் எழுத்தாளர்களும், வரலாற்று ஆய்வாளர்களும்!

ஆனால், அவர்கள் சகிப்புத்தன்மை உடையவர்களாக இருந்தார்கள் என்பது உண்மை. இஸ்லாமிய ஆட்சியின்போது இதர மத நம்பிக்கையாளர்கள் தங்கள் மதத்தின், எல்லாப் பகுதிகளையும் முழுச் சுதந்திரத்துடன் பின்பற்றினார்கள். எந்தத் தங்குதடையுமிருக்கவில்லை. அவர்கள் இஸ்லாத்தின் உயர்வை ஏற்றுக்கொண்ட நாள்களில்.

பல்வேறு, மத நம்பிக்கையுடையவர்கள் இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வாழ்ந்தார்கள். இஸ்லாமிய அரசும் முஸ்லிம்களும் அவர்களைத் தாராளமாக நடத்தினார்கள் என்பது மட்டுமல்ல. அந்த வேறுபட்ட மத நம்பிக்கையாளர்களும், தங்களுக்குள் மோதிக்கொள்ளவில்லை. மோதிக் கொள்ள இயலவில்லை, முடியாது. அங்கே சட்டம் தன் கடைமையைப் பாரபட்சமின்றிச் செய்தது. என்றாலும் கிறிஸ்தவர்களும் யூதர்களும் இரண்டாந்தரக் குடிமக்களாகத்தான் நடத்தப்பட்டதாக பல வரலாறு கூறுகின்றது. ஆனால், அவர்கள் தங்கள் மதத்தையும் தங்கள் தொழில்களையும் எந்தத் தடையுமின்றி பின்பற்றினார்கள். ஆனால், பாதுகாப்பு வரி என்ற வரியை அவர்கள் செலுத்திட வேண்டும்.

ஆனால், அனைத்தையும் விஞ்சி நாங்கள் இஸ்லாத்தின் மீது வெறுப்பையும், காழ்ப்பையும் வளர்த்தோம். இஸ்லாம் தன்னுள் வன்முறையை வழியாகக்கொண்டது. அகிலத்தை ஆட்கொண்டு ஆட்சி செய்திட வேண்டும் என்ற அவாவைக் கொண்டது. இது நாங்கள் தொடர்ந்து தொய்வில்லாமல் செய்துவரும் பிரச்சாரம். இதில் முஹம்மத் (ஸல்) அவர்களின் வாழ்க்கையை தேவையான அளவுக்குத் தவறாகச் சித்தரித்தோம்.

எங்களில் ஒருபெரும் எழுத்தாளர், அவர் பெயர் ராபர்ட் கெற்றான் - Robert Ketton முஹம்மத் (ஸல்) அவர்களை இழிவாகப் பேசியே தன் கீர்த்தியை வளர்த்துக் கொண்டவர். இவர் 12ஆம் நூற்றாண்டின் திருக்குர்ஆன் மொழிப் பெயர்ப்பாளர்களில் ஒருவர்.

அவர் ஆவேசத்தில் அள்ளிக் கொட்டிய வார்த்தைகள் "ஒரு பொய்யரைப்போல் நீவிர். நீவிர் ஒவ்வொரு இடத்திலும் முன்னுக்குப் பின் முரணாகவே இருக்கின்றீர்." முதல் சிலுவைப் போரில் (1095-1452) கலந்துகொண்ட சிலுவைப் போர் வீரர்கள், தங்கள் எதிரிகளை (முஸ்லிம்களை) "ஏமாற்றுக்காரர்கள், நம்பத்தகாதவர்கள்" எனத் தொடர்ந்து பிரச்சாரம் செய்தார்கள்.

பிரன்டியஸ் (Fidentius) என்றொரு பேச்சாளர். இவர் அவதூறுகளை தனது எதிரிகள் மீது ஈவிரக்கமின்றி எடுத்து வீசுபவர். அதில் பெருமை கொள்பவர். அவரும் தன்னால் இயன்றமட்டும்



அவதூறுகளை முஸ்லிம்கள்மேல் அள்ளி வீசியிருக்கின்றார்.

இவருடைய பிரச்சாரத்தின் மையப் பொருள் :

"முஸ்லிம் ஆட்சியாளர்கள் தொடர்ந்து ஒப்பந்தங்களை முறித்துக்கொண்டே இருந் தார்கள். அதன்மூலம் பேச்சுவார்த்தைகளுக்கு இடமே இல்லை என்றாக்கினார்கள். போர்களே அவர்களின் வழிமுறை" எனப் பிரச்சாரம் செய்தார்.

இந்தப் பிரச்சாரத்தின் வழி முஸ்லிம்கள் நம்பிட முடியாதவர்கள் என்ற எண்ணத்தை உருவாக்கினோம். இதனால் முஸ்லிம்களுடன் இணைந்து வாழ்ந்திட முற்பட்டவர்கள். அந்த என்ற எண்ணத்தைக் கைவிட்டார்கள். முஸ்லிம் களைச் சந்தேகக் கண்கொண்டே பார்த்தார்கள்.

போப் கிரிகோரி IX - Pope Gregory IX அவர்கள் பதிமூன்றாம் நூற்றாண்டின் கிருஸ்தவ மன்னன் (Crusade Frederick) சிலுவைப்போர் வீரர் என்றும் அறியப்பட்டார். பெட்ரிக் இவர் செய்த மிகப்பெரிய தவறு, பிற்றை நாட்களில் இவர் முஸ்லிம்களோடு நெருங்கியத் தொடர்புகளை வளர்த்துக் கொண்டார். இதனால் மன்னரை கிருஸ்துவுக்கு எதிரானவர் என அழைத்தார்.

ஆனால் நம்பிக்கை துரோகம் என்பது சிலுவைப்போரை நடத்திய கிருஸ்தவர்களிடமும் தாராளமாகவே காணப்பட்டது. எடுத்துக் காட்டாக ஆர்ச் பிஷப்மாய்ன்ஸ் (Arch Bishp - Mainz) என்பவர் ஜெர்மனி நாட்டில் யூதர்கள் படுகொலை செய்யப்பட்டபோது, யூதர்களுக்கு ஒரு வாக்குறுதியை வழங்கினார். அதில் அவர்கள் வெள்ளிக் கட்டிகளைத் தந்தால், அவர்களின் உயிரைப் பாதுகாப்பதாக அறிவித்தார். வெள்ளி யைப் பெற்றுக் கொண்டார். யூதர்களைக் கொலை செய்த நிலை உக்கிரத்தை அடைந்தபோது, அவர் யூதர்களுக்குத் தந்த வாக்குறுதிகளைக் காற்றிலே பறக்க விட்டுவிட்டு ஓடிப்போய் விட்டார்.

ஆர்ச் பிஷப் ஓடிப்போய்விட்ட நிலையில், அவருடைய தேவாலயத்தில் தங்க வைத்திருந்த யூதர்கள்கூட தப்பித்திட இயலவில்லை. அவர்களும் கண்டத் துண்டமாக வெட்டப்பட் டார்கள். (ஆதாரம் - Christopher Tyremen, Gods War, Page-102)

முதல் சிலுவைப்போரில் *1099*இல் ஜெரூசலம் சிலுவைப் போர்வீரர்களிடம் சிக்கியது. அப்போது சிலுவைப் போரில் புகழ்பெற்ற ட்ரான்கிரட் (Trancred) என்ற மன்னன் முஸ்லிம்களுக்கோர் வாக்குறுதியைக் கொடுத்தான். அது, ஆயுதங் களைப் போட்டுவிட்டு அல் அக்ஸா பள்ளி வாசலுக்குள் தஞ்சம் புகும் முஸ்லிம்களை உயிருடன் விட்டுவிடுவேன் என்பதாகும்.

ஆனால், தன் வாக்குறுதியை மீறி அத்தனை முஸ்லிம்களையும் கொலை செய்தான்.

(Source : Keren Amstrong, Page-178, Holy War)

கிருஸ்தவர்களின் வாக்குறுதி மீறல் தொடரும்.

(இன்ஷா அல்லாஹ்)

## அடிக்குறிப்பு

1) ரோபர்ட் கெற்றான்-ஐ போல் பலர் மேலை நாடுகளில் இஸ்லாத்தின்மீதும் பெருமானார் (ஸல்) அவர்கள் மீதும் புழுதியை வாரி இறைத்திருக்கின்றார்கள். பின்னர் அவர்கள் மனம் வருந்தி ருக்கின்றார்கள். ஜான் டேவை போர் என்பவர் இவரைப்போல், பெருமானார் (ஸல்) அவர்கள் மீது புழுதியை வாரி இறைத்தவர். பின்னர் இன்னும் அதிகமான ஆதாரங்களுடன் பெருமானார் (ஸல்) அவர்களை விமர்சிக்க வேண்டும், என முயற்சிகளை மேற்கொண்டார்.

அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகளில் பெருமானார் (ஸல்) அவர்களின் யதார்த்தக் குணங்களைக் கண்டுகொண்டார். மலைத்துப் போனார், பெருமானார் (ஸல்) அவர்களின் பொன்னரிய பண்பாடுகளைக் கண்டு இறுதியில் ஒரு நூலை எழுதினார். அதன் பெயர் "An Appology for Muhamed and the Kuran" முஹம்மத் (ஸல்) அவர்களும் திருக்குர்ஆனுக்கும் ஒரு மன்னிப்பு.

நூலில் பெருமானார் (ஸல்) அவர்களின் அரிய குணங்கள் பலவற்றைச் சுட்டிக்காட்டு கின்றார். அவர்களின் லட்சியப் பயணத்தின் முக்கியத் திருப்பங்களையும் கோடிட்டுக் காட்டுகின்றார்.

ஆக பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கை அழகு, அல்லாஹ் அவர்களை அழைத்துக் கொண்ட நிலையிலும், ஓராயிரம் ஆண்டுகளுக்குப் பின்னரும் மன்னிப்புக் கேட்க வைக்கின்றது. ராபர்ட் கெற்றான் போன்றவர்களின் விமர்சனங்கள், எந்தச் சலனத்தையும், இஸ்லாத்தின் வளர்ச்சியில் கொண்டு வந்ததில்லை என்பதை இன்று நாம் பார்த்து வருகின்றோம்.

2) ஒப்பந்தங்களை முஸ்லிம்கள் முறித்தார்கள் என்ற மேலைநாட்டவர்களின் குற்றச்சாட்டுகளில் எள் மூக்கின் முனைஅளவுகூட உண்மை இல்லை என்பதை உலகம் அறியும். கடுமையான சூழ்நிலைகளிலும், எதிர் தரப்பார் ஒப்பந்தங்களை மீறும்வரை, முஸ்லிம்கள் அவற்றை முறித்ததில்லை.

ஆனால், யூதர்களும், அமெரிக்கர்களும் 43,000 சர்வதேச ஒப்பந்தங்களை மீறி இருக்கின்றார்கள். முஸ்லிம்கள் ஒப்பந்தங்களை முறித்துவிட்டுப் போர்களிலேயே கவனம் செலுத்தினார்கள் என்பது ஜமுக்காளத்தில் வடிக்கட்டினப் பொய்.

பாலஸ்தீன மக்கள் விவகாரத்தில் யூதர்களும் அமெரிக்கர்களும் ஒப்பந்தங்களை முறித்தது மட்டுமல்ல, அந்த ஒப்பந்தங்களுக்கு நேர் எதிராகவே செயல்பட்டார்கள்.

அதே நேரத்தில் ஒப்பந்தங்கள் எதுவுமின்றி உதுமானிய கலீபாக்களும், ஸ்பெயின் நாட்டு இஸ்லாமிய ஆட்சியாளர்களும், யூதர்களை வாழ வைத்தார்கள். இந்த யூதர்கள் ஐரோப்பாவின் வெள்ளைக் கிறிஸ்தவர்களால் விரட்டியடிக்கப்பட்டவர்கள்.

பிற்றைநாள் வரலாற்று ஆய்வாளர்கள் இவற்றை வாகாகவே சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

கிருஸ்தவர்கள் எப்படியெல்லாம், எங்கெல்லாம் வாக்குறுதியை மீறினார்கள் என்பதில் பல புதிய தகவல்களை தன்னுடைய நூலில் தொகுத்து காட்டுகின்றார். ஜான் பெஃபர் அதில், ஒரு பகுதி இந்தத் தொடரில் உள்ளது.



# தமிழகமெங்கும் முஸ்லிம்களின் வீடுகளில் சட்ட விரோதமாக நடத்தப்படும் சோதனைகள்

## வழக்கறிஞர் கமருதீன் அவர்கள் வைகறை வெளிச்சம் YouTube சானலுக்கு அளித்த நேர்காணல்



வழக்கறிஞர் கமருதீன்

கடந்த மாதம் கோயம்புத்தூரில் கோட்டை ஈஸ்வரன் கோவில் அருகில் ஒரு கார் வெடித்து அதில் ஜமேஷா முபீன் என்பவர் இறந்துவிட்டார். இந்த வழக்கில் தமிழக அரசு வேகமாக செயல் பட்டு DGP நேரடியாக சென்று அந்த இடத்தை பார்வையிட்டு முதல்வர் தலைமையில் ஒரு கூட்டத்தை கூட்டி ஆலோசித்து, மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள NIAவிடம் இந்த வழக்கை ஒப்படைத்துவிட்டார்கள்.

இந்த சம்பவத்திற்கு பிறகு தமிழக பா.ஜ.க.வை சார்ந்தவர்கள், தமிழக உளவுத்துறையின் மீது ஒரு தவறான குற்றச்சாட்டை முன்வைத்தார்கள். தமிழக பா.ஜ.க.வினரின் இந்த குற்றச்சாட்டிற்கு பிறகு, தமிழகம் முழுவதும் பல மாவட்டங்களில், தினசரி தமிழக காவல்துறையினர் முஸ்லிம்களின் வீடுகளில் மட்டும் சோதனைகளை மேற்கொண்டு வந்தனர். இந்த சோதனைகள் தினசரி நாளிதழ்கள் மற்றும் தொலைக்காட்சிகளில் பரபரப்பு செய்தி களாக வெளியிடப்பட்டு வந்தன.

தமிழக காவல்துறையின் இந்த சோதனை களில் பல குளறுபடிகள் இருந்தன.

☛ Search Warrant இல்லாமலேயே பல இடங்களில் சோதனைகள் நடத்தப்பட்டுள்ளது.

☛ சில இடங்களில் Search Warrant னுடைய நகல்களை காண்பித்து சோதனைகளை மேற் கொண்டுள்ளனர்.

☛ சில இடங்களில் சோதனைகளை முடித்து விட்டு, “இந்த சோதனை நடவடிக்கையில் எதையும் கைப்பற்றவில்லை” என்று எழுதி தந்துவிட்டு சென்றுள்ளனர்.

☛ சில இடங்களில், செல்போன், பென்டிரைவ், லேப்டாப் போன்ற மின்னணு சாதனங்களை கைப்பற்றியதாக சொல்லியுள்ளார்கள்.

☛ கோயம்புத்தூர், கோட்டை ஈஸ்வரன் கோயில் அருகில் நடந்த கார் குண்டுவெடிப்பு சம்மந்த மான சோதனை என்று சில Search Warrantகளில் குறிப்பிட்டுள்ளார்கள்.

☛ NIA 2019ல் விசாரித்த ஒரு UAPA வழக்கி னுடைய எண்ணை குறிப்பிட்டு ஒரு மாஜிஸ்டி ரேடிடம் இப்போதைய Search Warrant-ஐ தமிழக காவல்துறையைச் சார்ந்தவர்கள் பெற்றுள்ளனர்.

☛ இங்கே நமக்கு எழும்பும் ஐயம் என்ன வென்றால், NIA வசம் ஒப்படைக்கப்பட்ட ஒரு வழக்கை சொல்லி, இங்கே இருக்கும் ஒரு நீதிபதியிடம் எப்படி தமிழக காவல்துறை ஒரு உத்தரவை பெற முடிகிறது என்பதே!

☛ இதில் இன்னும் ஒரு கொடுமையான விடயம் என்னவென்றால், அந்த Search Warrant பெற குறிப்பிடப்பட்ட வழக்கு 2019 கொச்சினை மையமாக கொண்ட வழக்கு.

☛ ஆதாவது 2022ல் கோயம்புத்தூரில் நடந்த குண்டுவெடிப்பு சம்பந்தமாக, 2019ல் கொச்சினில் நடந்த NIA கைவசம் உள்ள ஒரு வழக்கினுடைய எண்ணை குறிப்பிட்டு, Search Warrant உத்தரவை வாங்கி, இந்த இரண்டு வழக்கோடும் சம்பந்தப்

படாத ஒருவரின் வீட்டில் சென்று சோதனை யிட்டுள்ளனர் தமிழக காவல்துறையினர். அதுவும் இந்த உத்தரவின் மூலம் 11 பேர்களில் 8 நபர்களின் வீட்டில் தான் சோதனை நடத்தியுள்ளனர். ஒரே வழக்கோடு சம்மந்தப்படும் 11 பேர்களின் 8 நபர்களின் வீட்டில் மட்டும் சோதனைகளை நடத்தினால், மீதமுள்ள 3 நபர்களும் உஷாராகி விடமாட்டார்களா? இன்னும் அந்த மூன்று நபர்களின் வீட்டில் சோதனைகளை மேற்கொள்ள வில்லை தமிழக காவல்துறை.

☛ இப்படி ஒரு Search Warrantக்கு உத்தர விடுவதற்கு மாஜிஸ்டிரேட்டுக்கு அதிகாரம் இருக்கிறதா என்பது ஒரு மில்லியன் டாலர் கேள்வி. ஏனென்றால், NIA விசாரித்து கொண்டி ருக்கின்ற ஒரு வழக்கில், NIA தரப்பில் தான் Search Warrant கேட்கமுடியும். அதுவும் NIA நீதிமன்றங்களில்தான் கேட்கமுடியும்.

☛ ஆக தங்கள் அதிகார வரம்பில் வராத ஒரு வழக்கிற்கு, சம்மந்தமே இல்லாத நீதிமன்றத்தில் தமிழக காவல்துறை இந்த Search Warrant-ஐ வாங்கியது எப்படி?

☛ சில இடங்களில், SSI நீதிமன்றத்திற்கு கடிதம் எழுதியிருக்கின்றார். "நாங்கள் இந்த முகவரியில் உள்ள இந்த நபரின் வீட்டில் சோதனை நடத்த போகிறேன்" என்று. அந்த கடிதத்தின் நகலை காண்பித்து அந்த வீடுகளில் சோதனைகளை மேற்கொண்டுள்ளனர்.

☛ முத்துப்பேட்டை என்ற ஊரில் நான்கு வீடுகளில் சோதனைகளை மேற்கொண்டுள்ளனர். சோதனையின் போது கைப்பற்றப்பட்ட, செல் போன், பென்டிரைவ் போன்ற பொருட்களை, மறுநாள் திருத்துரைப்பூண்டி மாஜீஸ்டிரேட் டிடம் ஒப்படைத்தாக சொல்லியுள்ளார்கள். இந்த வழக்கோடு சம்மந்தமே இல்லாத ஒரு நீதிமன்றத்தில் இந்த பொருட்களை எப்படி ஒப்படைத்தார்கள்? அந்த நீதிபதி அதை எப்படி பெற்றுக்கொண்டார் என்பதும் நம் முன் இருக்கும் ஒரு விடை தெரியாத கேள்விகளாகும்.

☛ பொதுவாக இதுபோன்ற சோதனைகள் ரகசியமாகத்தான் நடத்தப்படும். ஆனால் தமிழக காவல்துறை நடத்திய இந்த சோதனைகளில், ஊடகங்களுக்கு முன்கூட்டியே தகவல்கள் அளிக்கப்பட்டுள்ளன.

☛ சோதனைகள் நடத்தப்படும் வீடுகளில்

## கோவை கார் சிலிண்டர் வெடிப்பு வழக்கில் பா.ஜ.க. தலைவர் அண்ணாமலையை இணைக்க வேண்டும் ஏன்?

கோவையில் நடந்த இந்த கார் குண்டு வெடிப்பு சம்பவத்தில், குண்டுவெடிப்பு நடந்த இடத்தில், சில கோலி குண்டுகளும், ஆணிகளும் இருந்ததாக தமிழக காவல்துறை சொல்லியது. அதன்பின் இந்த வழக்கை ழிமிகி வசம் ஒப்படைத்தது. இந்த நிலையில் மிறிஷி அதிகாரியாக இருந்து அந்த பணியை உதறித் தள்ளிவிட்டு பா.ஜ.க.வில் சேவையாற்ற வந்த அண்ணாமலை (தமிழக பா.ஜ.க. தலைவர்), ஒரு பத்திரிகையாளர் சந்திப்பில், அந்த ஆணிகளை யும்,கோலி குண்டுகளையும் தன்னுடைய சட்டை பாக்கெட்டில் இருந்து எடுத்து காட்டுகிறார்.

சாதாரண ஒரு கொலை வழக்கில், அந்த கொலைக்கு பயன்படுத்திய ஒரு ஆயுதம் ஒருவரிடம் இருப்பதை காவல்துறை அறிந்தால் என்ன செய்யும்? அந்த வழக்கில் அவனையும் இணைத்து விசாரனைக்குட்படுத்தும். அல்லது அந்த வழக்கோடு சம்மந்தப்பட்ட தடயங்களை அழித்தான் என்று "தடயங்களை அழித்த குற்றத்தில்" அவன் மீது வழக்கு பதியும்.

ஒரு IPS அதிகாரியாக இருந்த அண்ணா மலை, குண்டுவெடித்த இடத்தில் இருந்த கோலி குண்டு, ஆணி என்று தன்னுடைய சட்டை பாக்கெட்டில் இருந்து எடுத்துக்காட்டி ஊடகங் களில் பேட்டியளிக்கிறார். இதில் என்னவெல் லாமோ சந்தேகங்கள் எழுகின்றது மக்களுக்கு!

இந்த தடயங்களை அண்ணாமலைக்கு யார் கொண்டு வந்து கொடுத்தது?

இவர்களே அந்த ஆணிகளையும், கோலி குண்டுகளையும் போட்டுவிட்டு பின்னர் அதை எடுத்துவந்து தொலைக்காட்சி முன்பு பேட்டி கொடுக்கிறார்களா?

ஏன் இந்த விவகாரத்தில் காவல்துறை அல்லது NIAவால் அண்ணாமலை விசாரிக்கப் படவில்லை?

ஓரேநாளில் 43 வீடுகளில் சோதனை நடத்திய NIA, குண்டுவெடிப்பின் முக்கிய தடயங்களை வைத்திருந்த அண்ணாமலை யிடம் விசாரணை நடத்தாததின் மர்மம் என்ன?

மேற்கண்ட தகவல்கள் மூலம் இந்த குண்டு வெடிப்பு வழக்கின் விசாரணைகள் நேர்மையாக நடத்தப்படுகிறதா என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் இன்று எழுந்துள்ளது!

மூத்த வழக்கறிஞர்கள் பலரும் இதையே கூறுகின்றனர்.

யாரையும் உள்ளே அனுமதிக்கமாட்டார்கள். வழக்கறிஞர்களை கூட அனுமதிக்கமாட்டார்கள். ஆனால் தமிழக காவல்துறை நடத்திய இந்த சோதனைகளில், ஊடகத்துறையினர் அனுமதிக் கப்பட்டுள்ளனர். அவர்கள் சோதனைகளை வீடியோ பதிவும் செய்துள்ளனர்.

☛ NIA வழக்குகளில் சாட்சிகளாக இருந்த சிலர் வீடுகளிலும் சோதனை நடவடிக்கைகள் நடந்துள்ளது.

☛ இன்னும் சிலர் வீடுகளில், வெடிகுண்டு நிபுணர்கள், மோப்பநாய்கள் போன்றவைகளோடு சோதனைகள் நடந்துள்ளது.

☛ சோதனைகளின்போது, சில பொருட்களை கைப்பற்றி அதற்கு எழுத்துப்பூர்வமாக எதையும் அளிக்காமல், சம்மந்தப்பட்டவரை அலைக்கழித் துள்ளனர்.

☛ அக்கம், பக்கத்தினரிடையே, சோதனைகள் நடத்தப்படும் வீடுகளின் நபர்களைப் பற்றி, "இவர் குண்டுவெடிப்பு வழக்கோடு சம்மந்தப் பட்டவர்", "இவர் தீவிரவாதி" என்றெல்லாம் பொய்யை பரப்பியுள்ளது தமிழக உளவுத்துறை.

☛ தமிழகத்தின் NIAக்கான காவல் நிலையம் என்பது கடந்த சில மாதங்கள் வரை கிடையாது. கிளை அலுவலகம் தான் சென்னையில் இருந்தது. கடந்த ஒரு மாதத்திற்கு முன்புதான், NIAக்கான நேரடி காவல் நிலையத்தை தமிழக அரசு அங்கீ கரித்தது. இதற்கு பின்னர்தான் இந்த கோவை கார் குண்டுவெடிப்பு வழக்கு NIA வசம் ஒப்படைக்கப்பட்டது. அதன் பின் ஒரே நாளில் 43 இடங்களில் ஒரே நேரத்தில் NIA சோதனைகளை மேற்கொண்டது. ஆனால் ஆயிரக்கணக்கான காவல் நிலையங்களை கொண்ட தமிழக காவல் துறை, லட்சக்கணக்கான காவலர்களை கொண்ட தமிழக காவல்துறையால், ஒரே வழக்கோடு சம்மந்தப்படுத்தப்பட்ட 11 நபர்களின் வீடுகளில் ஒரே நேரத்தில் சோதனைகளை நடத்த முடியாத தன் மர்மம் என்ன?

☛ தமிழக காவல்துறை சோதனைகளை மேற்கொண்டதன் நோக்கம் என்ன? யாரேனும் ஏதாவது அபாயமான பொருட்களை வைத்திருப் பார்களா? அல்லது எலக்ட்ரானிக் சாதனங்களான செல்போன், லேப்டாப், பென்டிரைவ் போன்ற பொருட்களில் தவறான தகவல்கள் எதையேனும் வைத்திருப்பார்களா? என்று கண்டுபிடிப்பது தானே. அப்படியிருந்தால், ஒருவர் வீட்டில் சோதனையிடும் போது, மற்றொருவர் அதை அழித்திருந்தால் என்ன செய்வார்கள்? இது சட்டம் தெரியாத பாமரனுக்கு கூட தோன்றும் சந்தேகம். ஆக தமிழக காவல்துறை நடத்திய இந்த சோதனைகளின் நோக்கம் தான் என்ன?

மேற்கண்ட தகவல்களையெல்லாம் உற்று நோக்கும் போது, தமிழக காவல்துறை நடத்திய இந்த சோதனைகளின் நோக்கம் என்னவாக இருக்கும் என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடியும். தினசரி சோதனைகளை நடத்தி, அதை ஊடகங்களில் வெளியிடுவதன் மூலம், சகோதர சமுதாயத்தை சார்ந்தவர்களின் மத்தியில் முஸ்லிம்கள் குறித்து ஒருவித அச்சத்தையும், வெறுப்பையும் ஏற்படுத்த, அமைதி பூங்காவாக உள்ள தமிழகத்தில் ஒருவித பதட்டத்தை உருவாக்க தமிழக காவல்துறை திட்டமிட்டு செயல்பட்டிருப்பதாக தெரிகிறது

தற்போது ஆட்சியில் உள்ள திமுக அரசு ஒரு சமூக நீதிக்கான ஆட்சியமைப்பை செயல்படுத்தி வருகின்றது. சாதி, மத பேதமற்ற ஒரு அரசை நிர்வகித்து வருகிறது. இந்த அரசிற்கு எதிராக சிறுபாண்மை மக்களை திருப்புவதற்கான நோக்க மாகத்தான், தமிழக காவல்துறையின் இந்த சோதனைகள் மேற்கொள்ளப்பட்டதாக சந்தேகம் ஏற்படுகிறது.

ஏற்கனவே கள்ளக்குறிச்சி பள்ளி மாணவி இறந்தவிவகாரத்தில் நடந்த போராட்ட வழக்கில், தலீத் மக்கள் அதிகளவில் குறிவைத்து கைது செய்யப்பட்டனர். இந்த கைது நடவடிக்கைகள் தாழ்த்தப்பட்டவர்கள் மத்தியில் தமிழக அரசிற்கு அவப்பெயரை ஏற்படுத்தியுள்ளது. இப்போது இந்த சோதனைகளும் அதே நோக்கத்தோடு நடத்தப்படுவதாக தெரிகிறது.

தற்போதுள்ள டிஜிட்டர் யுகத்தில் இதுபோன்ற சோதனைகள் அவசியம் தானா? என்ற கேள்வியும் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. ஏனென்றால், ஒரு நபரை கண்காணிக்க ஏராள மான தொழில்நுட்ப வசதிகள் இப்போதுள்ளன. செல்போன், இண்டெர்நெட், சிசிடிவி கேம ராக்கள் மூலமாகவே கண்காணிக்க முடியும். இந்த டெக்னாலஜிகளை தமிழக காவல்துறை அதிகமாகவே வைத்துள்ளது. பயன்படுத்தியும் வருகின்றது. இப்படியிருக்க இதுபோன்ற ஒரு சோதனை நடவடிக்கைகள் ஏதோ ஒரு கெட்ட

நோக்கத்துக்காகத்தான் நடத்தப்படுவதாக தோன்றுகிறது.

ஆக இந்த விவகாரத்தில் தமிழக காவல்துறையின் அமைச்சராக பொறுப்பேற்றிருக்கக்கூடிய தமிழக முதல்வர் ஸ்டாலின் அவர்கள் தலையிட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இதுபோன்ற சட்டவிரோதமான சோதனைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இதில் ஈடுபட்ட காவல்துறை அதிகாரிகளை கண்டெடுத்து அவர்கள் மீது வழக்கு தொடரப்பட வேண்டும். அவர்கள் மீது விசாரணைகளை மேற்கொண்டு, தமிழக காவல்துறையிலிருந்து அவர்கள் அப்புறப்படுத்தப்பட வேண்டும்.

தமிழக காவல்துறை நடத்திய இந்த சட்ட விரோதமான சோதனைகளில், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும். அவர்கள் குற்றமற்றவர்கள் என்று ஊடகங்களில் செய்திகளை வெளியிட வேண்டும்.

இதனோடு இன்னொன்றையும் சொல்ல விரும்பகிறேன். இப்படி ஒரு வெடிகுண்டு சம்பவம் நடந்துள்ளது. அது குறித்து சோதனைகள் மேற்கொள்ளப்படுவதில் என்ன தவறு உள்ளது என்று சிலர் என்னிடம் கேட்கின்றனர்.

கோவை காவல்துறையினருடைய வரலாற்றை பற்றி நாம் தெரிந்துகொள்ள வெண்டும். 1990களில் கோவையில் செல்வராஜ் என்ற காவலர் கொல்லப்படுகிறார். "இந்து மதத்தை சார்ந்த இந்த காவலரை, முஸ்லிம்கள் கொன்றுவிட்டார்கள்" என்ற பொய்ப்பிரச்சாரத்தை பரப்பி, கலவரக் காரர்களை கொண்டு முஸ்லிம்களின் சொத்துக் களை அழித்தார்கள். கோவை காவல்துறையினரின் நேரடி பார்வையின்கீழ் இது நடந்தது. ஆனால் உண்மை என்னவென்றால், இறந்துபோன அந்த காவலர் செல்வராஜ் ஒரு கிருஸ்தவர்.

இப்படிப்பட்ட ஒரு மோசமான மனநிலை கொண்ட காவல்துறைதான், கோவை காவல் துறை. இந்த கோவையில் கடந்த காலங்களில் நடந்த குண்டுவெடிப்புகள், கலவரங்களை கவனத்தில் கொண்டு இன்று வரை கோவை மாவட்டம் தீவிர கண்காணிப்பில் உள்ளது. இப்படிப்பட்ட நிலையில் சமீபத்தில் பத்திரிகை களில் வெளிவந்த ஒரு செய்தியை நாம் கவனிக்க வேண்டும்.

திருச்சியை சேர்ந்த இரண்டு இளைஞர்கள் சமூக ஊடகங்களில் செய்திகளை போடுகிறார்கள் என்றும், அவர்களுக்கு நாங்கள் கவுன்சிலிங் கொடுக்க வேண்டும் என்றும், திருச்சி உளவு அதிகாரி சுரேஷ் என்பவர் அவர்களை சென்னைக்கு அழைத்து செல்கிறார். அழைத்து சென்று சட்ட விரோதமாக தடுத்து வைத்துக்கொள்கிறார். பின்னர் கோவை செல்வபுரம் காவல்நிலையத்தில் அவர்கள் மீது ஒரு பொய் வழக்கை பதிவு செய்கிறார். அவர்கள் இருவரும் கைது செய்யப் படுகிறார்கள். பின்னர் இருவர் மீதும் UAPA சட்டம் போடப்படுகிறது.

பின்னர் கோவை செல்வபுரம் காவல்துறை இந்த வழக்கை NIA வசம் ஒப்படைக்கு முயற் சித்துள்ளனர். இதற்கிடையில் உளவு அதிகாரி சுரேஷ் மீது ஆதாரங்களோடு புகார் அளித்துவிட் டனர் அந்த இளைஞர்களின் குடும்பத்தினர். இதனால் இந்த வழக்கை NIA எடுத்துக்கொள்ள வில்லை. இந்த வழக்கில் ஆறு பேர் கைது செய்யப்பட்டனர். அதில் ஒருவருக்கு ஆறு மாத கால சிறைவாசத்திற்கு பின்னர் சென்னை உயர் நீதிமன்றம் பிணை வழங்கியது. அந்த பிணை உத்தரவில், சென்னை உயர் நீதிமன்றம் தெளிவாக குறிப்பிட்டிருந்தது, "இந்த வழக்கில் யாரும் காயமடையவில்லை. குற்றம் நிகழவில்லை. காவல்துறையினரே ஒரு வாகன சோதனையை நடத்திவிட்டு, அப்போது இந்த இளைஞர்கள் அருவா வைத்திருந்ததாக கூறி கைது செய்து விட்டு, ஆயுத தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்து, பின்னர் UAPA சட்டத்தையும் சேர்த்துள்ளனர்" என்று.

ஆக 1990களின் இருந்த இஸ்லாமியர்களுக்கு எதிரான மனநிலையில், அதாவது முஸ்லிம்கள் மீது பொய் வழக்குப் போட்டு சிக்க வைக்க வேண்டும் என்ற சிந்தனையில் தற்போதுள்ள கோவை காவல்துறையினரில் சிலரும் செயல் பட்டு வருகின்றனர் என்பது இங்கே நமக்கு தெளி வாகிறது. (இந்த சதி செயலில் ஈடுபட்ட எந்த அதிகாரிகளின் மீதும் இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை)

இப்படிப்பட்ட சிந்தனையில் உள்ள கோவை காவல்துறையினர் தான் இந்த கார் குண்டுவெடிப்பு வழக்கை நான்கு நாட்கள் விசாரித்து, பின்னர் NIAவிடம் ஒப்படைத்துள்ளது என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

நமது நிருபர்




# நல்ல ஒழுக்கம் நம் குழந்தைகளுக்கும் தரும் நல்ல செல்வம்

## பெற்றோர்களின் கவனத்திற்கு

குழந்தைகளை நல்லொழுக்கமுடையவர்களாக வளர்ப்பதில் பெற்றோர்களின் பங்கு மிகவும் முக்கியமானதாகும். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்காக செல்வத்தை சேர்க்க வேண்டும் என்பதில் ஆர்வமாக உள்ளனர். தங்கள் பிள்ளைகளை படிக்க வைத்து உயர்ந்த வேலையில் நல்ல ஊதியத்தில் இருக்க வேண்டும் என்பதில் ஆசை கொண்டவர்களாக உள்ளனர். ஆனால், தங்கள் பிள்ளைகள் நல்லொழுக்கம் உடையவர்களாக இருக்க வேண்டும் என்பதில் கவனக் குறைவாக இருக்கின்றார்கள். நல்லொழுக்கமும், இறையச்சமும் இல்லாத கல்வியும், செல்வமும் எந்த பயனையும் அளிக்காது. நம்முடைய பிள்ளைகள் குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் நாளை மறுமையில் பெற்றோர்களுக்கும் பயன்தர வேண்டுமென்றால் இறையச்சத்தையும், நல்லொழுக்கத்தையும் பெற்றோர்கள் கற்றுக்கொடுக்க வேண்டும்.

முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

"ஒரு தந்தை தன் குழந்தைகளுக்கு நல்லொழுக்கத்தை விடச் சிறந்ததாக வேறு எதையும் விட்டுச் செல்வது கிடையாது" (திர்மிதி)

இன்றைய காலக்கட்டங்களில் பிள்ளைகள் வயது வரம்பிற்கு அப்பாற்பட்டு சிறு வயதில் இருந்தே தவறான பழக்க வழக்கங்களுக்கு அடிமையாகி உள்ளார்கள். மேற்கத்திய கலாச்சாரங்களில் மூழ்கிக் கிடக்கிறார்கள். இறைவனையும் அவன் மீது உள்ள அச்சத்தையும் இறைவனை நினைவுப்படுத்தும் காரியங்களில் தங்கள் பிள்ளைகளை பயிற்று வைக்க பெற்றோர் இதன் விஷயத்தில் கவனக் குறைவாக இருக்கின்றார்கள்.

முஹம்மத் நபி (ஸல்) கூறினார்கள் :

"உங்கள் குழந்தை ஏழு வயதை எட்டிவிடும் போது தொழுகையை நிறைவேற்றும்படி அவர்களை ஏவுங்கள். அவர்கள் பத்து வயதை எட்டிவிடும் போது தொழுகையை தவறவிடாமல் அவர்களை அடியுங்கள். இந்த வயதை அடைந்ததும் அவர்களின் படுக்கையை தனித்து அமையுங்கள்" (முஸ்லிம்)

சிறு வயது முதலே குழந்தைகளுக்கு தொழுகையை கற்றுக்கொடுக்க வேண்டும். அதன்மூலம் இறையச்சம் பயிற்சி அளிக்க வேண்டும்.

அல்லாஹ் திருமறையில் கூறுகிறான்

"நிச்சயமாக தொழுகையானது மானக்கேடான, கேவலமான செயல்களிலிருந்து மனிதனைப் பாதுகாக்கின்றது" (அன்கபூத் : 45)

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு ஒரு முன்மாதிரியாக திகழ வேண்டும். உண்மையென்னவென்றால் பிள்ளைகள் தங்கள் சிறு வயது முதலே பெற்றோர்களைப் பார்த்துதான் வளர்க்கிறார்கள். நாம் நன்மைகளை செய்யும்போது, அதைப் பார்த்து அவர்களும் அதை செய்வார்கள். அதேபோன்றே தீமைகளை செய்யும்போது அதை செய்வதற்கு துணிவார்கள். பயப்படமாட்டார்கள்.

முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

விளையாட்டிற்குக்கூட குழந்தைகளிடம் பொய் கூறாதீர்கள்.

"ஒரு குழந்தையை அழைத்து அக்குழந்தையிடம் நான் இன்னதை உனக்குத் தருவேன் எனக்


vaigarai velicham official

கூறுபவர். அதைத் தரவில்லையென்றால் அவர் அங்கே ஒரு பொய்யைச் சொல்லிவிட்டார் என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

பெற்றோர்களே! உங்களுடைய பிள்ளைகள் இந்த உலகிலும் நாளை மறுமையிலும் உங்களுக்கு பயனளிக்க வேண்டுமென்றால் அது உங்களின் நல்ல வளர்ப்பில்தான் உள்ளது. இல்லையென்றால் இந்த உலகில் மட்டுமல்ல நாளை மறுமையில்கூட நமக்கு எதிரானவர்களாக மாறிவிடுவார்கள். நம்மை படைத்த இறைவனிடம் நாங்கள் வழிகெட்டுப்போனதற்கு எங்கள் பெற்றோர்கள்தான் காரணம். அதனால் அவர்களை நரகத்தில் புகுத்திவிடு, எங்களை மன்னித்து சுவனத்திற்கு அனுப்பு என பெற்றோர்களுக்கு எதிராக மாறிவிடுவார்கள்.

"அந்த நாளில் மனிதன் வெருண்டோடுவான். தன் சகோதரனை விட்டும் தன் தாயை விட்டும், தன் தந்தையை விட்டும், தன் மனைவியை விட்டும், தன் மக்களை விட்டும், வெருண்டோடுவான். அன்று, ஒவ்வொரு மனிதனுக்கும் அவனவன் நிலையே போதுமானதாயிருக்கும்

(அபஸ 34,35,36,37)

முஹம்மத் நபி (ஸல்) கூறினார்கள் :


மனிதன் மரணமடையும் போது மூன்றினைத் தவிர பிற செயல்பாடுகள் அனைத்தும் அறுந்து விடுகின்றன. அவை

1) அவன் புரிந்த நிலையான தர்மம்

2) அவன் பரப்பிய பயனுள்ள கல்வி

3) அவனுக்காகப் பிரார்த்திக்கின்ற நல்லொழுக்கமுடைய பிள்ளைகள் (முஸ்லிம்)




சகோதர சமுதாயத்தினருக்கு இஸ்லாத்தை இதமாக எடுத்துரைக்கும் இனிய நூல் " இஸ்லாம் உங்கள் பார்வைக்கு".

இதன் ஆசிரியர் 'ஹம்முதா அப்துல் அத்தி' அவர்கள். மூத்த பத்திரிக்கையாளர் மு. குலாம் முஹம்மத் அவர்களின் தமிழாக்கத்தில் இந்நூல் மீண்டும் வெளியாகியுள்ளது.

29.12.2022 அன்று எளிய நூல் வெளியீட்டு நிகழ்ச்சியில் இந்நூலை பேராசிரியர். இல்யால் ரியாஜி அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்!


இவண்:

**வேர்கள் பதிப்பகம்**, சென்னை

தொடர்புக்கு: 7401213394, 8148129887

வாட்ஸ்ஆப் வழியாக
ஆர்டர் செய்ய : 9786214186

# மறதியின் நன்மைகள்



டாக்டர் **வி.எஸ்.நடராஜன்**
முதியோர் நல மருத்துவர்

மருத்துவ பகுதி

### மறதியை நேசிக்கும் மனைவி

எழுபது வயதைக் கடந்த முதிய தம்பதியர். கணவருக்கு டிமென்சியா நோய். சிகிச்சை அளித்தும் அதிகம் பயனளிக்கவில்லை. நிகழ்கால நினைவுகள் எல்லாம் மறந்துவிடுவார். ஆனால், கடந்த கால நிகழ்ச்சிகள், பசுமையாக இருக்கும். தன் மனைவி தனக்கு காபி கொடுப்பது, சாப்பாடு எடுத்து வைப்பது, உடை உடுத்திவிடுவது போன்ற எல்லாச் செயல்களையும் உடனே மறந்து விடுவார்.

அது மட்டுமல்லாமல் வீட்டுக்கு வருபவர்களிடம் தன் மனைவி தனக்கு காபியே கொடுப்பதில்லை, உணவும் பரிமாறுவதில்லை என்று சரமாரியாகப் புகார் செய்வார். மனைவியோ இவற்றையெல்லாம் காதிலேயே போட்டுக் கொள்வதில்லை. இதனால் உங்கள் மனம் சங்கடம் அடையவில்லையா?' என்று கேட்டதற்கு, அவரின் பதில் சற்று ஆச்சரியம் அளிப்பதாக இருந்தது. 'அவர் என்னை மறந்து இருக்கலாம், நான் மனைவி என்பதைக்கூட மறந்து இருக்கலாம் (நிகழ்கால மறதி - Memory Loss for Recent Events). ஆனால், அவர் என் பெயரை அடிக்கடிச் சொல்லி அழைப்பதும் (மனைவி என்று அறியாமல்) எங்கள் திருமண நிகழ்ச்சிகள், பல உறவினர்களின் பெயர்கள், முக்கிய குடும்ப நிகழ்ச்சிகளைப் பற்றி அவர் அடிக்கடி கூறும்போதும்

(இறந்த கால நினைவுகள் - Past Events) என் மனம் எவ்வளவு சந்தோஷப்படுகிறது தெரியுமா? இவருடைய மறதி நோயின்மூலம் பழைய நினைவலைகளில் நான் ஒரு சுகம் காண்கிறேன். அதுவே எனக்கு போதும்' என்றார். மறதியை நேசிக்கும் ஒரு வித்தியாசமான மனைவி இவராகத்தான் இருப்பார்!

வலியை மறக்க உதவிய மறதி மிதமான மறதி, மனிதனுக்கு எவ்வளவோ நன்மைகளைத் தருகிறது. மனிதன் தனக்கு தெரிந்தோ, தெரியாமலோ அதன்மூலம் பயனடைகிறான். என்னிடம் சிகிச்சை பெற்ற நோயாளி ஒருவர், மறதியின் மூலம் எப்படி வலியை மறந்தார் என்று இங்கே குறிப்பிடுகிறேன். என்னிடம் கடந்த இரண்டு ஆண்டுகளாக டிமென்சியாவுக்காக சிகிச்சை எடுத்துவருபவர் திரு.குப்புசாமி, வயது 74. கடந்த சில மாதங்களாக மறு ஆலோசனைக்கு எனது கிளினிக்குக்கு வரவில்லை. சமீபத்தில் என்னிடம் வந்தார். ஏன் கால தாமதம் என்று விசாரித்ததில் அவருக்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு அவர் முதுகில் அக்கி நோய் (Herpes Zoster) ஏற்பட்டு வலியினால் சற்றுச் சிரமப்பட்டு விட்டார். அதனால் மறு பரிசோதனைக்கு வரமுடியவில்லை என்றார்.

அக்கி ஓர் அம்மை சார்ந்த நோய். இளம் வயதில் இந்நோய் ஏற்பட்டால் அதிகத் தொல்லையின்றி உடனே மறைந்துவிடும். முதியோர்களுக்கு - முக்கியமாக நீரிழிவு உள்ளவர்களுக்கு இந்நோய் வந்தால் வலி தாங்க முடியாமல் மிகவும் சிரமப் படுவார்கள். இந்த வலி தாங்க முடியாமல் சிலர் தற்கொலைகூடச்செய்துகொள்வார்கள். ஆனால், என்ன ஆச்சரியம்! டிமென்சியா நோயிருப்பதால் அவருக்கு வலி அவ்வளவாகத் தெரியவில்லை. வழக்கம்போல்தான் இருந்தார்'. நான் இந்த விஷயத்தை அவரை அழைத்து வந்த மகனிடம் கூறினேன். அவரும் அதை ஒப்புக்கொண்டார்.

ஆம், டிமென்சியா, அக்கியின் வலியை ஓரளவுக்குக் குறைந்திருக்கிறது. இது நான் கண்கூடாகப் பார்த்த உண்மைச் சம்பவம். மறதி ஒரு சுகம் என்பது இவருக்குப் மிகவும் பொருந்தும் தானே!


vaigarai velicham official

தேசிய பாதுகாப்பு சட்டத்தில் பதிந்த வழக்கு தள்ளுபடி

# அதிகாரிகள் நிர்பந்தமே காரணம் ஐகோர்ட்டில் அப்பீல் செய்வேன்

## 18 லட்சம் அபராதம்
### விதிக்கப்பட்ட இன்ஸ்பெக்டர் பரபரப்பு பேட்டி

தர்மபுரி வெண்ணாம்பட்டி. வீட்டுவசதி வாரிய குடியிருப்பு பகுதியை சேர்ந்தவர் ரத்தினகுமார் (49). இவர் தற்போது விருத்தாசலம் ரயில் நிலையத்தில் இன்ஸ்பெக்டராக பணியாற்றி வருகிறார். தர்மபுரி டவுன் இன்ஸ்பெக்டராக 2012ல் பணிபுரிந்தவர்.

ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடிக்கு பணியிட மாற்றம் செய்யப்பட்டார். அப்போது கொலை வழக்கு ஒன்றில் ராஜா முகமது, மனோகரன் உள்ளிட்ட 6 பேர் மீது வழக்கு பதிவு செய்து தேசிய பாதுகாப்பு சட்டத்தின்கீழ் கைது செய்தார். ஆனால் அந்த வழக்கு பொய் வழக்கு என நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது.

இதையடுத்து பாதிக்கப்பட்ட இருவரும் மதுரை உயர் நீதிமன்றத்தில் நஷ்டஈடு கேட்டு, இன்ஸ்பெக்டர் ரத்தினகுமார் மீது வழக்கு தொடர்ந்தனர். வழக்கை விசாரித்த நீதிமன்றம், ராஜா முகமதுக்கு ரூ. 10 லட்சமும், மனோகரனுக்கு ரூ. 8 லட்சமும் ரத்தினகுமார் வழங்க வேண்டும் என கடந்த 2ம் தேதி தீர்ப்பு அளித்தது.

இந்நிலையில் தர்மபுரியில் இன்ஸ்பெக்டர் ரத்தின குமார் நிருபர்களிடம் கூறியதாவது:

நான் 2013ல் ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் இன்ஸ்பெக்டராக பணியாற்றினேன். அப்போது பாஜவை சேர்ந்த முன்னாள் நகர செயலாளரும், நகர்மன்ற உறுப்பினருமான தேங்காய் கடை முருகன் (40) என்பவர் குண்டு வீசி, வெட்டி கொலை செய்யப்பட்டார். இதுகுறித்து தேங்காய் கடை முருகனின் தம்பி சிவக்குமார் என்பவர், தனது அண்ணனுக்கும் ராஜா முகமது என்பவருக்கும் நிலம் தொடர்பாக பிரச்னை இருந்ததாகவும், அதனால் தனது அண்ணன் கொலைக்கு காரணம் ராஜா முகமது, மனோகரன் மற்றும் அடையாளம் தெரியாத 4 பேர் மீது புகார் அளித்தார். அதன்பேரில் 6 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கில் ராஜா முகமது மற்றும் மனோகரன் ஆகிய இருவரும் கைது செய் யப்பட்டனர்.

இந்த இருவரின் ஒப்புதல் வாக்கு மூலத்தின் அடிப்படை யில், ஒரு குறிப்பிட்டஅமைப்பை சேர்ந்த ரபீக் ராஜா மற்றும் சாகுல். அமீது ஆகிய 2 பேரையும் கைது செய்தேன். இந்த கொலையை

நேரில் பார்த்த சாத்தையா (60) என்பவர் என்னிடம் நேரடி சாட்சியம் அளித்ததோடு, நீதிமன்றத்திலும் ரகசிய வாக்குமூலம் கொடுத்துள்ளார். அடையாள அணிவகுப்பில் சிவக்குமார் மற்றும் சாத்தையா இருவரும் கொலையாளிகளை அடையாளம் காட்டினர்.

இந்த வழக்கில் ஒரு குறிப் பிட்ட அமைப்பு சம்பந்தப்பட்டிருப்பதாக எனக்கு ஏற்பட்ட சந்தேகத்தின் பேரில் கேரளா சென்று விசாரிக்க அனுமதி வேண்டினேன். ஆனால் உயர் அதிகாரிகள் அனுமதிக்காமல், கைது செய்த 4 பேரை தேசிய பாதுகாப்பு சட்டத்தில் கைது செய்ய நிர்பந்தத்தினர். தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது செய்ய, எந்த ஒரு இன்ஸ்பெக்டருக்கும் அதிகாரம் இல்லை. மாவட்ட கலெக்டர் முதல், கிராம நிர்வாக அலுவலர் வரை முழுவதுமாக அவர்களைப் பற்றி விசாரித்து, அவர்கள் கொடுக்கும் தகவல் அடிப்படையில் மட்டுமே கைது செய்ய முடியும். இப்படி அன்றைக்கு இருந்த உயர் அதிகாரிகளின் அறிக்கையின் அடிப்படையிலும், நிர்பந்தத்தின் அடிப்படையிலும் மட்டுமே நான் வழக்குபதிவு செய்து 4 பேரை கைது செய்தேன். இந்த வழக்கில் சிறப்பாக செயல்பட்டதாக, அன்றைக்கு எனக்கு பாராட்டும் கிடைத்தது.


ஆனால் இன்று தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது செய்ய என்னை நிர்பந் தித்த, அனைத்து அதிகாரிகளும் ஒதுங்கிக்கொண்டனர். உயர் அதிகாரிகளின் அழுத்தத்தால் கட்டளைகளுக்கு கீழ்படிந்த எனக்கு பணி உயர்வு, ஊதிய உயர்வில் பாதிப்பு ஏற்பட்டதோடு மட்டும் அல்லாமல், அபராதமாக இருவருக்கும் சேர்த்து ரூ. 18 லட்சம் வழங்க வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த அபராத தொகை குறித்து மதுரை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய உள்ளேன். நியாயமான முறை யில் பணியாற்றும் காவலர்களின் நிலைமை பெரும்பாலும் இவ்வாறே உள்ளது.


இதுபோன்று இன்னும் இருக்கும் ஆடிட்டர் ரமேஷ் உள்ளிட்ட 6 வழக்கின் உண்மை தன்மையை விசாரித்து, எனக்கு நீதி வழங்க வேண்டும். இந்த வழக்கில் சம்பந்தப்பட்டிருப்பது தற்போது மத்திய அரசால் தடை செய்யப்பட்ட ஒரு குறிப்பிட்ட அமைப்பை சேர்ந்தவர்கள்தான் என எனது வழக்கு நாட்குறிப் பில் அன்றே நான் பதிவுசெய்துள்ளேன். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# ஆனைமலையில் தாஃவா












vaigarai velicham official











ஆனைமலையில் சகோதர
சமுதாயத்தினருக்கு தாருல்
இஸ்லாமின் வாழ்வின் நோக்கம்
நோட்டீஸ் மற்றும் அல்குர்ஆன்
தமிழாக்கம் அன்பளிப்பாக
கொடுக்கப்பட்டது.

தகவல் :
அஸ்கர், ஆனைமலை



# அந்தப் பெண்ணாக நீங்கள் மாறினால்...?

அன்பார்ந்த வாசகர்களே!

அமெரிக்கா, ஐரோப்பா ஆகியன இன்று இஸ்லாத்திற்கு எதிரிகள் எனக் காட்டப்படுகின்றன. ஆனால் நிச்சயமாக இந்த இரண்டு நாடுகளிலுள்ள பெண்களையோ, ஆண்களையோ அதாவது மக்களை இஸ்லாத்தின் எதிரிகள் எனச் சொல்வதற்கில்லை. அவர்கள் உண்மையை ஏற்றுக் கொள்பவர்களாக நல்லதைப் போற்றுபவர்களாகவுமே இருக்கின்றார்கள்.

ஆகவே இன்று பொதுவாகச் செய்யப்பட்டு வரும் பிரச்சாரத்தை நாம் நம்ப வேண்டாம்.

உண்மையைச் சொன்னால் ஒவ்வொரு மனிதனிடமும் இந்த இயல்பு, இந்தத் தன்மை இருக்கின்றது. அல்லாஹ் தான் படைத்த அழகியப் படைப்பாம் மனிதர்களிடம் இந்தத் தன்மையை ஏற்படுத்தி வைத்திருக்கின்றான்.

அப்படியானால் இந்த அமெரிக்கா, ஐரோப்பா ஆகிய நாடுகளில் யார்தான் இஸ்லாத்திற்கு எதிரியாக இருக்கின்றார்கள்? அந்த நாடுகளின் தலைவர்கள். அந்த நாடுகளில் வாழும் யூதர்கள். இந்த யூதர்கள் சதா சர்வகாலமும் இஸ்லாத்திற்கு எதிராகவும், முஸ்லிம்களுக்கு எதிராகவும் எதையேனும் செய்து கொண்டே இருக்கின்றார்கள். நம் நாட்டு ஃபாசிஸ்டுகளுக்கும் உலகம் முழுவதுமுள்ள முஸ்லிம்களின் எதிரிகளுக்கும் திட்டம் போட்டுத் தருபவர்கள் இவர்கள்தாம் எதோ ஒரு வகையில் இந்த யூதர்கள்தாம் இந்த அமெரிக்கத் தலைவர்களையும் ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களையும் இயக்குகின்றார்கள். இன்னும் சொன்னால் இந்த அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளின் ஆட்சிச் சக்கரம் யூதர்களின் கைகளில் சிக்கிக்கொண்டது. அதேபோல் இந்தியாவிலும் அவர்களுக்கு நெருக்கமானவர்கள் ஆட்சிக்கு வந்துவிட்டார்கள். முஸ்லிம்கள் யூதர்களின் சதியில் அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.



vaigarai velicham official

ஆனால் உலகெங்கிலும் வாழும் முஸ்லிம்கள் அத்தனை அல்லல்களுக்கிடையேயும் சத்திய மார்க்கமாம் இஸ்லாத்தை அடுத்தவர்களுக்கு எடுத்துச் சொல்லும் பணியை மிகவும் அழகாகச் செய்து வருகின்றார்கள்.

அண்மையில் டைம்ஸ் என்ற சர்வ தேசப் பத்திரிகை குஜராத் இனப்படுகொலை மற்றும் உலகெங்கும் முஸ்லிம்களுக்கெதிராக நிகழ்த்தப் படும் அநியாயங்கள் இவற்றைப் பற்றி ஓர் ஆய்வை வெளியிட்டது.

அந்தக் கட்டுரையில் இப்படிக் குறிப்பிடு கின்றது:

"முஸ்லிம்களுக்கு நெருக்கடி அதிகமாக, அதிகமாக அவர்கள் தங்கள் மார்க்கத்தை நோக்கியே ஓடுகின்றார்கள்."

இதில் புதைந்து கிடக்கும் உண்மை என்ன வெனில் நம்மைத் தாக்கிடும் எதிரிகள் அவர்கள் தரும் துன்பங்களாலும் துயரங்களாலும் துவண்டு இஸ்லாத்தை விட்டு ஓடிவிடுவார்கள் என்றே எதிர்பார்க்கின்றார்கள். ஆனால் முஸ்லிம்கள் தங்கள் மார்க்கமாம் இஸ்லாத்தை நோக்கி ஓடுகின்றார்கள்.

இந்தத் தொல்லைகளுக்கிடையேயவும் இஸ்லாத்தை அடுத்தவர்களுக்கு எடுத்துச் சொல்லிடும் அழகிய பணியைச் செய்கின்றார்கள். இதனால் யூதர்களின் சதி, உலகில் வாழும் ஏனைய ஃபாசிஸ்டுகளின் அடாவடித்தனங்கள் இவற்றிற்கிடையேயும் மக்கள் இஸ்லாத்தில் தங்களை இணைத்துக்கொண்டே வருகின் றார்கள். அவ்வாறு தன்னை அண்மையில் இஸ்லாத்தில் இணைத்துக்கொண்ட சகோதரி ஒருத்தி விரைவில் இஸ்லாத்தைப் பற்றி ஒரு நூல் எழுதப் போகிறாராம்.

அந்தச் சகோதரியின் அனுபவத்தை இங்கே சுருக்கமாகத் தருகின்றோம், நீங்களும் அதுபோல் பணியாற்றிட வேண்டும் என்பதற்காக!

"நான் சுற்றுலாப் பயணிகள் அலுவலகம் சென்றிருந்தேன். நேரம் போக வேண்டுமேஎன அங்கிருந்த நூல் நிலையம் சென்றேன். நான் கை வைத்தவுடன் 'முஸ்லிம் பெண்களின் கையேடு' (Muslim Womens Hand book) என்ற நூல் என் கைகளில் பட்டது. எடுத்தேன். படித்தேன்.

என்னை அறியாமலே நான் அந்த நூலுக்குள் இழுத்துச் செல்லப்பட்டேன், படித்து முடித்தேன். அன்றிலிருந்தே இஸ்லாத்தை இன்னும் அதிகமாகப் படித்திட வேண்டும் என விரும்பினேன். நூல்கள் கிடைக்குமிடமெல்லாம் ஓடோடிச் சென்று இஸ்லாமிய நூல்களை வாங்கிப் படித்தேன். நிரம்பப்படித்துவிட்டேன் இஸ்லாத்தைப்பற்றி. என் முன்னே இப்போது இரண்டு உலகங்கள் தெரிந்தன.

ஒன்று மேலை நாடுகள், அவற்றின் கலாச்சாரம், வாழ்க்கை முறை என்பன. இரண்டு கீழை நாடுகள், அவற்றில் தலையாய மார்க்கமாக மிளிரும் இஸ்லாம்.

ஒரு கால். நான் பிறந்து வளர்ந்த மேலை நாடுகளில், இன்னொரு கால் இஸ்லாம் காட்டிய பாதையில்,

இந்த இரண்டையும் இணைத்திட நான் என்னால் இயன்றதையெல்லாம் செய்தேன். இந்த இரண்டு உலகமும் இணையும் என எதிர்பார்ப் பதற்கில்லை. காரணம் அவற்றின் வரலாறு கசப்பான போர்களைக் கொண்டு தொடங்கி இருக்கின்றது. நான் நம்பிக்கை இழக்கவில்லை. இஸ்லாத்தைப் பற்றிய என்னுடைய ஆராய்ச்சி யைத் தொடர்ந்தேன். நான் மெல்லிசையில் மயங்கிடுவதை என்னுடைய வாழ்க்கை வழிகளுள் ஒன்றாகக் கொண்டு வாழ்ந்தவள். ஆனால் இஸ்லாத்தை நான் ஆராய்ச்சி செய்ய முனைந்த பின்னர் நான் அந்த இசையை ஏனோ மறந்தே போய்விட்டேன். அர்த்தமற்ற வாழ்க்கையி லிருந்து பொருள் பொதிந்த வாழ்க்கைக்கு வந்து விட்டேன். ஆம்! நான் இஸ்லாமிய ஆராய்ச்சி யில் இறங்கிவிட்டேன். மெல்லிசை மயக்கத்தை விட்டுவிட்டேன். ஆனால் இன்னும் இஸ்லாத்தை முறைப்படி ஏற்றுக்கொள்ளவில்லையே!

இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வது என்பது ஒன்றும் பாரதூரமான பணி அல்ல. மாறாக அது மிகவும் சுலபமான ஒன்றுதான். எனினும் நான் அதை முறைப்படி செய்திட விரும்பினேன்.

ஒருநாள் என் வீட்டில் நடுவில் அமர்ந்து கொண்டு, "அல்லாஹ் ஒருவனைத் தவிர வேறு இறைவன் இல்லை. முஹம்மத் (ஸல்) அவர்கள் அவனுடையதூதர் ஆவார்கள்" என ஆங்கிலத்தில் சொன்னேன். ஏனென்றால் எனக்கு அன்று வரை அரபி மொழி அறிமுகமாகவில்லை.

என் மீது அலாதியான அன்பைப் பொழியும் என் தாய் அதிர்ந்து போனார்.

"என்ன சொன்னாய்?" என என்னைக் கேட்டார். "நான் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டேன்" என்றேன். "கிறிஸ்தவம்..?" என்றார், "என்னுடைய கேள்விகள் பலவற்றிற்கு இஸ்லாத்தில்தான் விடை இருக்கின்றது" என்றேன். என் தாயார் வாய்விட்டு ஆழத் தொடங்கிவிட்டார். "என்ன இது? பெண்களை முக்காடு போட்டுப் போர்த்தி மூலை யில் முடக்கிப் போடும் இஸ்லாத்தையா நீ ஏற்றுக்கொண்டாய்?" என்றார். "இஸ்லாம் பிற்போக்கானது. பெண்களைப் பொறுத்தவரை அது கொடுமையானது. இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டால் பெண்கள் தங்கள் உரிமைகள் அனைத்தையும் இழந்துவிடுகின்றார்கள். அந்த மதம் ஆண்களையும் பெண்களையும் பிரித்துப் பாகுபடுத்துவதற்காகவே வந்த மதம்." இவை என் தாயார் எடுத்து வைத்த வாதங்கள்.

என் தாயார் எடுத்து வைத்த இந்த வாதங்களில் மிகவும் அழுத்தமாகவே இருந்தார். அவர் என்னை எப்படியும் இஸ்லாத்திலிருந்து திருப்பிவிட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்.

காலங்கள் கடந்தன. என் அம்மாவுக்கும் எனக்குமிடையேயுள்ள இடைவெளி அகண்டு கொண்டே சென்றது. என்னால் என் அம்மாவிடம் பெண்களுக்கு இஸ்லாம் தந்திருக்கும் உரிமை களையும் பாதுகாப்புகளையும் முறைப்படி எடுத்துச் சொல்லிட இயலவில்லை. காரணம் எனக்கு இஸ்லாத்தை முழுமையாகத் தெரியாது. எனினும் தாயாருக்குப் பதில் சொல்லிட நூல் களைப் படித்தேன். ஒவ்வொரு புது நூலுக்குப் பிறகும் என்னால் ஒரு புது வாதத்தை இஸ்லாத் தின் சார்பில் எடுத்து வைத்திட முடிந்தது. எனி னும் என் தாய் இஸ்லாத்தின் மேல் கொண்டுள்ள வெறுப்பைக் குறைக்க முடியவில்லை.

நானும் ஒரு காலத்தில் இஸ்லத்தையும், முஸ்லிம்களையும் இப்படித்தான் வெறுத்தேன், என்னைப்போல் இஸ்லாத்தைப் படிக்கத் தொடங்கினால் என் தாயாருக்கு என் மேல் உள்ள கோபம் அகலும் என உறுதியாக நம்பினேன்.

என் தாயாருக்கு "தொடக்க நிலையில் இருப்பவர் களுக்கு இஸ்லாம் (Islam for Beginners) என்ற நூலை விலைக்கு வாங்கிக் கொடுத்தேன். ஆனாலும் அம்மா அசையவில்லை.

இப்போது நான், ஆபாசமான ஆடைகளால் அடுத்தவர்களின் இச்சைகளைத் தூண்டும் அரைகுறை ஆடைகளை மாற்றி உடலை முழுமை மறைக்கும் இஸ்லாமிய ஆடைகளை அணிந்தேன். அத்தோடு தலையையும் மறைத்திடத் தொடங்கி னேன். மொத்த குடும்பமும் எனக்கெதிராகப் படை திரண்டுவிட்டது

என் தாயார் தாய்க்கு மகள்மேல் உரிமை களைப் பற்றிப் பேசி பேசினார் என்பதைவிட ஒரு வக்கீலை மாறி வாதங்களை எடுத்து வைத்தார்.

என் தாயாரைப் பொறுத்தவரை நான் வழி கெட்டுப் போய்விட்டேன். என்னைப் பொறுத்த வரை நான் நேர்வழிய கண்டுகொண்டேன்,

என் தாயார் என் குடும்பத்திலுள்ள அத்தனை பேரையும் அழைத்து வந்து என்னை இஸ்லாத்திலிருந்து திருப்ப முயன்றார். இயலவில்லை. என்னை என் வீட்டிலேயே அந்நியராக நடத்தினார்.

**காலங்கள் நகர்ந்தன. வீட்டில் நடந்த அமளிகள் அடங்கின. இப்போது எல்லோரும் என்னிடம் இஸ்லாத்தைப் பற்றிய ஐயங்களை கேட்டு தெளிவுகளைப் பெறுகின்றார்கள்.**

**நான் இஸ்லாத்தைப் பற்றிய நூல் ஒன்றை எழுதிக் கொண்டிருக்கின்றேன். அது மேலைநாடுகளையும், கீழை நாடுகளையும் அதாவது ஐரோப்பிய நாடுகளையும் இஸ்லாத்தைத் தலையாய மார்க்கமாகக் கொண்ட கீழை நாடுகளையும் ஒன்றாக இணைக்கும் என நம்புகின்றேன்.**

**இன்ஷா அல்லாஹ்.**

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001. Editor M. Gulam Mohamed. Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFFSET PRINTERS,** 19/1, 21,2, Kitabath Khan Bhadur Street, chennai - 600 002